1471

[தொ]குதி 17] பங்குனிமீ :: March, 1925 [பகுதி 6

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு ...	185
பூர்வீக இந்தியாவில் கணிதசாஸ்திர ஞானம் ...	186
காளிதாஸ மகாகவி	188
ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்	190
மின்சாரப் பிரவாகம்	192
திருவையாற்று ஒலோகமாதேவீச்சுர சரிதக் குறிப்புகள்	195
தென்னிந்திய நாகரிகத்திற்கும் இலக்கியத்திற்கும் தமிழ்ப்பாஷை புரிந்த உதவிகள் ...	199
ஞானசௌந்தரி அல்லது சுபாங்கியின் சுயம்வரம் ...	201
சிறுவர் ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	212
மார்க்கண்டேயன் (நாடகம்)	214
வர்த்தமானக் குறிப்புகள்	216

சித்திரப்படம்

பெரிய தேர், திருவாரூர்.

OFFICE OF THE ... 27 SEP ... MADRAS

டட
ஜு 211, NO8VB.
ஙஜ. 17.6.
218377

[விவேகபோ]தினி சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனமாய்த் தரப்படும்.

பலத்தைக் கொடுக்கும் பால் கஞ்சி

வினோதமான பெயர்களுடன் விற்கப்படும் பேடெண்ட் ஆகாரங்களைக் காட்டிலும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். மேலானதும், சுத்தமானதுமான ஆடை நிறைந்த பாலுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கோதுமையைக் கலந்து சாஸ்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டதை குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் அதிக பலத்தைக் கொடுக்கும்படி சீர்படுத்த முடியும்.

50-வருஷ காலமாய் குழந்தைகளையும் நோயாளிகளையும் போஷிப்பதில் பிரசித்தி பெற்ற நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestles Milk Food) உயர்ந்த பாலினாலும், கோதுமையினாலும் அதிக உருசிகரமான கஞ்சியாக வேண்டியதற்குரிய சர்க்கரை சேர்த்து செய்யப்பட்டது. அதை எல்லோரும் ஆவலுடன் உட்கொண்டு விருத்தியடைவார்கள்.

அது எலும்பு, சதை இவைகளை விருத்திபண்ணி அஜீர்ணம் முதலிய வயிற்று நோய்களைத் தடுக்கிறது. அது முழு பால் ஆகாரம் மாத்திரம் அல்ல. அது குழந்தைகளை தன்னுடைய ஜீர்ண சக்தியினாலும், பலத்தைத் தரும் குணத்தினாலும், பேதி இன்னும் இதர வியாதிகளிலிருந்து தடுக்கிறது.

சீக்கிரமாய் ஜீர்ணமாவதினாலும், களைத்து மெலிந்துபோன நரம்புகளுக்கும், சதைகளுக்கும் வேண்டியவளவு புஷ்டியைக் கொடுப்பதினாலும நோயாளிகளும், கிழவர்களும் நெஸ்லேஸ் பால் ஆகாரத்தினால் சுகத்தை யடைகிறார்கள். நெஸ்லேஸ் பால் ஆகாரத்தின் (Nestles Milk Food) ஒவ்வொரு வேளை ஆகாரமும் முந்தியவேளை ஆகாரங்களினால் ஏற்பட்ட வலுவை விருத்தி செய்கிறது. அது தேக ஆரோக்கியத்தையும் வலுவையும் உண்டுபண்ணுகிறது.

இந்த ஆகாரத்திலேயே பால் சேர்ந்திருப்பதால் இன்னும் பால் சேர்க்கவேண்டியதில்லை. முதலில் கொடுக்கும் விலையைத் தவிர வேறு செலவு கிடையாது. அதுவும்

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX NO 396,
CALCUTTA.

உயர்தர நாவல்! ருசிகரமான நாவல்!! உயர்தர நாவல்!!!

சிவகுமாரன்

அல்லது

கொலைஞன் யார்?

ஒரு துப்பு அறியும் இனிய தமிழ் நாவல் ❀ விலை ரூ. 1

OFFICE OF THE REG... 27 SEP 192 MADRAS

விஷய அட்டவணை

1. வறுமை கொடிதே!
2. கிழவனுக்கு வாய்த்தாளே குமரி!
3. பங்கஜத்தின் பெருமுயற்சி
4. பழைய நட்பு
5. காமப் படுகுழி
6. உயிலின் சாக்ஷிகள் யார்?
7. கயவனறிந்த இரகசியம்
8. கயவன் காதல்
9. பெண்ணின் சூழ்ச்சி
10. உன்னைப்போல் ஸ்திரீயுமுண்டோ!
11. அடே பாவி! இப்படியாக்கிவிட்டாயே!
12. அவரிடம் உனக்கு ஏன் பயம்?
13. சிவசிவா! விறைத்த பிணத்துக்கு உயிரா?
14. துர்மரண விசாரணை
15. வாரண்டு எங்கே?
16. கண்டிப்பாய் மரண தண்டனைதான்!
17. விஷ மருந்தென எழுதப்பட்ட துண்டுக் காகிதம்!
18. செப்டம்பர் மாதம் நாலாந் தேதி
19. விஷம் வாங்கினது பங்கஜந்தான்
20. குற்றவாளி நான்தான்! சிவகுமாரனல்ல!
21. இதென்ன மாயம்? என் மேஜையிலா?
22. நானே குற்றவாளி! அவரல்ல!
23. ஐயையோ! நான் அதை எப்படிச்சொல்வேன்?
24. அந்த உயில் உனக்கு எப்படிக் கிடைத்தது?
25. அவனை உடனே மீட்கும் வழியைப் பார்!
26. துராசையினால் இக்கதிக்கு ஆளானேன்!
27. அப்படியா சமாச்சாரம்?
28. தலைவன் தலைவியை அடைதல்

பசிப்பிணியினால் வருந்தித் தியங்கிய தனது பெற்றோரையும் அவர்களது பெரிய குடும்பத்தையும் அத் துயரத்தினின்றும் எப்படியேனும் கரையேற்ற வேண்டுமென்ற மேலான நோக்கங்கொண்ட இதன் கதாநாயகி, தன் இளமைப்பருவ முதல் தன் நாயகனைக் கருதிக் காதலித்து வந்த கதாநாயகன் அந் நோக்கத்தைப் பூர்த்தி செய்யவல்ல தனவந்தனா யிராததனால், தான் பிறந்த குடும்பத்தைக் காப்பாற்ற தன் வாழ்க்கையைப் பாழாக்கிக்கொள்ளத் துணிந்து, தன் காதலனை பொறுத்து தனவந்தனான ஒரு தொண்டு கிழவனை மணந்து கொள்ளுகிறாள். அக்கிழவன் மரிக்குந் தருணத்தில் அவள் புனர்விவாகஞ் செய்துகொள்ளாத வரையில்தான் அவனது அளவற்ற தனத்தை அவள் அனுபவிக்கலாமென்று ஒரு மரண சாசனம் எழுதி வைத்ததாகக் கேட்ட அவள், அக்கிழவனிறந்து, தன் காதலனைத் தான் மணந்து கொள்ளச் சமயம் வாய்த்ததைக் குறித்துச் சந்தோஷமடையாமல், செல்வத்தை யனுபவித்த தோஷத்தினால் செல்வத்தில் ஆசையுற்று, அம்மரண சாசனத்தை மறைப்பதற்காக அக்கிழவனது வக்கீலைத் தான் மணந்துகொள்வதாக வாக்களிக்கிறாள். பொருளாசையினால் பிடிக்கப்பட்ட மற்றொருவனால் அவ் வக்கீல் கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பச் சாக்ஷியத்தினால் கதாநாயகன் கதாநாயகி இருவரும் அக் கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டுக் கைது செய்யப்படுகிறார்கள். இருவரும் ஒருவரையொருவர் சந்தேகித்து ஒருவரையொருவர் காப்பாற்றுவதற்காக, தாமே அக் கொலையைப் புரிந்ததாக நியாய சபையிற் சொல்லுகிறார்கள். கதாநாயகன்தான் அக் கொலை புரிந்தவன் என்று நியாய சபையார் நிச்சயித்து அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகுந் தருணத்தில், அவனது சிநேகிதனொருவன் உண்மையான குற்றவாளியைப் பிடித்துவந்து நியாய சபையில் நிறுத்தி கதாநாயகனைக் காப்பாற்றுகிறான்.

இப்புத்தகத்தின் விலை ❀ ரூபா ஒன்றே

விலாசம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

EXERCISE NOTE BOOKS

BOUND NOTE BOOKS

ACCOUNT BOOKS

We supply, Exercise Note-Books 40 Pages, 64 Pages, 80 Pages—Students' Note Books, Half-Quire—One quire—Two quires according to customers' requirements, Graph Note Books, Drawing Note Books, Map-Drawing Note Books with School Name for large orders. We also supply Book-Keeping Account Books. Orders solicited. Satisfaction guaranteed. Favourable terms.

218377

Address :— THE ALLIANCE CO.,

MYLAPORE, MADRAS.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேபிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனா

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேபிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடாலாகும் அஜீர்ணம், பலஹீனம்; குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

இதுவரையில் வெளிவராதது

முருகவேள் பனுவல் திரட்டு

சுப்பிரமணிய பக்தர்கள் பாராயணம் செய்தற்குரிய மிகச் சிறந்த நூல்.

இதில் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர்கவி வெண்பா, திருமுருகாற்றுப்படை, முத்துகுமாரசாமி பிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதி முறை, திருத்தணிகை சந்நிதி முறை, கந்த புராணம், தணிகை புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப் பெற்றது.

ஸ்டிப் பவுண்டு அணு 12 : : கலிகோ பவுண்டு ரூ. 1

விலாஸம் :—மானேஜர், முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

OFFICE OF THE REGIST[illegible]
27 SEP 19[illegible]
MADRA[illegible]

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினால் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் $2\frac{1}{2}$ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில் ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1 நெ. பெரிய செட்	1-க்கு	ரூ. 5 0 0
2 நெ. மத்திம செட்	1-க்கு	ரூ. 3 0 0
3 நெ. சிறிய செட்	1-க்கு	ரூ. 2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனம்.

Balajee & Co., Silk Merchants,
Benares City.

(A. No. 2700)

ஷண்முகம்

மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயு மிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அணா. **5** பலம் **15** அணா.

ஆர். கே பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அணா **4.**

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

உன் சுகத்திற்காக கவனி

உனக்கு பசிதீபன மில்லாவிட்டாலும் சரி, நீ எலும்பும் தோலுமாய் இளைத்துப்போயிருந்தாலும் சரி, உன்னுடைய கண்கள் குழிவிழுந்திருந்தாலும் சரி, உன்னுடைய மூளை பலயீனமடைந்து அதனால் நீ ஞாபகசக்தி குறைவடைந்திருந்தாலும் சரி, நீ மலச்சிக்கலினால் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தாலும் சரி, உன்னுடைய தேகத்தில் பலமில்லாவிட்டாலும் சரி, இன்னும் இதர தொந்திரவுகளை யெல்லாம் எங்கள்

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வேரோடு களைந்துவிடுமென்று அறிவிக்கிறோம். மேற்படி மாத்திரைகள் சென்ற 42-வருஷங்களாக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளை உபயோகித்த சொற்பகாலத்தில், உனக்கு தூக்கத்தையும் பலமான ஞாபக சக்தியையும், அதிக பலத்தையும் கொடுக்கும்.

32-மாத்ரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. **1**. கேட்போருக்கு கேட்லாக் இனாம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்நிக்ரக ஔஷதாலயம், போஸ்டு பாக்ஸ் நெ. 1252, பிராட்வே, மதராஸ்.

Please note the Price!!

22ct. Rolled Gold

WRIST WATCH Rs. 12-8



Small Size and handy Similar to an eight anna coin, assorted fancy mirage bezel shapes, enamel dial with clear figures stamped inside the case as "Guaranteed for Five Years" by the makers, Highest standard with Swiss mechanism with hinged back. Complete with fine strap Rs. 12-8-0:

18 ct. Rolled Gold Wrist Watch 3 years Guarantee Rs. 7.

புதிய மாதிரி !!

நூதனமானது !!!



உயர்ந்த வால்நட் கேஸில் செய்யப்பட்ட

ஆபீஸ் கிளாக் - ரூபா 5.

இந்த ஆபீஸ் கிளாக் பெயர் பெற்ற கெடியார கம்பெனியாரால் செய்யப்பட்டு எங்களால் வரவழைக்கப்பட்டது. பார்வைக்கு மிக்க அழகாயும், சுவற்றில் மாட்டுவதற்கு மிக்க ரம்மியமாக இருக்கிறது. எல்லா விடங்களிலும், கவர்ன்மெண்டு லோகல்பண்டு, முனிசிபல், மற்ற வியாபார ஆபீஸ்களில், இக்கெடியாரம் (பிரான்ஸ் தேசத்தின் ஆபீஸ் கிளாக்கை) சந்தோஷத்துடன் உபயோகித்து வருகிறூர்கள். முந்துங்கள் !!

5-வஷரும் உத்திரவாதம். விலை 1-க்கு ரூ. 5

ஜெர்மன் "பீ" டைம்பீஸ் ரூ. 2-8-0. 18-காரட் ரோல்ட்டு கோல்ட்டு கைகெடியாரம் ரூ. 7. 22-காரட் ரோட்டு கை கெடியாரம் ரூ. 12-8-0.

விலாஸம்:—காப்டன் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

விவேக போதினி

பயிண்ட்செய்த தொகுதிகள்

இப்பத்திரிகை ஆரம்பமான 1908-ம் வருஷம் முதல், இதுவரை பிரசுரமாயுள்ள 16-வருஷ சஞ்சிகைகளையும் வருஷவாரியாக அழகாய்ப் பைண்ட் செய்து, அந்தந்தத் தொகுதிக்குரிய விஷய அட்டவணையும் சேர்த்திருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் பொன்னேபோல் போற்றத்தக்க மிகவும் அருமையான விஷயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு தொகுதியின் விலை ரூ. **6.** **16**-வருஷத் தொகுதிகளையும் சேர்த்துவாங்கும் சந்தாதார்க்கு ரூ. **80**-க்குக் கொடுக்கப்படும். ஒரே தடவையில் முழுப்பணத்தைச் செலுத்தமுடியாதவர்கள், பல தவணைகளில் பணத்தைச் செலுத்தலாம். இதை நேயர்கள் கவனிக்க. தங்கள் சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிராத 17-ம் தொகுதி சந்தாதார்க்கு ரூ. 1—8—0 விலையுள்ள புத்தகங்கள் இனமாய்க் கிடைக்கும்.

சந்தா நேயர்களுக்கு

17-ம் தொகுதி முதல், ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகம் அல்லது புத்தகங்கள் சந்தாதார்க்கு இனமாய்த் தருவதால், மற்றைபடி புத்தகங்களின் விலையில், எவ்வித சகாயமும் செய்யமுடியாததற்கு நேயர்கள் மன்னிப்பார்களாக. சந்தா நேயர்கள் தாங்கள் கடிதம் எழுதும்போதும், சந்தாத்தொகை அனுப்பும்போதும், தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடுதல் மிக்க அவசியம். ஏற்கெனவே சந்தாத் தொகையை அனுப்பியிருக்கும் நண்பர்கள் ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்களை சீக்கிரம் தருவித்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

காரியஸ்தர்,

விவேக போதினி காரியாலயம்.

சந்தாதார்க்கு

விசேஷ அறிவிப்பு!!

17-ம் தொகுதியின் வருஷ சந்தாவாகிய ரூ. **5**-யும், மணியார்டர் செய்தனுப்புவோருக்கு, ரூ. **1-8-0** விலையுள்ள புத்தகமோ அல்லது புத்தகங்களோ, இனமாய் அவர்களுக்கு அனுப்பப்படும். புத்தக ஜாப்தாவுக்குப் அடுத்த பக்கம் பார்க்கவும். ரூ. **1-8-0** விலையுள்ள புத்தகங்களை அனுப்ப ஏற்படும் தபாற்செலவு சந்தாதாரரைப் பொறுக்கும். அச்செலவு எவ்வளவென்பதை புத்தகங்கள் அல்லது புத்தகம் அனுப்பியவுடன் தெரிவிக்கப்படும்.

ரூ. **1-8-0** க்கு அதிக விலையுள்ள புத்தகங்களுக்கு ஆர்டர் செய்தாலும், வி. பி. செய்கையில் ரூ. **1-8-0** கழித்து பாக்கித் தொகைக்கே வி. பி. செய்தனுப்பப்படும். நேயர்கள் இதை உடனே கவனித்து ஆர்டர்கள் அனுப்புவார்களாக.

உயர்தரமான தமிழ்ப் பிரசுரங்கள்

		ரூ.	அ.	ப.
ஷண்முக விஜயம் (படங்களுடன்)		0	12	0
ஆரியமத உபாக்கியானம், முதற் பாகம்	(படங்களுடன்)	0	8	0
ஆரியமத உபாக்கியானம், 2-ம் பாகம்	,,	0	10	0
ஸ்ரீமத் ராமாயண ஸாரம்	,,	1	0	0
ஸ்ரீமத் பாரத ஸாரம்	,,	1	2	0
ஸ்ரீமத் பாகவத ஸாரம்	,,	1	2	0
பஞ்சரத்தினம்	,,	0	12	0
மாகதவல்லி	,,	0	12	0
இயற்கை அற்புதங்கள்	,,	0	10	0
ராஜம் ஐயர் சரிதை	,,	0	8	0
முரளீதரன்	,,	0	10	0
வியாஸ விதானம்	,,	0	12	0
ஐரோப்பிய மஹா யுத்தம்	,,	1	4	0
திருமூலர் திருமந்திரம்	,,	2	4	0
பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம்	,,	2	4	0
பீஷ்மர் சரித்திரம்	,,	0	6	0
குஹன் சரித்திரம்	,,	0	4	0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி		1	0	0
தனபாக்கியம் அல்லது ஓர் அதிருஷ்டவதியின் சரித்திரம்	,,	2	0	0
ஷண்முகசுந்தரம் அல்லது காதல் திறம்	,,	2	0	0
தஞ்சைநாயகர்தாழ்வு அல்லது விதியின் வலிமை	,,	1	0	0
பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி	,,	0	12	0
ருக்மிணி அல்லது பதி பக்தி		0	8	0
ஸ்ரீமத் ராமாயண வினாவிடை (7-காண்டங்களும்)		1	8	0
ஸ்ரீமத் பாரத வினாவிடை (இரண்டாம் பாகம்)		1	4	0
ஷை (மூன்றாம் பாகம்)		1	4	0
சிவகுமாரன் அல்லது கொலைஞன் யார்		1	0	0
மோகனாங்கி அல்லது காணாமற்போன பெண்மணி		1	4	0
விஜயபாஸ்கரன் அல்லது ஒரு குற்றத்துக்கு ஒன்பது குற்றம்	புதிய பதிப்பு	(அச்சில்)		
மனுநீதிச்சோழன் (மனுமுறை கண்ட வாசகம்)		0	8	0
ஹனுமப் பிரபாவம்		0	3	0
புலவர் சரித்திரத்திரட்டு		0	12	0
ஸ்திரீரத்னம்		1	4	0
ஜகஜ்ஜோதி		0	10	0
பீமலா அல்லது திவான் மகள்		0	8	0
செல்வராஜன்		0	12	0
சற்குணசந்திரன்		0	10	0
பிரபாவதி		0	4	0
கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி		0	3	0
ஹிமார்ஜுனை		0	8	0
ஷேக்ஸ்பியர் சரிதையும், பெரும்புயலும்		0	8	0
நீலிவசீகரம்		0	10	0
பூதத்வ போதினி		0	10	0
தேடாத செல்வம்		0	3	0
கமலாகாந்தன் அல்லது பித்தன்		0	2	0
குண்டலகேசி அல்லது தற்கொல்லியை முற்கொன்றவள்		0	5	0
அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி (முதற் பாகம், நான்கு ஆப்டோன் படங்களுடன்)		1	8	0
டிரெயினிங் ஸ்கூல் ஆரம்ப கணிதம்		1	0	0
ஸ்ரீ பாலராமாயணம் (படங்களுடன்)		0	8	0
நால்வர் சரித்திரம்	,,	0	12	0
மைதிலி—மிகவும் உயர்ந்த நாவல்		0	12	0

விலாஸம்:—மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819)

THE MOST CHARMING PERFUME

OTTO DILBHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹாார் (ரேஜிஸ்டார்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹாார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு		(4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹாார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி **17**	இரக்தாக்ஷி௵ பங்குனி௴ :: **1925**-ம் ௵ மார்ச்௴	பகுதி **6**

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

சொல்லுகைக் கில்லையென்
றெல்லாமிழந்து சும்மாவிருக்கும்
எல்லையுட் செல்ல வெனை விட்டவா
விகல்வேலனல்ல கொல்லியைச்
சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோளண்ணல் வல்லபமே.

(ப-ரை.) இகல்வேலன்—வலிமை பொருந்திய ஞானசக்தியான வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கியவரும், நல்ல கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியை - இனிமையான கொல்லி என்னும் பண்ணுக்கிசையப் பேசுபவளும், கல்வரை கொவ்வைச் செவ்வாய் வல்லியை - மலையில் பிறந்தவளும் கோவைக் கனியைப்போல் சிவந்த திருவாய் மலரையுடையவளுமான வள்ளிநாயகியை, புல்கின்ற-சேர்கின்ற, மால்வரைத் தோள் அண்ணல்-பெரிய மேருமலையையொத்த புயங்களையுடைய பெரியோனுடைய, வல்லபம்-வல்லமையானது, சொல்லுகைக்கில்லை என்று-அநுபவித்ததைச் சொல்லுவது சாத்தியமன்று என்று சொல்லி, எல்லாம் இழந்து-சகல ஆசைகளும் சகலகுணங்களும் ஒழியப்பெற்று, சும்மா இருக்கும் எல்லையுள்-மனம், வாக்கு, காயம் இவைகள் செயலற்றிருக்கும் நிலைமையை, எனை செல்லவிட்டவா - அடியேனும் அடையும்படி செய்தது மிகவும் வியக்கத்தக்கதே.

(போ-வி.) வேடர்குலத்தில் வளர்ந்து தம்மையடையவேண்டுமென்ற ஆசையைத் தவிர வேறு யாதொரு குணமும் வாய்க்கப்பெறாத வள்ளிநாயகியைத் தடுத்தாட்கொண்டு, உலகத்திலுள்ள ஜீவர்கள் எல்லோரையும், அவர்களிடத்தில் யாதொரு குணமும் காணப்படாவிடினும், அவர்களுக்குத் தம்மை யடையவேண்டுமென்ற இச்சை மட்டுமிருக்குமேயாகில், தாம் வலியச்சென்று தடுத்தாள்வது நிச்சயமென்பதை விளக்கிக் காட்டியருளிய முருகக்கடவுளது வல்லமை பெரிதே யெனினும், அவா வல்லமையானது அவ்வாசையும் மிகுதியாக வாய்க்கப்பெறாத அடியேனும் அவரை யநுபவித்து உரைக்கவொணாத பேரானந்தத்தை யடைந்து, உலக ஆசைகள் ஒழிந்து பற்றற்றவனாகி, சகல குணங்களும் அழிந்து நிர்க்குணனாகி, உரை, செயல் உணர்வு கெட்டுச் சும்மாவிருக்கும் நிலைமையை யடையும்படி செய்தது ஆச்சரியத்தை விளைவிக்கிறது.

விவேக போதினி

தொ. 17] இரக்தாக்ஷி௵ பங்குனி௴ [ப. 6

பூர்வீக இந்தியாவில் கணிதசாஸ்திர ஞானம்

MATHEMATICS IN ANCIENT INDIA

பூர்வீக இந்தியாவில் ரேகாகணிதம், திரிகோணகணிதம் இவற்றின் ஞானம் விசேஷமாயிருந்தது என்பதுபற்றி மேனாட்டாரின்சாக்ஷியமே வியக்தமாயிருக்கிறது. ப்ரொபெஸர் வாலேஸ் என்பவர், "சூரிய சித்தாந்தக் கிரந்தத்திற் காணப்படும் திரிகோண கணிதக் கோட்பாடுகள் வெகுயுக்தி வாய்ந்தவை; கிரீஸ் தேசத்திலோ, அரேபிய நாட்டிலோ ஆதியில் ஏற்பட்டிருந்த ரீதிகளைக் காட்டிலும் வெகு வித்தியாசமானவை. ஐரோப்பிய நாடுகளில் சுமார் 200 வருஷங்களுக்கு முந்தின காலம் வரையில் ரேகாகணித வித்துவான்களுக்குத் தெரிந்திராத ரேகாகணித தத்துவத்தைச் சார்ந்ததாய் ஏற்படுத்தப்பட்ட திரிகோண கணிதக்கிரமமே ஆரியசித்தாந்தத்திற் காணப்படுகிறது. இதில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள வ்ருத்த பாகத்தின் மூலச்சா (Sines of arcs) என்னும் கணக்கிடும் ரீதியானது கிரேக்கர்கள் சற்றுமறியாத விஷயம். மூலச்சா தத்துவத்தை முதன்முதல் அரேபியர்கண்டு பிடித்தார்களெனச் சாமான்யமாய் நினைக்கப்படுகிறது. ஆனால் இவ்வித தகவலையும், இலக்க எழுத்துக்களையும் அரேபியர் ஹிந்துக்களிடமிருந்து கற்றறிந்திருக்க வேண்டுமென்பது மிகவும் சம்பாவிதமே" என்று அபிப்பிராயப் படுகிறார்.

எல்பின்ஸ்டன் என்னும் மஹா வித்துவானும் மேற்கண்ட அபிப்பிராயத்தை அனுசரித்து அடியில் வருமாறு கூறுகிறார். "ஆரியசித்தாந்தக் கிரந்தத்தில் அடங்கியுள்ள திரிகோண கணிதக் கிரமமானது, கிரேக்கர்களுக்குத் தெரிந்திருந்த விஷயத்தைக் காட்டிலும் வெகுவாறு மேலானதா யிருந்ததுமல்லாமல், இக்காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வரையில் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டிராத பிரமேயங்களின் விவரணமும் பொருந்தியுள்ளது."

இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்ட வானசாஸ்திரக் கணக்குக் குறிப்புகளைப் (Astronomical tables)பார்த்தால், ரேகாகணித சம்பந்தமான விசேஷ தத்துவங்களைக்கொண்டே அவை அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென ஏற்படுகிறது. கி.மு. 3000 வருஷங்களுக்கு முந்தியகாலத்திலேயே ஹிந்துக்கள் மேற்கூறிய வானசாஸ்திர ஸம்பவங்களை நேரில் பார்த்துக் கணக்கிட்டிருக்க வேண்டுமென்பது பலரின் அபிப்பிராயம். மற்றும் சிலர், இதற்கும் முந்திய பண்டைய காலத்திலிருந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகையால் வானசாஸ்திர ஆதாரமாயுள்ள ரேகாகணிதாதி தத்வங்களின் ஞானம், கிரீஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளில் மேற்கூறிய விஷயஞானம் உதிப்பதற்கு வெகு காலம் முன்னரே, இந்தியாவில் வெகுவாறு பிரசாரமாகி வளர்ந்தோங்கி யிருக்கவேண்டுமென்பது நன்கு ஏற்படுகிறது. இதுவிஷயமாய் கணிதவித்துவான் வாலேஸ் என்பவரின் அபிப்பிராயமாவது :—"ரேகாகணித ஸம்பந்தமாய் நாம் கவனிக்கத்தக்கது நிரம்ப இருக்கிறது. நவீன ரேகாகணித கிரந்தங்களில் காணப்படும் பிரமேயாதி தத்துவங்கள் பெரும்பான்மையும் இந்து ரேகாகணிதத்திலடங்கியுள்ளன. "நேர்கோணமுள்ள முக்கோணத்தின் (Right-angled triangle) அக்ஷகர்ணத்தின் வர்க்கமானது (Square on the hypotenuse) மற்றைய இரண்டு பாரிசக் கோடுகளின் வர்க்கங்களின் தொகைக்குச் சமானமாகும். இது இக்காலத்தில் ஸுப்ரஸித்தமான ஒரு ரேகாகணிதத் துருவம்; இதுவும், மற்றைய துருவங்களும் இந்து ரேகா கணித சாஸ்திரத்தில் அடங்கியுள்ளவை.

மேலும், இன்னுமொரு விசேஷமான பிரமேயமுண்டு; அதாவது ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களின் நீள அளவு தெரிந்தால், அவற்றைக்கொண்டு அம்முக்கோணத்தின் பரப்பின் (Area) பரிமாணத்தை அளவிட்டறியலாம் என்பது. இவ்வித தத்துவம் கிரீஸ் தேசத்து பூர்வீக ரேகாகணித பண்டிதர்களுக்குத் தெரிந்திருந்ததாக ஏற்படவில்லை.''

இந்தியாவில் கட்டட வேலைகளுக்கு ஆதாரமாயுள்ள பிரசித்தமான சுல்ப சூத்திரங்கள், கிறிஸ்து பிறப்பதற்கு 800 வருஷங்களுக்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று மேனாட்டாரும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். இவற்றைக் கொண்டு டாக்டர் தீபோ (Dr. Thibaut) என்னும் வித்துவான் வியக்தமாய் எடுத்துக் கூறியது கவனிக்கத்தக்கது :— இக்காலத்திய யூக்லிட் என்னும் ரேகாகணித புஸ்தகங்களுள் ஒன்றுவதில் 47-வது பிரமேயமானது (47th Proposition, Euclid, Book I) மேற்கூறிய நேர்கோண முக்கோணத்தின் அக்ஷகர்ன வர்க்கத்திற்கும், மற்றைய பக்கங்களுள் வர்க்கங்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் கூறுகிறது என்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம். இச் சம்பந்தத்தை முதன் முதல் பைதகோரஸ் (Pythagoras) என்னும் தத்துவசாஸ்திர வித்வான் கண்டுபிடித்து வெளியிட்டதாக ஒரு சம்பிரதாய அபிப்பிராயம் விளங்கிவருகிறது. இவ்வித அபிப்பிராயம் தவறு என்றும் பைதகோரஸ்ஸுக்குக் குறைந்தபக்ஷம் 200 வருஷங்களுக்கு முன்னரே இவ்வித தத்துவத்தை இந்துக்கள் கண்டறிந்திருந்தார்கள் என்றும் நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்த அபிப்பிராயமானது, மேற்கண்ட பைதகோரஸ் என்பவர் இந்தியர்களிட மிருந்தே மேற்சொன்ன ரேகாகணிதத் தத்துவத்தை அறிந்திருக்கவேண்டுமென்று வி. ஷ்ராடர்(V. Schroeder) என்னும் பண்டிதர் கொள்ளும் அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்துவதாகிறது.''

எல்பின்ஸ்டன் என்னும் மஹான் கூறுவதாவது:— ''இந்துக்களின் ரேகாகணித சாஸ்திர சாமர்த்தியமானது முக்கோணங்களின் பற்பல குண விவேசனங்களாலும், அதிலும் விசேஷமாய், முக்கோணத்தின் பக்கக்கோடுகளின் அளவைக்கொண்டு அதன் பரப்பை அளவிடக்கூடும் என்னும் அரிய இரகசியத்தாலும் நன்கு ரூபிக்கப்படுகிறது. இவ்வித பிரமேய ஞானமானது, சொற்பகாலங்களுக்கு முன் க்ளாவியஸ் (Clauvius) என்னும் வித்துவான் வெளியிட்டுப் பிரசுரப் படுத்தியதற்கு முன் ஐரோப்பாவில் தெரியவே தெரியாது. மேலும், ஒரு வட்டத்தின் சுற்றளவுக்கும் (Circumference) வியாசார்த்தத்துக்கும் (Radius) உள்ள சம்பந்தத்தை நன்குணர்ந்து, அதை அளவிட்டுக் கூறியுள்ளது இந்துக்களுக்கு இன்றியமையாத ஒரு விசேஷ ரீதியாகிறது. இத்தகைய அளவு விஷயமான சம்பந்தம் சரியானது என்று நவீன ஐரோப்பிய கணித வித்துவான்கள் வெகுவாறு பரிசிரமப்பட்டுக் கண்டறிந்து ஸ்திரப்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால், சொற்பகாலத்துக்கு முந்திவரையில் இவ்வித ஞானம் இந்தியாவுக்கு வெளிப் பிரதேசங்களில் கண்டறியப்படவில்லை.'

பீஜகணிதப் (Algebra) பயிற்சியிலும் பூர்வீக இந்துக்கள் வெகு மேன்மையடைந்திருந்தனர். விமூலராசிகள் (Surds), *அமிச்ர சமீகரணம், வர்க்க சமீகரணம், அனேகாக்ஷர சமீகரணம், சுத்தவர்க்க சமீகரணம் என்று பல வகைப்பட்ட சமீகரண நிர்ணயமுறைகள், குட்ட கணிதம் (Indeterminate problems) இவை முதலானவற்றை இந்துக்கள், மற்றைய ஜாதியார்களுக்கு முன்னமேயே, நன்றாய்க் கற்றறிந்தார்கள் என அவர்களது பூர்வீகக் கிரந்தங்களால் நன்கு ஏற்படுகிறது. இது மாத்திரமல்ல; அவர்களது இத்தகைய ஞானவிசேஷத்தைப்பற்றி மேனாட்டு வித்துவான்களே பலவாறு புகழ்ந்து கூறியிருக்கின்றனர். இவையனைத்தும் எடுத்துரைப்பதானால், வெகு விரிவாகும். ஆகையால் சிலவற்றை மட்டில் அடியிற் குறிப்பிடுவோம்:—

1. ப்ரொபெஸர் மானியர் வில்லியம்ஸ் என்பவரது அபிப்பிராயம்:—''பீஜகணிதம், ரேகாகணிதம் இவற்றை முதன் முதல் கண்டு பிடித்து, வானசாஸ்திரஞான அபிவிருத்திக்காக உபயோகப்படுத்திய கௌரவம் ஹிந்துக்களைச் சார்ந்ததே.''

* Equations, simple, quadratic, containing two or more unknown quantities; pure quadratics etc.

காளிதாஸ மகா கவி

KALIDASA THE GREAT POET

இரகு வம்சம்

முன்னொரு ஸஞ்சிகையில், திலீப மகாராஜனும் ஸுதக்ஷிணாதேவியும் குலகுருவான வஸிஷ்டரது கட்டளைப் பிரகாரம் அவரது நந்தினீ என்னும் காமதேனுவை விதிப்படி ஆராதித்தனர் என்றும், வஸிஷ்டர் அதனால் அவர்களது ஸந்ததி விருத்தியாகாமலிருப்பதற்குரிய குறை நீங்கி, தக்க ஸந்ததி உண்டாகுமென்று ஆசீர்வாதஞ் செய்து அவர்களை நகரத்துக்குத் திரும்ப அனுப்பினாரென்றும் கூறப்பட்டது.

பின்னர், ஸுதக்ஷிணை சீக்கிரம் கர்ப்பந் தரித்து வெகு காந்தியுடன் விளங்கலானாள். கர்ப்பகாலத்தி லுண்டாகக் கூடிய அவளது விருப்பங்கள் யாதொரு தடையுமில்லாது நிறைவேற்றப்பட்டு வந்தன. காலத்தில் பும்ஸவனம் முதலிய வைதிகக் கிரியைகள் நடத்தப்பட்டன. ப்ரஸவகாலம் நெருங்கியது. நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் ஐந்து கிரகங்கள் உச்சம் பெற்றிருக்குந் தருணத்தில், இந்திராணிக்கொப்பான ஸுதக்ஷிணையானவள் ஓர் உத்தம புத்திரனைப் பெற்றாள். அப்போது "எல்லாத் திசைகளும் பிரஸன்னங்களாயின. ஸுகமான மந்தமாருதங்கள் வீசின. ஹோமம் செய்யப் பயப்பட்ட ஹவிஸ்ஸுக்களை அக்கினிபகவான் பிரதக்ஷிணமான ஜ்வாலைகளுடன் அங்கீகரித்தார். அக்காலத்தில் எல்லாம் சுபத்துக்கு அறிகுறியாகவே விளங்கிற்று. அவ்வித உத்தம புருஷர்களின் ஜனனமானது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டல்லவா ஏற்படுகிறது!" அச்சுபவேளையில் திலீப மகாராஜன் ஏராளமான தானங்கள் அளித்து, ஜனங்களின் மனத்தைக் களிப்பிக்கச் செய்தான். எங்கும் உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அப்பால் வஸிஷ்ட பகவான் தமது தபோவனமிருந்து அரண்மனைக்கு எழுந்தருளி, அச்சிசுவுக்குச் செய்யவேண்டிய ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களை விதிப்படி செய்து முடித்தார். இக்காலத்தில் உத்தம க்ஷத்திரிய வம்சத்தாரெனச் சொல்லிக்கொள்ளும் அநேக ஹிந்து அரசர்களும் இக்காலத்திய மேனாட்டு நாகரிகத்தைக் கைக்கொண்டவர்களாய் தத்தமக்குரிய சடங்குகளை அடியோடு செய்யாது விட்டொழிப்பதே ஒரு பெருங் கௌரவமாக எண்ணிவருகிறார்கள். திலீப மகாராஜனோ அவ்வாறில்லாமல், ஆரிய தருமத்திலிருந்து சிறிதும் நழுவாமல், தனக்குரிய விதிகளைச் சரிவர அனுஷ்டித்துவந்தான்.

பின்னர் ராஜ புத்திரனுக்கு நாமகரணம் செய்யுங்காலம் வந்தது. 'சாஸ்திரங்களுடையவும், யுத்தத்தில் சத்துருக்களுடையவும் எல்லையை (முடிவை) இவன் அடைவான்' என்பதைக் குறிக்குமாறு, தன் அருமைப் புதல்வனுக்கு ரகு என்னும் நாமகரணஞ் சூட்டினான். அக்குமாரனும் வெகு செல்வமும் சீராட்டுமாய் வளர்க்கப்பட்டு, கிரமேண விருத்தியடைந்து விளங்கலானான். பின்னர், ரகுவுக்குச் சூடாகரணம், உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டு, அவன் மந்திரி புத்திரர்களுடன் எல்லா சாஸ்திரங்களையும் அப்பியசித்தான்; தனுர் வித்தையில் விசேஷ பாண்டித்தியம் பெற்றான். பிறகு அவனுக்குக் குழந்தைப் பருவம் நீங்கி, யௌவனம் ஏற்பட்டது. உத்தம சோபையும் பராக்கிரமும் உண்டாயின. தக்க காலத்தில் அவனுக்கு விவாகம் நடந்தேறியது. நிகாற்ற பராக்கிரமம் வாய்ந்து, பூபாரம் வகிக்க வல்லமை வந்துள்ள தனது புத்திரனை, திலீபன் யுவராஜனாக முடிசூட்டினான். பின்னர், இக்ஷ்வாகு குலமன்னன், அசுவமேத வேள்விகள் செய்யக் கருதி, ரகுவை வேள்விக் குதிரையை ஸம்ரக்ஷித்து வரும்படி ஏவி, கிரமேண 99 யாகங்கள் செய்துமுடித்தான். கடைசியில் 100-வது யாகத்தைத் தொடங்கி, குதிரையைப் பூப்பிரதிக்ஷணம் செய்துவரும்படி விடுத்தகாலத்தில், அஸூயைகொண்ட இந்திரன், க்ஷத்திரிய வீரர்கள் பார்த்துக்கொண் டிருக்கையில், ஒருவருக்கும் தெரியாமல், அவ்வசுவத்தைத் திருடிச் சென்றுவிட்டான். இதையறிந்த ரகு முதலான வீரர்கள் யாதுசெய்வதென்று தோன்றாமல் திகைத்து நின்றனர். இவ்வாறிருக்கையில் தெய்வ வசத்தால் நந்தினீ என்னும் காமதேனு அங்கு வர நேர்ந்தது. உடனே அதன் தேகத்தினின்றும் வெளிக் கிளம்பிய புண்ணிய தீர்த்தத்தால் இளவரசன் தனது கண்களைத் துலக்கி நோக்கவே, சாதாரணமான கண்களுக்கு அகோசர

மான விஷயங்கள் அவன் கண்ணுக்குப் புலப்பட்டன. இந்திரன் அக் குதிரையைத் தனது இரதத்தில் கட்டிக்கொண்டு கிழ்த் திசையில் செல்லுவதையும், அவ்வாறு செய்தல் தகாதென்று இந்திர ஸாரதியான மாதலி அவனைத் தடுப்பதையும் கண்ணுற்ருன்.

உடனே அவன் இந்திரனை நோக்கி "யாகங்களிற் செய்யப்படும் ஹவிர்ப்பாகங்களைக் கிரகித்துக் கொள்ள ஏற்பட்ட தேவர்களுள் நீர் முதலானவரென்று பெரியோர்கள் சொல்லுகிருர்களே; இவ்வாறிருக்க, ஸதா யாகஞ் செய்துவரும் என் பிதாவின் வேள்விக்கு நீரே முதன்மையான விரோதியாக ஏற்பட்டிருப்பது எங்ஙனம்? திரிலோகாதிபத்ய ஐசுவரியம்பெற்று, யக்ஞங்களைக் கெடுக்கும் துஷ்டர்களைச் சிக்ஷித்து அடக்கவேண்டியவரான நீரே தருமமார்க்கத்தில் ஒழுகுவோரின் ஸத்கர்மங்களைக் கெடுப்பதாக ஏற்பட்டுவிட்டால், உலகில் ஸன்மார்க்க ஒழுக்கமே நழுவிவிடாதா? ஆகையால் இக்குதிரையை அபகரித்துச் செல்லல் உமக்குத் தகாது; தயவு புரிந்து இதை விட்டு விட்டுச் செல்வீராக! வேதங்களில் கூறப்பட்டுள்ள நல்வழி தவருது நடைபெறும்படி பார்ப்பதற்காக ஏற்பட்ட தம் போன்ற லோக பாலர்கள் பாபமார்க்கத்தையனுசரித்து நடக்கலாமா?" என்று கம்பீரத் துவனியுடன் கேட்கலுற்ருன்.

இதைச் செவியுற்ற அமர்பிரான், ஆச்சரியமடைந்து, திரும்பி நோக்கிப் பதிலுரைக்க ஆரம்பித்தான். "சக்கரவர்த்தி குமாரனே, நீ சொல்வது சரியே. ஆனால், கீர்த்தியையே பெருந்தனமாகப் பாவிக்கும் எம்போன்றவர்கள் சத்துருக்களிடமிருந்து தங்கள் புகழுக்கு நாசம் ஏற்படும்போது, அதை எவ்விதமாவது இரட்சித்துக் கொள்வது அவசியம். ஜகத் பிரசித்தமான எனது கீர்த்தியை உனது பிதா நூறு யாகங்கள் செய்து முடித்து அழிக்கக் கருதுகிருன். விஷ்ணுவுக்கே புருஷோத்தமன் எனும் நாமம் தகும்; முக்கண்ணனே பரமேசுவரன் ஆவான்; இவ்வாறு சதக்ரது (நூறு வேள்வி செய்தவன்) என்ருல் எனக்கே தகுதியான பெயராகும். இவை மற்றெவருக்கும் ஒவ்வா. ஆகையால், வேள்விக் குதிரையை நான் அபஹரித்து வந்தேன். இது விஷயத்தில் நீ வீணுய் சிரமப்படவேண்டாம். பூர்வம் ஸகர புத்திரர்கள் அடைந்த கதியை அடையவேண்டாம்?" என்று பதிலுரைத்தான்.

இதைக்கேட்ட ரகுவுக்கு வெகு கோபம் பிறந்தது. ஷண்முகக் கடவுளுக்கு ஒப்பான பராக்கிரமம் வாய்ந்த அவ்வீரன், உடனே தன் வில்லை வளைத்து, இந்திரன்மீது சாமாரி பொழிந்தான்; மற்ருெரு பாணத்தால் அவனது இரதக் கொடியையும் அறுத்துத் தள்ளிஞன். இது கண்டு, சசீபதிக்குக் கடுஞ் சினமுண்டாகி, அவன் ரகுவை எதிர்க்க, இருவருக்கும் கோரயுத்தம் நடந்தது. மேகமானது தன்னிடமிருந்து அக்கினி ரூபமான மின்னலை எவ்வாறு மழை ஜலங்களால் அழிக்கமுடியாமற் போகுமோ, அவ்வாறே இந்திரனும் வெகு சௌரியம் பொருந்திய ரகுவை முறியடிக்க வில்லை. பின்னர் ரகுவானவன் தீக்ஷ்ணமான ஒரு அம்பால் தேவராஜனது வில்லின் நாண் கயிற்றை அறுக்கவே, அமர்பிரானுக்கு ஆக்கிரோஷமுண்டாகி, அவன் தனது வஜ்ராயுதத்தால் ரகுவின் மார்பில் ஓங்கியடித்தான். அதனுல் ரகு சற்று மதிகலங்கி நின்று, பின்னர் பிரஞ்ஞை தெளிந்து யுத்த சன்னத்தனுய் எழுந்தான். இதைக் கண்டு அவனது 'சைநிகர்கள் எல்லோரும் மனமகிழ்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கினர். இந்திரனும் அவனைப் பலவாறு மெச்சிக் களித்தான். 'பதம் ஹி ஸர்வத்ர குணைர்நிதீயதே!'' என்கிறபடி நிகரற்ற பராக்கிரமம் முதலிய உத்தம குணங்கள் சத்துருக்களையும் வசிகரித்து, புகழச் செய்யுமல்லவா? அமரேசனும் இவ்வாறு வஜ்ராயுதத்தின் அடியையும் சகித்து நிற்கும் ரகுவினிடம் தயை கூர்ந்து, "ஒப்பற்ற வீரனே! எவ்வித மலைகளையும் பிளக்கவல்ல எனது அஸ்திரத்தைத் தாங்கினுய். உன்மீது மிகக் களிப்படைந்தேன். நீ வேள்விக் குதிரையைத் தவிர மற்றெவ்வித வரன் கேட்பினும் நான் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன்" எனக் கூறினுன். இதுகேட்ட திலீப புத்திரன், "ஸுரேச்வரனே, அசுவத்தைத் திரும்பக் கொடுப்பது அசாத்தியமானுல், எனது பிதாவின் யாகமானது யாதொரு குறைவுமன்னியில் விதிப்படி நிறைவேறினதாகும்படி அனுக்கிரஹிக்க

(இதன் தொடர்ச்சி 194-ம் பக்கம் பார்க்க.)

ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்
SRI KRISHNA KARNAMRUTAM

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவாரம்பரம் ததானே |
வபு ரளககுலா வ்ருதானனுப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா ||

(73) கைலாஸோ நவநீததி க்ஷிதிரியம்
ப்ராக்ஜக்தம்ருல்லோஷ்டதி
க்ஷீரோதோபி நிபீத துக்தவிலஸத்
ஸ்மேரே ப்ரபுல்லே முகே |
மாத்ரா ஜீர்ணதியா த்ருடம் சகிதயா
நஷ்டாஸ்மி த்ருஷ்ட: கயா
தூ தூ வத்ஸக ஜீவ ஜீவ
சிரமித்யுக்தோவதாந் நோ ஹரி: ||

'ஒரு ஸமயம் கார்வண்ணன் புந்நகை செய்து வாயைத் திறந்திருக்கையில், அவருண்ட வெண்ணெய் கைலாஸ பர்வதம்போலும், முன்பு சாப்பிட்ட மண்ணும் கல்லும் பூமி போலும், பானஞ் செய்த பாலானது க்ஷீர சமுத்திரம்போ லிருப்பதைக் கண்ணுற்ற யசோதையானவள், குழந்தைக்குச் சரியான ஜீர்ணமாகாமல் வெண்ணெய் முதலியன இவ்வாறு தோன்றுகின்றனவென்று நினைத்துப் பயந்து, 'ஐயோ ஆபத்து வந்துவிட்டதே! யாரோ கொள்ளிக்கண்ணுடையாள் பாலனைப் பார்த்துவிட்டாளே! அடே குழந்தாய்! தூ தூ என்று காரி உமிழ்வாய்! சிரஞ்சீவியாயிருந்து வாழ்வாயாக! என்று கூறலுற்றாள். இவ்வாறு சொல்லப்பட்ட பகவான் நம்மைக் காத்தருள்வாராக!" பகவான் ஆங்காங்கே காட்டியருளிய அதிமானுஷ விநோதங்களும் மாயையின் மகிமையால், யசோதை முதலானோருக்கு ப்ராகிருத பாலனது சேஷ்டைகளாகத் தோன்றி, அவற்றை அவர்கள் வெகுவாறு அனுபவித்துப் பேரானந்தம் பெற்றனர் என்பது கருத்து.

(74) கிஞ்சித் குஞ்சித லோசனஸ்ய பிபத:
பர்யாய பீதஸ்தனம்
ஸத்ய: ப்ரஸ்னுத துக்த பிந்துமபரம்
ஹஸ்தேன ஸம்மார்ஜத: |
மாத்ரை காங்குளி லாளிதஸ்ய சுபுகே
ஸ்மேரானனஸ்யாதரே
சௌரே: க்ஷீர கணான்விதா நிபதிதா
தந்தத்யுதி: பாது ந: ||

கண்ணன் ஒரு சாதாரண குழந்தைபோல், தாயாரின் பால் குடித்துச் சீராட்டப்பெற்ற அவஸரத்தை வர்ணிக்கிறார் லீலாசுகர். "பகவான் தமது கண்களைக் கொஞ்சம் மூடிக்கொண்டு, மாற்றி மாற்றி யசோதையின் ஸ்தன்யத்தைப் பானஞ்செய்தும், தவறி தன் மீது பெருகியுள்ள பால் துளியை தமது கையால் துடைத்துக் கொண்டுமிருக்க, யசோதையானவள் ஒரு விரலால் அவரது மோவாயைத் தொட்டுச் சீராட்டினாள். அப்போது அவர் சிறிது புந்நகை செய்தார். அச்சமயம் அவரது அழகிய உதட்டில் வெண்மையான பற்களின் காந்தியானது முலைப்பாலின் திவலைகளுடன் சேர்ந்து விழுந்து வெகு ரமணீயமாய் விளங்கிற்று. இவ்வித சோபை நம்மை ரக்ஷிக்கட்டும்." இவ்வித திவ்விய காந்தியை நாம் மனதால் அனுஸந்தித்துக் கடைத்தேறுவோம் என்பது கருத்து.

(75) க்ருஷ்ணேனும்ப கதேன ரந்து மதுனா
ம்ருத் பக்ஷிதா ஸ்வேச்சயா
தத்யம் க்ருஷ்ணக ஏவமாஹ முஸலீ
மித்யாம்ப பச்யானனம் |.
வ்யாதேஹீதி விதாரிதே சிசுமுகே
த்ருஷ்ட்வா ஸமஸ்தம் ஜகத்
மாதா யஸ்ய ஜகாம விஸ்மய பதம்
பாயாத் ஸ ந: கேசவ: ||

'ஒரு சமயம் பலராமன் யசோதையிடம் வந்து 'அம்மா, கிருஷ்ணன் வெளியில் விளையாடப்போ யிருக்கையில் யதேஷ்டமாய் மண்ணை வாரி வாரித் தின்றான்' என்று சொல்ல, இதுகேட்ட யசோதைக் கண்ணனைப் பார்த்து, 'குழந்தாய், நீ மண் தின்றதாய் உன் அண்ணன் சொன்னது நிஜந்தானா?' என்று கேட்க, கிருஷ்ணன், 'அம்மா, அது சுத்தப் பொய்; வேண்டுமானால் என் வாயைப் பார்' என்று சொல்ல, அவளும் 'வாயைத் திறந்துகாட்டு' என்று அதட்டவே, கார்வண்ணன் தமது அழகிய திருவாயைத் திறந்துக் காட்டலுற்றார். என்னே விந்தை! அச்சிறு வாயில் எல்லா உலகங்களும் காணப்பட்டன. இதைக் கண்டு யசோதை, ஆச்சரியமுற்றுத் திகைத்து நின்றாள். இவ்வாறு பால லீலை செய்தருளிய ஸர்வப்பிரபஞ்சத்துக்கும் ஈசுவரனை திருமால் நம்மைக் காத்தருள்வாராக."

(76) ந்ருத்யந்த மத்யந்த விலோக நீயம்
க்ருஷ்ணம் மணிஸ்தம்பகதம் ம்ருகாக்ஷீ |.
நிரீக்ஷ்ய ஸாக்ஷாதிவ கிருஷ்ண மக்ரே
த்விதா விதேனே நவநீத மேகம் ||.

"ஸர்வாயவ சுந்தரனான கண்ணன் வெகு அழகாய் நர்த்தனமாடி விளையாடும்போது, ரத்தினங்களிழைத்த ஸ்தம்பங்களில் அவர் பிரதிபிம்பத்தைக் கண்ணுற்ற யசோதையானவள், தன்முன் மற்றொரு கிருஷ்ணன் நிற்பதாகவே நினைத்து, தன் கையிலுள்ள வெண்ணெயைக் கொடுக்க இரண்டாய்ப் பகிர்ந்தாள்."

(77) ஏதே லக்ஷ்மண ஜானகீ விரஹிதம்
மாம் கேதயந்த்யம்புதா :
மர்மாணீவ ச கட்டயந்த்ய லமமீ
க்ரூரா : கதம்பா நிலா : |.
இத்தம் வ்யாஹ்ருத பூர்வஜன்ம சரிதம்
யோ ராதயா வீக்ஷித :
ஸேர்ஷ்யம் சங்கிதயா ஸ ந : ஸுகயது
ஸ்வப் நாயமானோ ஹரி : ||.

"'ஹே லக்ஷ்மணா? சீதையைவிட்டுப் பிரிந்து தவிக்கும் என்னை இந்த மேகங்கள் தொந்தரவு படுத்துகின்றன ; கதம் புஷ்பங்களின் நறுமணம் நிறைந்து வீசும் இக்குளிர்ந்த காற்றுகள் என் மர்மஸ்தானங்களைப் பிளப்பவைபோலிருக்கின்றன!' இவ்வாறு பகவான் ஸ்வப்நத்தில் தமது பூர்வ அவதார சரித்திரத்தைக் குறித்துக் கூறியதைக் கேட்ட ராதையென்னும் கோபிகை அவர் மீது சங்கை கொண்டு, அஸூயையுடன் நோக்கலுற்றாள்' இவ்விதம் ஸ்வப்னங் கண்ட கார்வண்ணன் நம்மைப் பேரானந்தப் படுத்தட்டும்." பூர்வம் ராமவதாரஞ் செய்து, துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்து தர்மத்தை நிலைநாட்டியுள்ள திருமாலே, பின்னர் கண்ணனாக அவதரித்துள்ளார் என்பதை இவ்விதமான வார்த்தைகளால் பகவான் தாமே ஆங்காங்கே காண்பித்துள்ளார் என்பது கருத்து.

(78) ஓஷ்டம் முஞ்ச ஹரே பிபேமி பவதா
பானைர் ஹதா பூதனா
கண்டாச்லேஷ மமும் ஜஹீஹி தளிதா —
வாலிங்கனே னார்ஜுனௌ |.
மா தேஹிச் சுரிதம் ஹிரண்யகசிபுர்
நீதோ நகை : பஞ்சதாம்
இத்தம் வாரித ராத்ரி கேளிரவதா—
ல்லக்ஷ்ம்யா பஹாஸாத்தரி : ||.

லக்ஷ்மீ தேவியானவள் பகவான் தமது அவதாரங்களிற் செய்துள்ள சில அற்புத கிருத்யங்களை நினைந்து சாதாரணமான ஸுரத லீலைகளை அவர் தன்னிடம் செய்யவேண்டாமென்று தடுத்ததாய்க் கூறினதாக லீலாசுகர் உத்ப்ரேக்ஷித்து, பகவானின் அதிமானுஷச் செயல்களின் பெருமையை வெளியிடுகிறார். "பிரபோ, நீர் என் அதரபானஞ் செய்யாதீர். எனக்குப் பயமாயிருக்கிறது. முன்பு நீர் பூதனையை உறிஞ்சுகொன்றீ ரல்லவா ; நீர் எனது கழுத்தைத் தழுவி ஆலிங்கனஞ் செய்யவேண்டாம் ; அர்ஜுன விருக்ஷங்கள் உம்மால் தழுவப்பட்டு நாசமடைந்தனவல்லவா ? நீர் உமது கைகளால் சந்தனப்பூச்சு முதலிய அலங்காரம் செய்யவேண்டாம், முன்பு ஹிரண்யகசிபுவானவன் உமது நகங்களால் யமலோகமடைவிக்கப் பட்டானல்லவா ?" ராத்திரி கேளி காலத்தில் இவ்வாறு லக்ஷ்மீதேவியால் பரிஹாஸமாய்த் தடுக்கப் பட்ட பகவான் நம்மைக் காத்தருளட்டும்."

(79) ராமோ நாம பபூவ ஹும் ததபலாஸீதேதி
ஹும் தௌ பிதுர்
வாசா பஞ்சவடீதடே விஹரத :
தாமாஹரத் ராவண : |.
நித்ரார்த்தம் ஜனனீகதா மிதி ஹரே :
ஹுங்காரத : ச்ருண்வத :
ஸௌமித்ரே க்வதனுர் தனுர் தனுரிதி
வ்யக்ரா கிர : பாந்து வ : ||.

ஒரு சமயம் கண்ணன் தூங்குவதற்காக யசோதை ராமாவதாரக் கதையைச் சொல்லலுற்றாள். அதை இடையிடையே 'ஹும்' என்று சொல்லிக் கேட்டுக்கொண்டு வந்த கார்வண்ணனுக்குத் தமது பூர்வாவதார ஞாபகம் வந்து, அவர் தமது மஹிமையைக் காட்டலுற்றார் என்பது கருத்து. "ராமன் என்று ஒருவன் இருந்தான் ; ஹும். அவனுக்கு ஸீதை என்ற ஒரு பத்தினி இருந்தாள் ; ஹும். அவ்விருவரும் அவர் பிதாவின் (தசரதரின்) கட்டளையை அனுசரித்து பஞ்சவடிதீரத்தில் உல்லாஸமாய் வசித்து வந்தனர். அப்போது ராவணன் அவளை அபகரித்துச் சென்றான்' என்று, யசோதையானவள் கண்ணன் தூங்குவதற்காகக் கதை சொல்லிவருகையில், ஹுங்காரம் செய்து கேட்டுவந்த பகவான் 'அடே லக்ஷ்மணா! எனது வில் எங்கே? எங்கே என் சாபம்?' என்று கூக்குரலிட ஆரம்பித்தார். அவரது இந்த வாக்கியங்கள் நம்மை இரட்சிக்கட்டும்."

மின்சாரப் பிரவாகம்

CURRENT ELECTRICITY

முன் ஸஞ்சிகையில், வஸ்துக்கள் ஒன்றோடொன்று கலந்து அடையும் பௌதிகமாறுதலால் மின்சாரப் பிரவாகமுண்டாகக் கூடுமென்றும், இது விஷயமாய் வால்டா என்பவர் மின்சார பாண்டம் என்னும் சாதன விசேஷத்தை முதன் முதற் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது. இந்த ஏற்பாட்டில், தனுகாஞ் செய்யப்பட்ட கந்தகத் திராவகத்தில் தோய்க்கப்பட்டுள்ள தாமிரத் தகடு, துத்தநாகத் தகடு இவற்றில் பற்று வைக்கப்பட்டுள்ள செப்புக் கம்பிகளின் நுனிகளை ஒன்றோடொன்று சம்பந்தப்படச் செய்தால், அப்போது துத்தநாகத்தகட்டில் உண்டாகும் அடியிற் குறித்துள்ள பௌதிக மாறுதலால், மின்சார சக்தி உற்பத்தியாகி, திராவக வழியாய் செப்புத் தகட்டுக்குச் சென்று, அதன்மீது பாவி, அப்பால் செப்புக்கம்பிகளின் வழியே சென்று மீண்டும் துத்தநாகத் தகட்டுக்கு வருகிறது. பௌதிக மாறுதல் உண்டாகிக் கொண்டேயிருக்குமளவில், மேற்கூறிய சக்தி உண்டாகி, சுற்றி வந்துகொண்டேயிருக்கும். அச் சக்தி வெகு வேகமாய்ப் பிரவகித்து, சுற்றுமார்க்கம் மூலமாய்ச் செல்வதை மின்சாரப் பிரவாகம் எனச் சொல்லுகிறார்கள்.

வால்டெயிக் மின்சார பாண்டத்தில் ஏற்படும் பௌதிக மாறுதல் :—

துத்தநாகம் + கந்தகத்திராவகம் = வெள்ளைத் துத்தம் + ஜலவாயு. இவற்றுள், வெள்ளைத் துத்தம் (Zinc Sulphate) என்னும் வெண்மையான பதார்த்தமானது திராவகத்தில் கரைந்து, அதை வரவர மங்கலாகத் தோற்றச் செய்யும். ஜலவாயுவானது (Hydrogen) வெகு சிறு குமிழிகள் ரூபமாய்த் துத்தநாகத் தகட்டண்டைகிளம்பி, மின்சாரப் பிரவாக வலிவால் இழுபட்டுச் செப்புத் தகட்டை நோக்கிச் சென்று, கிரமேண அதன்மீது படிகிறது. இவ்வித ஏற்பாட்டில், மின்சார சக்தி உண்டாகி, சுற்று மார்க்கம் முழுவதும் பிரவகிக்கிறது என்பதைப் பரீக்ஷண ரூபமாய்க் காண்பிக்கலாம். இவ்வித பரீக்ஷணங்களுக்கு ஆதாரமாயுள்ளது மின்சார சத்துக்கும் (Electricity), காந்த சத்துக்கும் (Magnetism) உள்ள நெருங்கிய அன்னியோன்னிய சம்பந்தமே தான்.

காந்த ஊசியின் முக்கியமான குணம் எல்லோரும் அறிந்துள்ளதே. அது இரும்பு அரபொடியை (Iron filings) ஆகர்ஷிக்கும் தன்மை பொருந்தியது; மேலும், ஒரு காந்த ஊசியை ஒரு சாதாரண ஊசி அல்லது கூர்மையான நுனியுள்ள செங்குத்தான ஆதாரத்தின்மீது தாராளமாய்ச் சுழலும்படி மத்தியில் தாங்கச் செய்து, அதை அடிவானத்துக்கு நேராக (Horizontally) ஆட்டிச் சலிக்கவிட்டு விட்டால், அது அங்குமிங்கு மசைந்தாடி, கடைசியில் அநேகமாய்த் தெற்கு வடக்காக ஒரு ஸ்தானத்தில் அசைவற்று நிற்கும். இவ்வாறு எம்முறை செய்யினும், அது அதே ஸ்தானத்தில் வந்து அசைவற்று நிற்கும் தன்மையுள்ளது. இவ்வாறு அது தெற்கு வடக்காக நிற்பதற்குக் காரணம், உருண்டை வடிவான பூமிக்குச் சுபாவமாயுள்ள காந்த சக்தியின் ஆகர்ஷணமென்று பௌதிக சாஸ்திர வித்துவான்களின் கொள்கை. இவ்வாறு நிற்கும் காந்த ஊசியை அந்த ஸ்தானத்தை விட்டுச் சலிக்கச் செய்யவேண்டுமானால், அதன் மீது ஏதாவது விசைத்தாக்கம் ஏற்படவேண்டும். கண்ணுக்குப் புலப்படக்கூடாததான மின்சாரப் பிரவாகமானது, சரியான ஆதாரத்தின் மீது தாங்கப்பெற்று, தனக்குரிய தெற்கு வடக்கான திக்கில் நிலைநிற்கும் ஒரு காந்த ஊசியின் (Magnetic needle) சமீபத்தில் ஏற்பட்டால், அதன் வலிவால், காந்த ஊசியானது தனது ஸ்தானத்தை விட்டுச் சலிக்கக்கூடும். ஒரு காந்த ஊசி நிலை நிற்கும்போது, வடக்கு திக்கை நோக்கி நிற்கும் தன்மையுள்ள அதன் நுனியை வடநுனி (North pole) என்றும், தெற்கு நோக்கி நிற்கும் நுனியை தென்நுனி (South pole) என்றும் பெயரிட்டுச் சொல்வது வழக்கம். தனது மத்தியில் தாங்கப்பெற்றுள்ள ஒரு காந்த ஊசியானது அடிவானத்து நேராகச் சலிக்கும்போது, வடநுனி கிழக்கு முகமாய்ச் சலித்தால், தென் நுனி மேற்கு முகமாயும், வடநுனி மேற்கு திக்காக அசைந்தால், தென் நுனி அதற்கு மாறாகவும் அசையுமாதலால், காந்த ஊசியின் சலனத்தைக் கூறும்போதெல்லாம், வடநுனி அசையும்

திசையையே, ஊசியின் சலன திசையாக விவகரித்து வருகின்றனர். மேலும், காந்த ஊசி சலிக்க ஆரம்பித்தால், அது அங்குமிங்கும் ஆடி, இறுதியில் தனக்குச் சுபாவிகமான தெற்கு வடக்கு நிலையில் வந்து நிற்கும் குணமுள்ளதாகையால், மின்சாரப் பிரவாகம் முதலிய சக்தியின் தாக்கத்தால் காந்த ஊசியின் சலனத்தை (Deflection) நோக்குவதற்குரிய பரீக்ஷணங்களில், நிலை நிற்கும் அதன் வடநுனியானது முதன் முதல் வடக்குக்கு எப்பக்கம் (கிழக்கிலா அல்லது மேற்கிலா) சலிக்க ஆரம்பிக்கிறது என்பதை நன்கு கவனித்து, அதையனுஸரித்து, காந்த ஊசியின் சலனம், 'கிழக்கு நோக்கி, அல்லது மேற்கு நோக்கியுள்ளது' என்று சொல்லவேண்டும். காந்த ஊசி சலிக்க ஆரம்பிக்கும் திசையும் (Direction of deflection), அது தன் நிலைமையிலிருந்து சலித்து நிற்கும் அளவும் (Magnitude or amount of deflection) மின்சாரப் பிரவாகத்தின் திசையையும், அளவையும் முறையே சார்ந்திருக்கின்றன. மேற்கூறிய தத்துவங்களும், சங்கேதப் பெயர்களும், மின்சாரப் பிரவாகத்தின் ஸ்வரூபத்தைக் கண்டறிவதற்கான பரீக்ஷணங்கள் விஷயத்தில் மிகவும் பயன்படுமாதலால், அவற்றை நன்கறிந்து, மனத்தில் வற்புறுத்தல் அவசியம்.

படம் 2



பரீக்ஷணம் (4)

மேற்கூறியவாறு, செங்குத்தான ஊசியின் மீது அடிவானத்துக்கு நேராக நின்று, தாராளமாய் சலிக்குமாறு தாங்கப் பெற்றுள்ள ஒரு காந்த ஊசியை ஒரு மேஜை அல்லது வேறு சமதரைமீது வைத்தால், அது கடைசியில் தெற்கு வடக்காக நிற்கும்.

(a) மேற்கண்ட வால்டேயிக் மின்சார பாண்டத்தைச் சேர்ந்த தாமிரக் கம்பிகளின் நுனிகளை ஒன்றுசேர்க்காமல், ஒவ்வொரு கம்பியையும் தனித் தனியே காந்த ஊசிக்கு அருகில் மேலோ கீழோ, தெற்கு வடக்காக இருக்கும்படி பிடித்தால், காந்த ஊசியில் யாதொரு சலனமும் இல்லாமலிருப்பதைக் காணலாம். இப்போதும் ஜலவாயுவின் குமிழிகள் துத்தநாகத் தகட்டின்மீதுதான் தோன்றும். தாமிரத் தகட்டினருகில் அவை காணப்படா.

(b) மேற்கண்ட கம்பிகளின் நுனிகளை ஒன்றோடொன்று நன்கு பொருந்தும்படி சம்பந்தப்படுத்தி, இக் கம்பிகளின் எப் பாகத்தையாவது காந்த ஊசியின் சமீபத்தில் தெற்கு வடக்காகச் சமமாயிருக்கும்படி பிடித்தால், உடனே காந்த ஊசி கிழக்கிலோ மேற்கிலோ அசைய ஆரம்பித்து, அசைந்தாடி, கடைசியில் வடகிழக்கு முகமாகவோ, வடமேற்கு நோக்கியோ நிற்பதைப் பார்க்கலாம். இச் சமயம், ஜலவாயுவின் குமிழிகள் தாமிரத் தகட்டண்டையும் ஏராளமாய்க் காணப்படும்.

(c) மேற் சொன்னபடி காந்த ஊசிக்குச் சமீபத்தில் பிடிக்கப்பட்டுள்ள கம்பியின் பாகங்களின் திசை மாறுபடும்படி பிடித்தால், ஊசியின் சலன திசையும் வேறுபடும். அதாவது முன் பரீக்ஷணத்தில், வடநுனி கிழக்கு நோக்கிச் சலித்தது என்றால், இப்போது மேற்கு நோக்கி அசைய ஆரம்பிக்கும் என்று கொள்க.

(d) மேற்சொன்ன கம்பியைக் கிழக்கு மேற்காக, (காந்த ஊசியின் நிலமைக்குக் குறுக்காக) இருக்கும்படி பிடித்தால், காந்த ஊசியின் சலனம் ஏற்படாது. இங்கு, மின்சார விசைத் தாக்கமிருந்தும், காந்த ஊசி தாங்கி நிறுத்தப் பட்டிருக்கும் ரீதியால், அது அசையக்கூடாத ஸ்திதியிலிருக்கிறது. ஆகையால் பரீக்ஷணம் செய்யும்போதெல்லாம், மின்சார பாண்டக் கம்பியானது, காந்த ஊசிக்குச் சமமாயிருக்கும்படி (Parallel) தெற்கு வடக்காகவோ அல்லது ஊசியின் வட நுனி, தென் நுனி இவைகட்கு எதிரில் கீழ் மேலாகவோ நிற்கும்படி செய்யவேண்டும். ஒருக்காலும் ஊசி நிற்

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு நன்குடையான் கட்டே தெளிவு.

கும் திசைக்குக் குறுக்காகப் பிடிக்கப்படக் கூடாது என்பதை கவனிக்கவேண்டும்.

(e) மின்சார பாண்டத்தின் கம்பிகளை ஒன்று சேர்த்து ஊசியினருகில் பிடித்தாலும், அச் சமயத்தில் தாமிரத் தகட்டையோ, துத்த நாகத் தகட்டையோ கந்தகத் திராவகத்திலிரு ந்து வெளி எடுத்துவிட்டால், காந்த ஊசியின் சலனம் ஏற்படாமல் தடைப்படுவதைக் காண லாம்.

மேற்கூறிய பரீக்ஷணங்களால், மின்சார பாண்டத்தில் தடையற்ற ஒரு சுற்று மார்க்கம் இருக்கும்போதெல்லாம், அதிலுண்டாகும் பௌதிக மாறுதலின் மூலமாய் மின்சார சக்தி உற்பத்தியாகிப் பிரவகிக்கக்கூடு மென்றும், மேற்கூறிய சுற்று மார்க்கத்தின் எப்பாகத்திலா வது மின்சாரசக்திக்குரிய தடை ஏற்பட்டால், அச்சக்தி உற்பத்தியாகாமல் உடனே நின்று விடுமென்றும், இச்சந்தர்ப்பத்திலும் உண் டாகி வரும் பௌதிக மாறுதலானது மின்சா ரப் பிரவாக விஷயத்தில் காரியகாமற்றதாய், வீணாகச் செலவழிந்து போகிறதென்றும் ஊஹித்துக் கண்டறிந்திருக்கிறார்கள்.

மின்சார சம்பந்தமான சுற்று மார்க்கத்தை மின்சார பாண்டத்திற்கு உள்பட்டதென் றும், வெளிப்பட்டதென்றும் இருவகையாகப் பிரித்துக்கூறுவது வழக்கம். அந்தர் மார்க்கம், அல்லது உள் மார்க்கம், (Internal circuit), பகிர் மார்க்கம், (External circuit) இவ்விரண் டும் சேர்ந்து முழுச்சுற்று மார்க்கம் உண்டாகி றது. இதில் எங்குதடை ஏற்பட்டாலும், பிர வாகம் ஏற்படாமல் நின்றுவிடும். பிரவாகத்தின் அந்தர் மார்க்கம் துத்தநாகத் தகட்டில் ஆரம் பித்து, திராவத்தில் தோய்க்கப்பட்டிருக்கும் கந்தகத் திராவகம் வழியே சென்று, தாமிரத் தகட்டின் திராவகத்திற்கு மேற்பட்டுள்ள பாகம் வரையில் வியாபிக்கிறது. பகிர் மார்க் கமோ இங்கிருந்து ஆரம்பித்து, செப்புக் கம்பி களோ மற்றைய மின்சாரசக்திப் பிரசாரத்துக் கேற்ற பதார்த்தங்களோ இவற்றின் வழியே சென்று, திராவகத்தில் தோய்க்கப்பெற்ற துத்தநாகத் தகட்டின் மேற்பாகத்தில் முடிகி றது. வெளி மார்க்கத்தின் ஆரம்பமாகிய, செப் புத்தகடு கம்பியோடு சம்பந்தப்பட்டுள்ள ஸ்தா னத்தை + அடையாளமிட்டு, உயர்ந்த துரு வம் (Positive pole) என்றும், இது முடி யும் இடமாகிய துத்தநாகத்தகட்டின் மேற் பாகத்தை — குறியிட்டு, தாழ்ந்த துருவம் (Negative pole) என்றும் பெயரிட்டு விவகரித்து வருகிறார்கள். இச்சங்கேதப் பெயர்களையே அடியிற் கண்ட பரீக்ஷணாதி களில் நாம் வழங்கி வருவது உசிதமாகும். உள் மார்க்கத்தின் ஆரம்பம் திராவகத் தில் தோய்க்கப்பட்டுள்ள துத்தநாகத் தகட்டி லும், அதன் முடிவானது செப்புத் தகட்டிலும் என்று அறியவேண்டும். இனிக் கூறப்படும் இதர மின்சார பாண்டங்களில், செப்புத் தகட்டுக்குப் பதிலாக, கரித்தகடு (Carbon plate) அல்லது மற்றைய உலோகத் தகடு முதலியன உபயோகப் படுத்தப்பட்டாலும், வெளிமார்க்கம் இங்குத்தான் ஆரம்பிக்கு மென்பதைக் கவனிக்கவேண்டும்.

(189-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேண்டும். இச்செய்தியை உமது தூதனே சென்று யாகதீக்ஷை பெற்றிருக்கும் எனது பிதாவுக்குத் தெரிவிக்கவேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். இந்திரனும் 'அப்படியே ஆகட்டும், என வாக்கருளிச் செல்ல, ரகு தனது சேனையுடன் திரும்பி நகரம் வந்து சேர்ந்தான். திலீபனுக்கு ரகுவின்மீது ஏற் பட்ட ஆனந்தத்துக்கு அளவேயில்லை. பின் னர் அம் மகாராஜன் ஐஹிக சுகங்களிலிருந்து மனத்தைத் திருப்பி, ரகுவுக்கு முடி சூட்டி, இராஜ்ய பரிபாலனத்தை அவனிடம் ஒப்பு வித்துவிட்டு, தனது பத்தினியுடன் வானப் பிரஸ்தனாய் வாழ்வதற்காக, சாந்த மன முடைய முனிகள் வஸித்துவரும் தபோவன மடைந்தான். 'களிதவயஸாம் இக்ஷ்வாகூணா மிதம் ஹி குலவ்ரதம்' இக்ஷ்வாகு குல மன்னர்கள் மற்றைய பாமர அரசர்கள் போல் எக்காலமும் உலக இன்பங்களிலேயே உழலாமல், முதிர்வயது காலத்தில் சாந்தமன முடையவர்களாய், துறவிவேடம் பூண்டு, நல் தவம்புரிந்து மோக்ஷபதவி யடைவதையே ஒருபெரும் விரதமாகக் கைக்கொண்டவர்க ளல்லவா?

திருவையாற்று ஒலோகமாதே வீச்சுர சரிதக்குறிப்புகள்

[ஸ்ரீமான் பண்டித L. உலகநாத பிள்ளை]

ஒலோகமாதேவீச்சுரமென்பது, தஞ்சை நகர்க்கு வடக்கில் ஏழுமைல் தூரத்தில், காவிரியாற்றின் வடகரையிலுள்ள திருவையாற்றில், ஐயாறுடைய அடிகள் அறம் வளர்த்த அம்மையுடன் அருட்டிருமேனிகொண்டு இனிது வீற்றிருக்கும் ஆலயத்தின் புறத்திருச் சுற்றுமாளிகையில் (வெளிப்பிரகாரத்தில்) வடபுறத்திருக்கும் ஆலயமாகும். இது, ஒலோகமாதேவியால் எடுப்பிக்கப் பட்டமையின், இப்பெயர் பெற்றது. ஒலோகமாதேவி என்பவர், முதலாவது இராஜராஜதேவரது முதற்பெருந்தேவியாவார். இவர்க்கு, தந்தி சக்திவிடங்கியார் எனவும் பெயருண்டு. இராஜராஜனே என்ருல், காந்தளூர்ச் சாலையில் நின்ற மரக்கலங்களை அழித்து, வெங்கை நாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டபாடி, முன்னீர்ப்பழந் தீவுகள் என்னும் இவைகளைக் கைக்கொண்டு, பாண்டியர்களை வென்றடக்கி, கி. பி. 985 முதல் 1013 வரையில், தஞ்சையின் கண் செங்கோலோச்சியிருந்த சோழச் சக்கிரவர்த்தி. இவ்வரச பெருந்தகையின் இருபத்து மூன்றும், இருபத்து நான்காம் வருடத்துச் சாசனங்கள் காணப்படுதலின், இவ்வாலயம், இப்பொழுதைக்கு 917 வருடங்கட்கு முற்பட்டதாகும். இனி, இவ்வாலயம் எடுப்பிக்கப்பட்ட இடமாகிய திருவையாறு, அக்காலத்தில், இராஜேந்திர சிம்ஹவளநாட்டுப் பொய்கை நாட்டைச் சேர்ந்த தேவதானமாக இருந்தது. இத்திருக்கற்றளி ஒலோகமாதேவீச்சுரம் எனப்படும். இதில் எழுந்தருளியிருக்கின்ற ஈசற்கு ஒலோகமாதேவீச்சுரமுடையார் என்பது பெயராகும். தஞ்சைப் பெரிய கோயிலில் தஞ்சை விடங்கர் எழுந்தருளச் செய்திருப்பதுபோல இங்கு ஒலோகவிடங்கர் திருமேனி எழுந்தருளச் செய்திருத்தல் பாராட்டற்பாலது.

இனி, திருமஞ்சனத்திற்காக நீர் நிரப்புவோன் நின்மாலிய நீர் போகடுவான் எனப்படுவான். இவன் நின்மலநீர் போகடுவான் போலும். தினப்படி திருமஞ்சனம் நடைபெறும். திங்கள் சங்கிரமங்களில் அபிஷேக விசேடமுண்டு. அயன சங்கிரமத்திநும் விஷு சங்கிரமத்திநும் நூற்றெட்டுக் கலசம் திருமஞ்சனம் செய்விக்கப்பட்டது. அயன சங்கிரமம் என்றது ஆடிமாதப் பிறப்பும் தை மாதப் பிறப்புமாகும். விஷு சங்கிரமம் என்றது சித்திரை மாதப் பிறப்பும் ஐப்பசி மாதப் பிறப்புமாகும். இந்நான்கு சங்கிரமங்களிநும் நூற்றெட்டுக் கலசம் ஆடியருளுதற்கு ஒவ்வொரு சங்கிரமத்துக்கும் பதினைங்கலமாக நெல் நிவந்தஞ் செய்யப்பட்டிருந்தது. மஞ்சள் காப்புக்காக நாடோறும் அரைப்பலம் மஞ்சள் ஏற்பட்டிருந்தது. ஒலோகமாதேவீச்சுரமுடையார்க்கு நாலுகாலமும், ஒலோகவிடங்கர்க்கும் கணபதியார்க்கும் மும்மூன்று போதும் பூசை நடப்பது வழக்கம். திருநொந்தா விளக்கு (Perpetual Lamp) இருபது எரிந்துகொண்டிருக்கும். அவைகளையன்றிச் சிறுகாலை, உச்சம்போது, இரா என்னும் மூன்று போதினும் சந்தி விளக்குகள் நாற்பது ஏற்றுவர். நிவந்த மமைத்தவர் நெய்கொண்டேற்றும் விளக்கும் பல. விளக்கிடுதலுக்கும், ஸ்ரீபலி ஒலக்கமாகிய சுவாமி புறப்பாட்டுக்குமாக வேண்டும் எண்ணெய் கொள்வதற்கு ஓராண்டிற்குச் செலவழிந்த நெல் ஆயிரத்து நானூற்று நாற்பதின் கலமாகும். உடையார்க்கும் விடங்கர்க்கும் திருமெய்ப் பூச்சுக்கும் தூபங்காட்டுதற்கும் நிசதம் மூன்றுபலம் சந்தனம் கொள்ளப்பட்டது. நந்தனவனக் குடிகள் அறுவர் பாதுகாக்கும் பூந்தோட்டங்களில் திருப்பள்ளித் தாமம் பறித்து மூவர் தொடுத்தணியக் கொடுப்பர். திருப்பரிக்கலங்களைப் புளியிட்டு விளக்குவாரும், திருமெழுக்கிடுவாரும், பிண்டிகொண்டு நிலவண்ணமிடுவாரும் இருந்தனர். தேவர் சாத்தும் பரிசட்டத்திற்குப் பத்துக்காசு ஏற்பட்டிருந்தது. பரிசட்டம் என்பது இக்காலத்துப் பரிவட்டமென வழங்கும். பரிவட்டம் விக்கிரகத்திநுடை. ஆச்சார்ய போகம்பெற்ற சைவாச்சாரியர், தேவர்க்குத் திருமஞ்சனமாட்டிப் பரிசட்ட மணிந்து சந்தணத் தூளிட்ட புகை காட்டி மாலைசூட்டிச் சாந்தணிந்து நெய்வார்த்தட்ட பொறிக்கறியோடு போனகத்தை, பருப்பு, தயிர், சர்க்கரை, வாழைப்பழம் அடைக்காயுடன் அமுது செய்விப்பர். கண

பதியார்க்குச் சர்க்கரை கலந்து அட்ட அப்பமும் அமுது செய்விக்கப்பட்டது. தேவர்க்குப் படைப்பவற்றை அமுதமெனவும் அர்ச்சிக்கும் மலரைத் திருப்பள்ளித் தாமம் எனவும் கூறுவது பண்டையோர் கண்ட பரிபாஷையாம். தேவர்க்கு அமுதடுவோனைத் திருவாராதனை செய்பவன் என்பர். ஆராதனம் என்னும் பலபொருள் ஒருசொல் ஈண்டுச் சமைத்தல் என்னும் பொருளது. இனி, பூஜை நடைபெறும் பொழுது, தளிச்சேரிப் பெண்டிராகிய பதியிலார் ஆடல் பாடலியற்றுவர். கவரிப்பிணுக்கள் சாமரை அசைப்பர். மொரலியம் (வேய்ங்குழல்) ஊதுவர்; வங்கியம் இயம்புவர்; வீணை தடவுவர்; மத்தளம் வாசிப்பர்; தாளம் தட்டுவர்; கண்டை அசைப்பர்; கைம்மணி இரட்டுவர்; சங்கு முரல்வர்; காளம் ஊதுவர்; செகண்டி அடிப்பர்; உடுக்கை கொட்டுவர்; கரடிகை கலிப்பத் திமிலை ஒலிப்பர்; உவச்சுத்தலைப்பறை முழக்குவர். இனி, மேற்கூறிய பதியிலார், மொரலியன், வங்கியன், வீணைக்காரன், நட்டுவன், உடுக்கை வாசிப்பான், மெய்ம்மட்டி, என்றின்னவர்க்கும், மத்தளம் தாளம் சங்கு, கண்டை முதலாய கருவித்தொழிலாளர்க்கும், குசவன், வண்ணான், கொல்லன் தச்சன் ஊர்ப் பறையனை உள்ளிட்ட தொழிலாளிகட்கும் நிலம் காற்பங்கு முதல் நாலுபங்கு வரையும் கொடுக்கப்பட்டன. பங்கென்றது அரையே இரண்டுமா அளவு கொண்ட நிலமாகும்.

திருவாராதனை செய்வான், தேவர் கரணத்தான் (கோயிற் கணக்கன்), நந்தவனக் குடிகள், நின்மாலிய நீர்போகடுவான், மாலை தொடுப்பார், திருமெழுக்கிடுவார், திருமெய்க்காப்பார், கவரிப்பிணுக்கள், நிலவண்ணமிடுவார், விறகிடுவான், நாயகஞ் செய்வான் என்னும் இவர்களெல்லாம் தினந்தோறும் நெல்லுப் பெற்றனர். இவர்கள் வேலை ஒழுங்குபெற நடக்கின்றனவா எனக் கண்காணிப்பவன் நாயகஞ் செய்பவனாவான்.

இனி, அக்காலத்தில், வேலி நூற்றுக்கல வரிசையில் வந்த நிலம், நூற்றுக்கல வரிசைக் கீழ் நிலம் என்று இரண்டு தரமாக இருந்தது. அவற்றுள், இளநிலம் எனக் காணப்படுவது சாகுபடிக் கேற்றவண்ணம் புதிதாகப் பண்படுத்த நிலம்போலும். நிலத்தை அளக்கும் கோல் உலகளந்த கோல் எனப்பட்டது. இக் கோலால் நூறுகுழி கொண்டது ஒரு மாவாகும்; இரண்டாயிரம் குழி கொண்டது வேலியாகும்; அரையே இரண்டுமாக் கொண்டது ஒரு பங்காகும்.

இனி, இவ் ஒலோகமாதேவீச்சுர முடையார்க்குச் சாசனம் செய்து கொடுத்த நிலம் எழுபத்து நாலரையே முக்காணிக் கீழ் எழுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மாவும், இளநிலம் இருபத்தாறரையே இரண்டு மாவின் கீழ் மூன்று மாவின் கீழ் அரைக்காணி முந்திரிகை கீழ் நான்மாவும் ஆகும். அவற்றுள், முதலாவது நிலமே, நிலநிவந்தம் பெற்றூர்க்குப் பங்கிட்டுத் தரப்பட்டது. இரண்டாவது நிலத்தால் வந்த இரண்டாயிரத்து அறுநூற்று அறுபதின் கலனே நானாழி நெல்லையும், கோயிலிற் பணிசெய்வார்க்கு நாடோறும் கொடுத்தற்கும் ஆலயத்திற்கு ஆவன கொள்வதற்கும் உபயோகித்தனர்.

இனி, மேற்கண்ட நிலங்களை அளவு செய்திருத்தலை நோக்குமிடத்து, அந்நாளையில் எத்துணைச் சிறு பகுதியையும் விடாமல் அளந்திருப்பது நன்கு விளங்கும். இந் நிலங்களை நிவந்தங்கட்காக இட்டபடி கூறும் இச்சாசனம், 'இதனைக் கல்லில் வெட்டுக' என்று அரசன் அருளிச்செய்ய, உடன் கூட்டத்ததிகாரி கோவலூருடையான் காடன் நூற்றெண்மனும் அதிகாரிச்சி எருதன் குஞ்சா மல்லியாலும் இவ்வாலயத்துக் கல்லில் வெட்டுவிக்கப்பட்டது.

இனி, இவ்வாலயத்தில் ஆட்டை விழாவும் திங்கள் விழாவும் நடைபெற்றன. அவற்றுள் ஆட்டைத் திருவிழா சித்திரை மாதத்தில் நடைபெற்று வந்தது. அதற்குச் சித்திரைப் பெருந் திருவிழா என்று பெயர். அவ்விழா இத்துணை நாள் நடைபெறுவது என்று அறிவதற்கிடமில்லை. அவ்விழாவிற்கு ஏற்பட்ட திட்டம் முப்பத்திரண்டு காசு என்பது தெரிகின்றது. காசுக்கு எண்கல நெல்லாதலால், அப்பெருந் திருவிழாவுக்கு இருநூற்று ஐம்பத்தறு கலநெல் ஏற்பட்டிருந்தமை அறியலாம். அவ்விழாவில் கணபதியார் எழுந்தருளு நாளில் அவருக்கு முத்தூணிப்பதக்கு அவல் அமுது செய்விக்கப்படும். கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் விளக்கேற்றுதற்கா

கப் பதினைங்கலனே இருதூணிப்பதக் கறு நாழியுரி நெல் ஏற்பட்டிருந்தது. ஆட்டைத் திருவிழா இவ்வாறாக, இராஜராஜன் பிறந்த நாளாகிய சதயநாள்விழா திங்கள் தோறும் நடைபெற்று வந்தது. அதற்காக மாதம் ஒன்றுக்குப் பத்துக்கல விழுக்காடு பன்னிரண்டு மாதத்திற்கும் நூற்றிருபதின்கல நெல் நிபந்தஞ் செய்திருந்தனர். ஏனையவற்றைப் பின்னர் எழுதப்படும் சாசனங்களிற் காண்க.

இனி, இதுகாறும் கூறிவந்த சரிதக் குறிப்புகளை ஆராய்வதற்கு உதவியாக இருந்த சாசனத்தைப் பலர்க்கும் பயன்படுதல் காரணமாக யான் ஈண்டு எழுதுகின்றேன். இது, இவ்வாலயத்தில் வடபுறம் தொடங்கி மேல் புறத்திலும் தென் புறத்தினுமாகத் தொடர்ந்து செல்வது.

ஒலோகமாதேவீச்சுர சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச்
[செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியுந் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள் ளெல்லா யாண்டும்
தொழுதகை விளங்கும் யாண்டே செழி
[யரைத் தேசுகொள்.

ஸ்ரீ கோவிராஜ கேசரிவன்மராகிய ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உச ஆவது ஸ்ரீ ராஜ ராஜ தேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியாரான ஒலோகமஹாதேவியார் வடகரை இராஜேந்திர ஸிம்ஹவள நாட்டுப் பொய்கை நாட்டுத் தேவதான திருவையாற்றுப்பால் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவீச்வர முடையார்க்கு இந் நாட்டு மிறைக்கூற்றத்து தேவதானம் கலவாய்த்தலை ஸாஸநப்படி நிலம் எழுபத்து நாலரையே முக்காணிக் கீழ் எழுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றத்து தேவதானம் இளநிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ்மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைகீழ் நான்மாவும் இவ் ஒலோகமாதே வீச்வரமுடைய மஹாதேவர்க்கு இட்டபடியில் ஸாஸநத்தில் செய்த நில நிவந்தங்களும் நெல் நிவந்தங்களும் ஒலோகமாதேவி ஈச்வரத்துக் கல்லில் வெட்டுவிக்கவென்று உடன்கூட்டத்ததிகாரஞ் செய்கின்ற கோவலூருடையான் காடன் நூற்றெண்மனையும் அதிகாரிச்சி எருதன் குஞ்சரமல்லியையும் அருளிச்செய ஸாஸநப்படி பார்த்து வெட்டுவித்தபடி உலகளந்தகோலால் நூறுகுழி கொண்டது ஒருமாவாகவும் இரண்டாயிரங் குழிகொண்டது வேலியாகவும் அரையே இரண்டுமாக்கொண்டது ஒரு பங்காகவும் பெற்றார் பெற்றபடி நிவந்தக்காரர் கலவாயில் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்தார்க்கு நீர்போம் ஸ்ரீ குஞ்சரமல்ல வாய்க்காலுக்கு வடக்கே பெறுவார்க்கு இட்டபடி ஆச்சார்ய போகம் பங்கு நாலும் பணிசெய்யும் மாணிகள் அறுவர்க்குப் பங்கு மூன்றும் திருக்களுக்குப் பங்கு அரையும் பதியிலாள் ஒருத்திக்குப் பங்கு ஒன்றரையாகப் பதியிலார் முப்பத்திருவர்க்குப் பங்கு நாற்பத்தெட்டும் நட்டவனுக்குப் பங்கு நாலும் கரணனுக்குப் பங்கு இரண்டும் மெய்ம்மட்டிக்குப் பங்கு இரண்டும் மொரலியனுக்குப் பங்கு இரண்டும் வங்கியனுக்குப் பங்கு இரண்டும் வீணைக்காரனுக்குப் பங்கு இரண்டும் உடுக்கை வாசிப்பானுக்குப் பங்கு இரண்டும் உவச்சுத் தலைப்பறை யொன்றும் மத்தளம் எட்டும் தாளம் ஒன்றும் காடிகை ஒன்றும் கண்டை யாறும் திமிலை யொன்றும் கைம்மணி யொன்றும் சங்கிரண்டும் காளம் நாலும் செகண்டிகை ஒன்றும் ஆக ஆள் இருபத்தறுவர்க்கு இருகலனே முக்குறுணியாகப் பங்கு பதின்மூன்றரையும் குசவனுக்குப் பங்கு அரையும் வண்ணத்தானுக்குப் பங்கு அரையும் வண்ணானுக்குப் பங்கு அரையும் பிராண உபகாரிக்குப் பங்கு அரையும் காச்சுவானுக்குப் பங்கு அரையும் கொல்லனுக்குப் பங்கு அரையும் மாத்தச்சனுக்குப் பங்கு அரையும் ஊர்ப்பறையனுக்குப் பங்கு காலும் ஆகப் பங்கு எண்பத்தெட்டே முக்காலினால் நிலம் ஐம்பத்து மூன்றேகாலும் ஸாஸநத்தில் நெல் நிவந்தம் செய்த நிவந்தங்களுக்கு நெல்லோ பாதி நில நிவந்தமாக்குக வென்று அருளிச்செய நில நிவந்தம் ஆக்கினபடி, திருவாராதனை செய்வானுக்கு நிசதம் நெல்லு முக்குறுணிக்குப்

பங்கு ஒன்றரையும் தேவர் கரணத்தானுக்கு நிசதம் நெல்லுப் பதக்குக்குப் பங்கொன்றும் நந்தவானக் குடிகள் அறுவர்க்கு நிசதம் நெல்லு தூணி நானாழியும் திருமேனிகளும் திருப்பரிகலங்களும் விளக்க புளிக்கு நிசதம் நெல்லு நாழியும் நின்மாலிய நீர் போகட்டுவானுக்கு நிசதம் நெல்லு முந்நாழியும் ஆக நிசதம் நெல்லு ஐங்குறுணிக்குப் பங்கு இரண்டரையும் அயன சங்கிரம மிரண்டுக்கும் விஷுஸங்கிரம மிரண்டுக்கும் நூற்றெட்டுக் கலசம் ஆடி அருள ஒரு சங்கிரமத்துக்கு நெல்லு பதினைங்கலமாக நாலு சங்கிரமத்துக்கு நெல்லு அறுபதின்கலத்துக்குப் பங்கு ஒன்றும் திங்கள் சங்கிரமம் எட்டுக்கு ஸங்கிரம மொன்றினுக்கு நெல்லு முக்கலமாக ஸங்கிரம மெட்டினுக்கு நெல்லு இருபத்து நாற்கலமும் கார்த்திகை விளக்கீட்டு நெல்லு பதினைங்கலனே இருதூணிப்பதக் கறுநாழியுரியும் இவைச் சோடும் ஏற்றம் அருளிச் செய்த நெல்லு குறுணி ஒரு நாழியும் ஆக நெல்லு பதினறு கலத்துக்கும் புதியிது அமுது செய்தருள நெல்லு அறுபதின் கலத்துக்குப் பங்கொன்றும் உடையார் திங்கள் சதயவிழாப் பன்னிரண்டினுக்கு நெல்லு நூற்றிருபதின் கலத்துக்குப் பங்கிரண்டும் ஆக பங்கு ஒன்பது உள்பட பங்கு தொண்ணூற்று ஏழே முக்காலினால் ஸ்ரீ குஞ்சரமல்ல வாய்க்காலுக்கு வடக்கு இட்டநிலம் ஐம்பத்தெட்டரையே மூன்றுமாவும் தேவற்கு பரிசட்டத்துக்கு ஆண்டுவரை காசுபத்தும் அடைக்காயமுதுக்கு நிசதம் வெறுங்காய் அம்பதும் வெற்றிலைபற்று இரண்டரையும் ஆக ஆண்டுவரை வெறுங்காய் பதினெண்ணாயிரமும் வெற்றிலைபற்று தொள்ளாயிரத்துக்கும் ஆக காசு மூன்று திருமெய்ப் பூச்சுக்கும் சீதாரிக்கும் ஆக நிசதம் சந்தனம் முப்பலமாக ஆண்டுவரை சந்தனம் ஆயிரத்து எண்பதின் பலத்துக்கு காசு ஒன்றுக்கு சந்தனம் அறுபதின் பலமாக காசு பதினெட்டும் சித்திரை பெருந் திருவிழாவுக்குக் காசு முப்பத்திரண்டும் ஆக காசு அறுபத்து மூன்றினால் காசு ஒன்றுக்கு நெல்லு எண்கலமாக நெல்லு ஐஞ்நூற்று நாற்கலத்துக்கு இவ் வடகரையில் இட்ட பங்குகளால் வந்த நிலத்தில் நின்ற காற்பங்கால் வந்த நிலம் மூன்றுமாவும் ஸ்ரீ குஞ்சரமல்ல வாய்க்காலுக்கு தென்கரை புன்செய்யும் ஓடையும் மேடும் படுகையும் விளைநிலமும் ஆகக்கிடந்த பதின்மூன்றே முக்காலே இரண்டுமா அரைக்காணிக் கீழ் எழுமா அரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் ஆகநிலம் பதினலை அரைக்காணிக் கீழ் எழுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் ஆகக் கலவாய்த்தலை நிலம் எழுபத்திரண்டரையே மூன்றுமாவரைக்காணிக் கீழ் எழுமா வரையே முந்திரிகைக் கீழரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றத்துத் தேவதானம் இளநிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ் மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்மாவில் உடையார்க்கு திருவமிர்தரிசி போது குறுணியாக நாலுபோதைக்கு அரிசி தூணியும் ஒலோகவிடங்க தேவர்க்கு திருவமிர்தரிசி போது நானாழியாக மூன்று போதைக்கு அரிசி குறுணி நானாழியும் கணபதியார்க்குத் திருவமிர்தரிசி போதிரு நாழியாக மூன்று போதைக்கு அரிசி அறுநாழியும் இவர்க்கேய் அப்பவமிர்துக்கு அரிசி நாழியும் ஆக ஒரு நாளைக்கு அரிசி தூணிப்பதக்கு முந்நாழிக்கு ஐஞ்சிரண்டு வண்ணத்தால் வந்த நெல்லு கலனே முக்குறுணி எழுநாழியுரியும் பருப்பமிர்து போதுரியாக நாலுபோதைக்கு மாகப் பருப்பமிர்து இருநாழிக்கு நெல்லறு நாழியும் கறியமிர்துக்கு போது நெல் இருதூணியாக நாலுபோதைக்கு நெல்லு குறுணியும் மிளகு ஆழாக்கே இருசெவிடரைக்கும் நெல்லறு நாழியும் போனகத்துக்கும் பொரிக்கறியமிர்துக்கும் நிசதம் நெய் நாழிக்கு நெல்லுத் தூணியும் தயிரமிர்து நிசதம் நானாழிக்கு நெல் குறுணி நானாழியும் சர்க்கரையமிர்து உடையார்க்கு நிசதம் முப்பலமும் கணபதியார்க்கு அப்ப அமிர்துக்குச் சர்க்கரை ஒரு பலவரையும் ஆகச் சர்க்கரை நாற்பலவரைக்கு நெல்லு நானாழி உரியும் வாழைப்பழம் நிசதம் எட்டினுக்கு நெல்லு நானாழியும் மஞ்சள் காப்பு நிசதம் அரைப்பலத்துக்கு நெல்லு நாழியுமாக ஒரு நாளைக்கு நெல்லு ஒரு கலனே குறுணி ஒரு நாழியாக ஆண்டுவரை நெல்லு எழுநூற்றைம்பத்து முக்கலனே இருதூணி குறுணிக்கு வேலி நூற்றுக்கல வரிசைக் கீழ் நிலம் எழரையே முக்காணி. திருநொந்த விளக்கு இருபதினுக்கு எண்ணெய் அஞ்ஞாழி

யும் ஸந்திவிளக்கு நாற்பதினுக்கு போதுநாழியாக மூன்று போதைக்கு முந்நாழியும் ஸ்ரீபலி ஒலக்கத்துக்கு எண்ணை நானாழியும் ஆக எண்ணெய் குறுணி நானாழியால் நாழி எண்ணைக்கு நெல்லு தூணியாக நெல்லு நாற்கலத்தினால் ஆண்டுவரை நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின் கலத்துக்கு வேலி நூற்றுக்கலம்மாக வந்த நிலம் பதினாலே எட்டு மாவும் திருப்பள்ளித் தாமம் பறித்துதொடுப்பார் மூவர்க்கு நிசதம் நெல்லுக் குறுணிநானாழியும் திருமெழுக்கிடுவார் நால்வர்க்கு நிசதம் நெல் குறுணி நானாழியும் நாயகஞ் செய்வானுக்கு நிசதம் நெல்லுப்பதக்கும் விறகிடுவானுக்கு நிசதம் நெல்லுப் பதக்கும் திருமெய்க் காப்பார்கள் இருவர்க்கு நிசதம் நெல்லுப் பதக்கும் கவரிப்பிணாக்கள் பதினாறுவர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முந்நாழியாக தூணிப் பதக்கும் நிலவண்ணமிட உம்மாரப் பிண்டிக்கு நிசதம் நெல்லு நாழியும் நிலவண்ணமிடுவாருக்கு நிசதம் நெல்லு முந்நாழியும் ஆக நெல்லுக் கலனே முக்குறுணி நானாழியினால் ஆண்டு வரை நெல்லு நானூற்று அறுபத்தைங் கலத்துக்கு வேலி நூற்றுக்கல வரிசையால் இட்ட நிலம் நாலரையே மூன்றுமா. ஆக பல நிவந்தத்தாலும் இளநிலத்தில் இட்ட நெல்லு இரண்டாயிரத்து அறுநூற்றைம்பத்து எண் கலனே இருதூணிக் குறுணிக்கு இட்ட நிலம் இருபத்து ஆறரையே ஒருமா முக்காணி. சித்திரைப் பெருந்திருவிழாவில் கணபதியார் திருவிழா வெழுந்தருளி அவல் முத்தூணிப்பதக்குக்கு நெல்லுகலனே முக்குறுணி நானாழிக்கு அருளிச்செய்ய இட்ட நிலம் காணிக் கீழ் மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்மா. ஆக நெல்லு இரண்டாயிரத்து அறுநூற்று அறுபதின் கலனே நானாழிக்கு இளநிலம் இருபத்தாறரையேஇரண்டுமாவின் கீழ் மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ்நான்மாவும் நிலமும் நெல்லும் நேர். இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

தஞ்சாவூர் ஜில்லாவின் வரலாறு.—இச் சிறந்த நூல், ஸ்ரீமான் ஆர். விசுவநாதய்யரவர்களால் இயற்றப்பட்டது. சிலகாலத்துக்கு முன், தஞ்சாவூர் ஜில்லா கல்வி அதிகாரியாயிருந்த ஸ்ரீமான் C. D. சுப்பிரமணிய செட்டியாரவர்கள் முன்னுரை கொண்டது. அநேகம் அழகிய படங்களுடன் அணா 3.

“ தென்னிந்திய நாகரிகத்திற்கும் இலக்கியத்திற்கும் தமிழ்ப் பாஷை புரிந்த உதவிகள் ”

“ CONTRIBUTION OF TAMIL TO THE CIVILISATION AND LITERATURE OF SOUTH INDIA ”

தமிழ்

தமிழ்ப் பாஷையானது தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களுக்குத் தாய்மொழி. அது (மொத்தமாகத்) ‘ திராவிடம் ’ எனவும் கூறப்படும். அதைப் பேசுபவர் ‘ திராவிடர் ’ என்றழைக்கப்படுபவர். மேலும் அது தென்னாட்டில் பயிலும் மற்ற மொழிகளுக்குத் தாயாகவும், யாவராலுந் தழுவப்படும் ஒரு பிராகிருதமாயுமிருக்கிறதென்று, அநேக பாஷா விற்பன்னராயிருந்த பாபு ராஜேந்திரலால் மித்ரா (Babu Rajendra Lal Mitra) கூறியிருக்கிறார். திராவிட பாஷைகள் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவு, குடகு என அறுவகைப்படும். இவற்றுள் தமிழ்ப் பாஷைதான் பெரும்பாலுந் தென்னிந்தியாவில் பரவிற்றென்று பண்டை நூல்கள் சாற்றுகின்றன. இது தெக்கணத்தில் அநேக இடங்களில் பேசப்பட்டு வருகின்றது. தமிழ்ப் பாஷை பேசுஞ்சனங்கள் சுமார் 210 லக்ஷமென்று ஒருவர் கூறியுள்ளார். எனவே, தென்னிந்தியாவில் பண்டைக் காலத்தில் பயிலப்பட்ட பாஷை பெரும்பாலுந் தமிழேயாகும். இன்னும் தமிழ் மிகவும் சொல் வளம் பொருந்திய பாஷை என்பதற்கு யாழ்ப்பாணத்திலிருந்த அமெரிக்கன் பாதிரிமார்கள் 58,500 சொற்கள்கொண்ட ஒரு அகராதிப் புத்தகம் தொகுப் பித்திருப்பதே போதிய சான்றாகும்.

இத்தகைய பாஷை தென்னிந்திய நாகரிகத்திற்கும் இலக்கியத்திற்கும் செய்த உதவிகள் என்னவென்பதைச் சற்று ஆராய்வோம் :—

தமிழ் நாடு

“ தமிழ் நாடானது, நெடுங்காலம் சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டி மண்டலம் என்று மூன்று பிரிவினதாய் முடியுடை வேந்தர் மூவர்க்குரியதாய்விளங்கியிருந்தது” சேரர்

கள் வஞ்சியிலும்,—சோழர்கள் புகார், உறையூர், தஞ்சை, திரிசிராப்பள்ளியிலும், பாண்டியர்கள் மதுரை முதலிய இடங்களிலும் அரசு செலுத்தி வந்தனர். இவ்வரசியல்களை முதலில் நாட்டிய முன்னோர் இன்னாரென்றும், இவைகள் எப்பொழுது நாட்டப்பட்டனவென்றும் இஞ்ஞான்றுந் தெரியவில்லை. "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருங் குடிகள் இம் மூவேந்தரும்" என்று பரிமேலழகர் கூறியதை ஒப்புக் கொள்வதே போதியதாகும். இவர்கள் ஆளுகையில் அடங்கிய விஸ்தீரணம் முழுமையும் "வட வேங்கடந் தென்குமரி" கட்கு இடைப்பட்டதாகும். இந்நிலப்பரப்பைத்தான் தமிழ் நாடு அல்லது தமிழகம் என நூலோர் கூறுவர்.

நாகரிகம்: அதன் காலம்

இந்நாட்டாரது நாகரிகத்தைப்பற்றி வெகுவாக அக்காலத்து இலக்கண, இலக்கியங்களாலும் பின்வரும் விஷயங்களாலுங் கண்டு கொள்ளலாம்.

(1) நாட்டின் அமைப்பு. (Physical Features)
(2) வர்த்தகம் அல்லது வணிக மேம்பாடு. (Trade and Commerce.)
(3) ராஜரிகம். (Government.)
(4) கல்வி. (Education.)
(5) கலைகள் (சிற்பம் முதலியன.) (Fine arts and Architecture.)
(6) மதம், நீதிநூல் முதலியன. (Religion & Ethics.)

தமிழர்களது நாகரிகம் கி. மு. 6 அல்லது 7-வது நூற்றாண்டிலேயே ஆரம்பித்தது என்பது பலருடைய கொள்கை. இதைப்பற்றிய விவரம் பழைய நூற்களாலும், சாசனங்களாலும் அறியலாகும். எனவே சேர, சோழ, பாண்டியர்களது காலத்தில் நாகரிகம் மிகவும் உண்டாயிற்றென்று கூறுவது ஏற்புடைத்தாகும். இந்நாகரிகம் இயற்கையாகவே உண்டாயிற்று. (Indigenous in its origin.)

(1) நாட்டின் அமைப்பு:— ஊர்களின் கோட்டைகட்கு வெளியே தேவர் கோட்டங்களும், பொது ஸ்தலங்களும், சைநப் பள்ளிகளும், சோலைகளும், பொய்கைகள் முதலியனவும் மிகுந்திருந்தன. தவ முனிகளும் ஞானிகளும், சாஸ்திர வறிஞரும், நிறைந்திருந்தனர். கோட்டைகளைச் சூழ்ந்துள்ள புறஞ்சேரியில் அரண் காவல் புரியுஞ் சேனைகளும், இதர தேசத்தாசர்கள் தங்குவதற்கான மாளிகைகளு மிருந்தன. கோட்டைகளைச் சுற்றி அகழிகளிருந்தன. அவற்றுள் முதலைகளும், பெரு மீன்களுமிருந்தன. இக் காரணங்களா லன்றோ

"புறஞ்சிறைப் பொழிலும், பிறங்கு நீர்ப் பண்ணையும்
இறங்கு கதிர்க் கழனியும், புள்ளெழுந் தார்ப்ப"

என்று நூற்களில் கூறியுள்ளது. அன்றியும், நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்ற நால்வகைப் பாதுகாவலுமிருந்தது. கோட்டைகளின் மதில்களின்மேல் பகைவரை வெல்லுதற்குரிய எந்திரங்கள் பல இருந்தன.

"வந்தெறி பொறிகள் வகை மாண்புடைய கடி [மதில்"
"வளைவிற் பொறியுங்
கருவிரலூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகரு குழிசியும்
காய் பொன்னுலையுங் கல்லிடு கூடையும்"

என்பவை கவனிக்கற்பாலன.

ஜனசாரம் :—(Social Intercourse) ஜனங்கள் தங்கள் அந்தஸ்திற்கும், ஆசாரத்திற்கு மேற்றவாறு தத்தமக்குரிய விடங்களில் வசித்துவந்தனர். நகரானது அகநகர், புறநகர் என இருவகைப்பட்டிருந்தது. இவ்விடங்களில், காவலாளிகள் வதியுமிடமும் செம்படவர், உப்பு விற்போர், கள் விற்போர், பிட்டு, அப்பங்கள் விற்போர் ஆகிய இவர்கள் வசிக்கும் வீதிகளும், இவ்வீதிகளையடுத்து, குயவர், செம்பு கொட்டிகள், வெண்கலக் கன்னார், பொற் கொல்லர், தச்சர், மட்பாவை செய்வோர், தையற்காரர், மாலைகட்டுவோர், சோதிடர், பாணர் முதலியோர் தெருக்களும், சங்கறுப்போர், இரத்தினப் பணியாயாளர் இவர்களிருக்கையும், நாடகக் கணிகையரிருப்பிடமும், கூலவகை விற்போர் தெருவும், சூதர், மாகதர், வேதாளிகர், பொதுமகளிர் தெருக்களும், ஆடை செய்து விற்போர், பொன்வியாபாரிகள், இரத்தின வியாபாரிகள் தெருக்களும், அந்தணர் அக்கிரகாரமும், அரச வீதியும், மந்திரிகள் வீதியும், அரசாங்க அதிகாரிகள் வாழுந்தெருக்களும், பல, பாங்குடனிருந்தன.

ஞானசௌந்தரி

அல்லது

சுபாங்கியின் சுயம்வரம்

[ஸ்ரீமான் ஐ. சுந்தரம் அவர்கள், பி.ஏ.,பி.எல்.]

(178-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீட்டைப் பற்றியோ சொத்தைப் பற்றியோ ஒன்றையும் கவனிப்பதை ஒழித்து, தினம் ஒரு வேளைமட்டும் உண்டு மற்றப்போதெல்லாம் ஏதோ யோஜனைகள் செய்வதிலும் பழைய கட்டுகளைப் படிப்பதிலும் போதைச் செலவிடலானுர்.

இருபத்தோராவது அதிகாரம்

மனம்மாற ஜகம் மாறும்

அருமை மகள் இறந்தது முதல், ராமாநுஜ நாயக்கர் மனம் முழுவதும் மாறிப்போய் விட்டது. தனக்கு நேர்ந்த துன்பத்தின் வேகத்தைக் கொண்டு பிறர் துன்பத்தை ஒருவாறு உணர்ந்தார். "வையகம் முழுவதும் உன்னுடன் வருந்துவதை இன்றே நீ அறிந்தாய்" என்று புத்தபகவான் கிருசா கௌதமிக்கு எடுத்துச் சொன்ன தன் உண்மை நாயக்கர் மனதில் ஒருவாறு விளங்கியது. விளங்கவும் மற்றவர்மேல் அவருக்கு அன்பும் உருக்கமும் பெருகின. முக்கியமாக தன்னுல் பல துன்பங்களை யடைந்து ஊர் விட்டுச் சென்ற நாராயணய்யரைக் குறித்து முன் கொண்டிருந்த மனப்பாங்கு முழுவதும் மாறிவிட்டது. பொய் வழக்குத் தொடர்ந்து நாராயணய்யரிட மிருந்து அபகரித்த சொத்து ஒரு தாங்க முடியாத பெரும் பாரம்போல் அவர் மனதை வருத்திற்று. பல நாள் பலவிதமாக யோஜித்த பிறகு, தீவினையால் கைப்பற்றிய பொருளை நீத்து, நாராயணய்யருக்குத் தான் செய்த தீங்கிற்குத் தகுந்த பரிகாரம் செய்யவேண்டியது அவசியம் என்று முடிவு செய்தார். ஆனுல் எவ்விதம் அதைச் செய்து முடிப்பது என்று மட்டும் விளங்கவில்லை. பிறரிடம் யோஜனை கேட்டுச் செய்யக் கூடிய காரியமல்ல. ஒவ்வொரு சமயம் தீவிரமான மனவெழுச்சி யுண்டாகிய காலத்தில், யாராவது ஒரு தேர்ந்த வக்கிலிடம் நடந்த விஷயங்களை நடந்தபடி சொல்லி யோஜனை கேட்கலாமென்றெண்ணினுர். ஆனுல் அப்படிச்செய்வதில் பயனென்றுமில்லை என்பதும் அவருக்கே வெளியாயிற்று. வக்கீல்மார்கள் இருக்கும் தோரணையில் அவர்களுள் ஒருவரும் தன் மனப்புண்ணை உள்ளபடி உணர்ந்து அதற்கு ஏற்ற யோஜனை சொல்ல முடியாது என்பது அவருக்கே புலப்பட்டது. தன் கதையைக் கேட்டதும் "உலக ஞானமற்ற பேதை" என்று நகைக்கும் குணமே அவர்களிடம் படிந்துள்ளது என்பதை அறிவார். ஆனதால் வக்கீல்மார்களிடம் யோஜனை கேட்பதில் பயனில்லையென்று தீர்மானித்தார். பிறகு வேத சாஸ்திர சம்பன்னர்களான பிராமணோத்தமர்கள் யாரையாவது நெருங்கி, அவர்களிடம் தன் முறைப்பாட்டை உள்ளபடி எடுத்துக்கூறி தன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று யோசித்து அப்படியே செய்வதாகத் தீர்மானித்தார்.

இருபத்திரண்டாவது அதிகாரம்

"பிராமணோத்தமர்கள்" அபிப்பிராயம்

பூலோக கைலாசம் என்றும், தக்ஷிண பஞ்சநதம் என்றும் சிறப்பித்துக் கூறப்படும் திருவையாற்றில் வசித்துவந்த வேதமூர்த்தி யக்ஞ நாராயண தீக்ஷிதர் என்பவர் தமிழ் நாடு முழுவதிலும் அப்பாலுங்கூட சிறந்த பண்டிதர் என்று பேர்பெற்றிருந்தார். எல்லா வேதங்களையும் எல்லா சாஸ்திரங்களையும் படித்தவர். வைதீகக் கிரியைகளைப்பற்றி எல்லா நுட்பங்களும் அறிந்தவர். பெரிய பெரிய பண்டிதர்களாலும் சிக்கெடுக்க முடியாத சாஸ்திர விவகாரங்களை யக்ஞ நாராயண தீக்ஷிதர் ஒரு சிரமுமில்லாமல் விதாயம் செய்யக்கூடியவர். கர்ம காண்டத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு தீக்ஷிதர் கொடுக்கும் அபிப்பிராயமே கிருஷ்ணு முதல் தாம்பிரவர்ணி வரையில் செலாவணி. வைதீக விவகாரங்களில் இவர் தீர்மானப் பத்திரந்தான் சட்ட விஷயங்களில் அட்வொகேட் ஜனரல் அபிப்பிராயப் பத்திரம்போன்றது. இவ்வளவு கீர்த்திபெற்ற உத்தம வேதவித்தினிடம் தன்னுடைய மனப்புண்ணை எடுத்துச் சொன்னுல் அதை அவர் நிச்சயம் ஆற்றிவிடுவார் என்று எண்ணி நாயக்

பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே யுள.

218377

நுஜ நாயக்கர் திருவையாற்றுக்குப்போய் தீக்ஷிதரவர்களைப் பார்த்தார். அவரைப் பார்த்ததும் நாயக்கர் மனதில் அமைதி சிறிது ஏற்பட்டது. தீக்ஷிதருடைய கம்பீரமான தோற்றமும், அவர் காதுகளில் ஊசலாடும் மகரகுண்டலங்களும் அவர் மார்பில் தவழும் உருத்திராக்ஷ கண்டியும் உடம்பில் துலங்கும் விபூதி புண்டரமும் கையில் வைத்திருந்த எடும்,நாயக்கர் மனதைக் கவர பிராம்மண்யம் என்னும் அதுவே உருக்கொண்டதுபோல் அவர் கண்களுக்குக் காணப்பட்டது. நாயக்கர் அடியற்ற மரம்போல் அவர் முன்விழுந்து மும்முறை நமஸ்கரித்து, தான் கேட்கவந்த விஷயத்தை நிதானமாகச் சொல்லவாரம்பித்தார். விஷயம் தன்னுடையது என்பதைச் சொல்லாமல் தனக்கு மிகுந்த நெருங்கிய சிநேகிதர் ஒருவர் விஷயம் என்பதாக எடுத்துச்சொன்னார். அந்த நண்பர் வேறொருவர் பேரில் பொய்ப் பிராது தொடர்ந்து அவர் சொத்தை அபகரித்துவிட்டதாகவும், இப்போது அதற்கு மிகவும் வருந்துவதாகவும் அதற்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்துகொள்ள விரும்புவதாகவும் சொன்னார். இதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கோர்ட்டுகள் மூலமாகப் பரிகாரம் தேடுவதானால், அவர் செய்த குற்றம் வெளியாகி தண்டனைக்குள்ளாக வேண்டிவருமாதலால் அப்படிச் செய்யமுடியாமல் போனதையும் சொன்னார். அச்செய்கை தன் நண்பர் மனதை உறுத்திக்கொண் டிருப்பதாகவும் சமீபத்தில் அவருடைய ஒரேமகளும் இறந்து போய்விட்டதாகவும் அதுமுதல் அவர் மனதில் அவர் செய்த பாபமூட்டையை எப்படி இறக்குவது என்ற ஒரே எண்ணம் குடிகொண்டு வருத்துவதாகவும் சொன்னார். தீக்ஷிதர் யோசித்து மறுநாள் பதில் சொல்வதாகச் சொல்லி, நாயக்கரை அனுப்பிவிட்டார். நாயக்கருக்கு ஏற்பட்ட புண் மனப்புண். அதைத் தீர்ப்பதற்கு அவர் மனதை சாந்தப் படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. அவர் செய்த தீங்கின் விளைவை மாற்ற ஒரு வழியை எடுத்துக் காட்டினால், அவர் மனம் அமைதிபெறும். ஆனால், தீக்ஷிதருக்கு இந்த யோசனை ஒன்றுமே தோன்றவே யில்லை. உள்ளத்தின் போக்கையறிந்து, லோக ஞானத்தைக் கொண்டு 'ஏற்றதைச் செய்ய முயலாமல் சாஸ்திர ஞானம் எனும் பாரத்தினடியில் நசுக்குண்ட தீக்ஷிதர் சுவடிகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். மறுநாள் நாயக்கர் வந்ததும் அவரிடம் பிராயச்சித்த காண்டத்தைப் பரிசிலனை செய்து பார்த்துக் கண்டு பிடித்ததை விவரமாக எடுத்துரைத்தார்.

"நான் எல்லா சாஸ்திரங்களையும் கவனித்துப் பார்த்துவிட்டேன். உங்கள் நண்பர் செய்ததாக நீர் சொல்லும் காரியம் கர்மகாண்டத்தின்படி ஒரு பாபந்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது மகாபாதகமில்லை. உப பாதகம். உபபாதகங்களுள் ஒரு பெரிய உப பாதகம். இதற்குச் சரியான பிராயச்சித்தம் கண்டுபிடிப்பது இலகுவான காரியமல்ல. உங்களுக்காகவென்று நான் வெகு சிரமப்பட்டு நேற்று முழுவதும் பிராயச்சித்த காண்டத்தை யாராய்ந்து தகுந்த பிராயச்சித்தம் நிர்ணயித்திருக்கிறேன். அதன்படி உங்கள் நண்பர் பிராயச்சித்தம் செய்து விட்டால் அப்பாபத்தினின்றும் விடுபடுவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இந்தப் பிராயச்சித்த முறையை இந்த ஓலையில் எழுதியிருக்கிறேன்" என்று சொல்லி ஓர் ஓலையை நாயக்கர் கையில் கொடுத்துவிட்டு அவரைப் பார்த்து மறுபடியும் பின்வருமாறு சொன்னார். "இதில் கண்டபடி உங்கள் நண்பர் சேது ஸ்நானம் செய்து சேதுக்கரையில் கோதானம் செய்து, பிறகு ஸஹஸ்ர பிராமணபோஜனம்செய்யவேண்டும். கூடுமானால் தனுஷ்கோடியிலேயே ஸஹஸ்ர பிராம்மண போஜனம் செய்துவைப்பது சிலாக்கியம். முடியாவிட்டால் அவர் ஊருக்கே வந்து ஸஹஸ்ர பிராம்மண போஜனம் செய்து முடித்துவிட்டு மறுபடி தனுஷ்கோடிக்குச் சென்று சேதுஸ்நானமும் செய்து தச தானமும் செய்யவேண்டும். அதற்குமேல் ராமேசுவரம் சென்று கோடிதீர்த்த ஸ்நானம் செய்து முடிக்க வேண்டும். யாத்திரா காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய தீக்ஷாநியமம், புராணபடனம் முதலியவைகளைப்பற்றி நான் கொடுத்திருக்கும் இந்த ஓலையில் விஸ்தாரமாக எழுதியிருக்கிறேன். அதையும் தவறாமல் அனுஷ்டிக்கவேண்டும்" என்று சொன்னார்.

நாயக்கர் ஓலையைப் பெற்றுக்கொண்டு மறுபடி தீக்ஷிதரை நமஸ்கரித்து விடை பெற்று

வீடு வந்துசேர்ந்தார். தீக்ஷிதர் சொன்னதை யோசித்து யோசித்துப் பார்த்தார். திருப்தி யுண்டாகவில்லை. பிறர் பொருளை அபகரித்துப் பிறகு அதைத் திருப்பிக் கொடுக்காமல் பிராயச்சித்தம் செய்துவிடுவதால் பாபம் தீர்ந்துவிடும் என்று சொல்வது அவர் மனதிற்கு ஏற்றமுடையதாகத் தோன்றவில்லை. இருந்தாலும், மற்ற விதாயகர்களையும் கேட்டால் யாராவது வழிகாட்டமாட்டார்களா வென்று எண்ணி, பல ஊர்களுக்குச் சென்று பல பண்டிதர்களைக் கேட்டார். காஞ்சீபுரம் உபய வேதாந்த ரங்க கோபால தாத்தாச்சாரியார், அண்ணனூர் மன்னன் மணவாள பட்டாச்சாரியார், சிதம்பரம் சாஸ்திர விநோத ஆநந்த தாண்டவ தீக்ஷிதர், கங்கையூர் வேதவித்பன்ன முக்கியப் பிராணசாரியார், தாடங்குளம் மீமாம்ச பஞ்சானன கோதண்டராம சிரௌதிகள், கஞ்சனூர் தர்க்க கேஸரி நீல கண்ட வாஜபேயர் முதலான பற்பல நிபுணர்களைப் பார்த்துக் கேட்டார். எல்லாரும் ஒரே மாதிரியாகச் சொன்னார்கள். தீர்த்தஸ்நானம் பிராம்மண போஜனம் கோதானம் ஸ்வர்ண தானம் இவைகளையே ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொன்னார்கள். ஆனால் நாயக்கருக்கு இவைகள் ஒன்றும் திருப்தி யளிக்கவில்லை. திரும்பித் தன் ஊர்வந்து நண்பர்களிடம் எல்லாவற்றையும் சொன்னார். அவர்களில் ஒருவர் நாயக்கரைப் பார்த்து, "நீங்கள் இவ்வளவு தூரம் சுற்றுவானேன்? திரிசிராப்பள்ளியிலேயே ஒரு பெரியவர் வந்திருக்கிறார். அவர் பரந்த நூலாராய்ச்சியும் ஆழ்ந்த தேர்ச்சியும் உள்ளவர். ஆனால் புத்தகப்படிப்பினால் உலக அறிவு அழியாமல் மனிதர்களின் உள்ளத்தையறிந்து தன்னிடம் வருபவர்களுக்கு அவரவர் மனப்போக்குக்கு ஏற்றவிதமாய் உபதேசம் செய்கிறார். அவர் சொல்லும் வார்த்தைகள் உலக வாழ்க்கையின் உண்மைகளை ஒட்டியே இருக்கின்றன. அவரை நீங்கள் பார்த்து உங்கள் மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டால் அதை நீக்குவதற்கு ஒருவழி சொல்லுவார்" என்றார்கள். ராமாநுஜ நாயக்கர் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் உள்ளத்தை வருத்தும் விஷயமென்னவென்பது தெரியாது. அன்புடன் வளர்த்துவந்த ஒரேபெண் இறந்து போனது ஒன்றுதான் அவர் மனக்கவலைக்குக் காரணம் என்று எண்ணியிருந்தார்கள். ராமாநுஜ நாயக்கர் திரிசிராப்பள்ளிக்கு வந்திருக்கும் பெரியவர் யார் என்று கேட்க, அவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்த அவர் நண்பர், "அப்பெரியவர் ஒரு பரதேசி. பூர்வீகம் ராமநாதபுரம். வெள்ளியங்கிரிப் பரதேசியார் என்று பெயர். வயது எண்பதுகூட இருக்கும்போலிருக்கிறது. பரதேசியாயிருந்தாலும் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்களுடைய கவலைகளை நன்கு அறிந்துகொள்ளக் கூடியவராக இருக்கிறார். தமிழில் அவருக்கு நல்ல அறிவு இருக்கிறது. வடமொழியும் தெரியும் போல இருக்கிறது. ஆனால் அவர் பேசும்பொழுது வெகு சாதாரணமாகவே பேசுகிறார். நிறைகுடம். அநேகம் பேர்கள் அவரிடம் வார்த்தையாடி அதனால் அவரவர்கள் மனக்கவலையை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவசியம் அவரைப் பார்க்கவேண்டும்" என்று சொன்னார். ராமாநுஜ நாயக்கர் பரதேசியிடம் போய்ச் சொல்லிக் கொள்ளுவதில் என்ன பயன் கிடைக்கப் போகிறது என்று உபேக்ஷையாக இருந்துவிட்டார். வேதக் கடலை அள்ளிக்குடித்து சாஸ்திர தீபமென்று பெயர் பெற்ற உத்தம பிராமணர்களால் செய்யமுடியாத காரியத்தை ஒரு ஏழைப் பரதேசியா செய்யப்போகிறார் என்று எண்ணினார். பிறகு என்னவானாலும் இப்பரதேசியையும் பார்த்துவரலாமே, அதிக தூரங்கூடப் போக வேண்டியதில்லையேயென்று எண்ணி, திரிசிராப்பள்ளிக்குப் போய் விசாரித்தார். விசாரித்ததில் வெள்ளியங்கிரிப் பரதேசியார் அதற்கு இரண்டு நாட்கள் முன்பாக சென்னைப் பட்டணம் போய்விட்டார் என்று தெரிந்து கொண்டார். திரும்பிவந்து விடுவதாகச் சொல்லிப் போயிருப்பதாகவும், எப்பொழுது திரும்பி வருவாரென்பது தெரியவில்லையென்றும் அறிந்தார். அவ் வேழைப் பரதேசியைப்பற்றி நாயக்கருக்கு முதல் முதற்கொண்டே தாழ்ந்த அபிப்பிராயந்தானே. ஆனதால் அவரைத் தேடிக்கொண்டு சென்னைப்பட்டணம் போவது வீண் என்று தீர்மானித்து ஊர் திரும்பினார்.

இருபத்துமூன்றும் அதிகாரம்
பழைய சிநேகிதர்கள்

சென்னைக்கு வந்தது முதலாகவே மகாதேவனுக்கு அருளானந்தம், ஞானசௌந்தரி இவர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மிகுதியாக இருந்தது. ஆனால் அவர்கள் இருப்பிடம் தெரியவில்லை. தெரிந்துகொள்வது அதிக சிரமமல்ல. ஆயினும் முதலில் சில நாள்கள் வரை அதைத் தெரிந்துகொள்ளும் காரியத்தில் இறங்க அவனுக்கு ஒழியவில்லை. அருளானந்தம் சர்க்கார் வைத்திய கலாசாலையில் படித்துவந்தான். அவனுக்கும் மகாதேவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை பலமாக இருந்தும், மகாதேவன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்யப் பல நாள்கள் வரை ஒழிவு கிடைக்கவில்லை. பிறகு ஒரு நாள் ஞானசௌந்தரி வற்புறுத்தியதன்மேல் அருளானந்தம் மகாதேவன் படித்துக்கொண்டிருந்த காலேஜுக்குப்போய் மகாதேவனைக் கண்டு அவனுடன் திருவல்லிக்கேணியில் அவன் வீட்டுக்குச் சென்று வெகுநேரம் பேசிக்கொண் டிருந்தான். தன் இருப்பிடத்தைத் தெரிவித்து மறுநாளே அங்கு வரும்படியாக மகாதேவனை வேண்டிக்கொண்டான். ஞானசௌந்தரியின் தூண்டுதலின் பேரில்தான் தான் அன்று தினம் வந்ததாகவும் அவளும் மகாதேவனைப் பார்க்க விரும்புவதாகவும் தெரிவித்தான். மகாதேவன் மறுநாளே அருளானந்தம் இருப்பிடத்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டான்.

மகாதேவன் அருளானந்தத்தினிடம் ஒப்புக் கொண்டபடியே இராயப்பேட்டையிலுள்ள தேவ ஆசீர்வாதம் குடியிருந்த வீட்டிற்குப் போனான். அவன் தாயார் காலமான பிறகு, அப்போதுதான் முதல் தடவை ஞானசௌந்தரி அவனைச் சந்தித்தாள். இறந்துபோன தாயாரைப்பற்றியே ஞானசௌந்தரியும் அருளானந்தமும் மகாதேவனோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். ஞானசௌந்தரி தமிழிலும் சங்கீதத்திலும் முன்னைக் காட்டிலும் அதிகத் தேர்ச்சிப் பெற்றிருந்ததை மகாதேவன் தெரிந்துகொண்டான். முன்போலவே அடிக்கடி வரவேண்டுமென்று ஞானசௌந்தரியும் அருளானந்தமும் மகாதேவனை வேண்டிக்கொள்ள, மகாதேவனும் அப்படியே செய்வதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு வீடு சென்றான்.

மகாதேவன் அடிக்கடி ஞானசௌந்தரி வீட்டிற்குப் போய் அவளுடன் வேடிக்கையாய்ப் பேசிவந்தான். அருளானந்தம் காலேஜில் அவனுக்கு சுவல்ப ஓய்வு நேரந்தான் கிடைத்தது. ஆதலால் ஞானசௌந்தரியும் மகாதேவனும் பேசுங்காலங்களில் அநேகமாக எப்போதும் அவர்களைத் தவிர வேறு ஒருவரும் இருக்கக்கூடவில்லை. ஒவ்வொரு நாள் அந்திப் பொழுதில் மகாதேவன் ஞானசௌந்தரியை கடற்கரைக்கு அழைத்துச்செல்வான். தாயார் இறந்துபோன பின் ஏற்பட்ட மனச் சோர்வு வீட்டுக் கவலைகள் எல்லாம் ஞானசௌந்தரியுடன் சம்பாஷிப்பதில் மட்டுப்பட்டுப் போய்விட்டன. ஞானசௌந்தரிக்குத் தமிழ் சொல்லிக்கொடுப்பது என்ற ஏற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது. படிப்பு தோரணை முன்போலத்தான். ஏதாவது புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டும், பாட்டுகள் பாடிக்கொண்டும் காலங்கழிப்பதே வழக்கமாயிற்று. வீட்டில் இருக்கும் சமயங்களில் மகாதேவன் கவனித்துவந்த ஆசாரம் ஞானசௌந்தரியிடம் பொழுது போக்கும் சமயங்களில் ஒதுக்கி வைக்கப்பட்டது. ஞானசௌந்தரி வீட்டில் தேநீர் பருகுவதும், மற்ற சிற்றுண்டிகள் எடுத்துக்கொள்வதும் சாதாரண வழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு சமயங்களில் மகாதேவன் ஞானசௌந்தரியை சிற்றுண்டிச் சாலைகளுக்கு அழைத்துப் போவதும் உண்டு. திரிசிராப்பள்ளியில் இருந்த காலத்தில் ஞானசௌந்தரிக்குச் சிறு வெகுமதிகள் அளித்துவந்ததுபோலவே அழகிய சிறு சாமான்களை அடிக்கடி வாங்கி அவளுக்குக் கொடுக்கும் வழக்கமும் மறுபடி ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதம் சிலகாலம் வெகு மனோரம்மியமாகச் சென்றது.

இருபத்து நான்காம் அதிகாரம்
மிஸ்டர் சௌரியப்பன்

ஒருநாள் மகாதேவன் ஞானசௌந்தரி வீட்டிற்குப் போனபொழுது ஞானசௌந்தரி

யுடன் வேறு ஒரு வாலிபர் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான். அவர் வயதில் மகாதேவனைக் காட்டிலும் இரண்டொரு வருஷம் மூத்தவராக இருக்கலாம். ஐரோப்பிய மாதிரியாக உடைகள் தரித்திருந்தார். மகாதேவன் உள்ளே சென்றதும், ஞானசௌந்தரி அவர்கள் இருவரையும் அறிமுகம் செய்வித்தாள். அந்த வாலிபர் பெயர் மிஸ்டர் சௌரியப்பன் என்று சொன்னாள். இருவரும் கை குலுக்கிச் சில உபசாரமொழிகள் புகன்றார்கள். பிறகு சிறிது நேரம் மூன்று பேர்களும் பேசிக்கொண்டிருந்தார்கள். சம்பாஷணை முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. ஒவ்வொருவரும் ஏதோ சம்பாஷணை நடத்தவேண்டும் என்பதற்காகவே பேசியது போலிருந்தது. கலகலப்பாகப் பேச்சு நடக்கவில்லை. பிறகு வெகு நேரமாகி விட்டதால் மகாதேவன் விடைபெற்று வீடு சென்றான். பிறகும் சில தினங்களில் ஞானசௌந்தரி வீட்டில் மிஸ்டர் சௌரியப்பாவைப் பார்க்க நேர்ந்தது. மிஸ்டர் சௌரியப்பாவைப்பற்றி முதலில் மகாதேவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. பிறகு அருளானந்தத்தினிடம் மெதுவாக விசாரித்து அவரைப்பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டான். மிஸ்டர் சௌரியப்பாவின் தகப்பன் ஆபிரகாம் சௌரியப்பா என்பவர் பாளையங்கோட்டையில் வசிப்பவர். கொழுத்த பணக்காரர். மிஸ்டர் சௌரியப்பா திருநெல்வேலி காலேஜில் படித்தவர். படித்து முடிந்த பிறகு, சென்னையில் அவர் தகப்பனுருக்காக ஒரு வியாபாரம் ஆரம்பிக்கும் உத்தேசத்துடன் சில காலம் சென்னையிலேயே வசித்து இங்கிலீஷ்காரர்களிலும், இந்தியர்களிலும் சில பெருத்த வியாபாரிகளிடம் சம்பாஷணைகள் நடத்திவந்தார். சென்னைக்கு வந்ததுமுதல் பட்டண வாச உல்லாசங்களில் ஈடுபட்டுப் போய்விட்டதால் வியாபார விஷய சம்பாஷணைகள் வெகு சாவகாசமாகவே நடந்து வந்தன. ஞானசௌந்தரி அருளானந்தம் இவர்களை மிஸ்டர் சௌரியப்பா முதல் முதல் சந்தித்தது ஒரு நாடக மண்டபத்தில். சென்னைக்குப் புதிதாக வந்த மிஸ்டர் டிரி என்பவரும் அவர் கூட்டமும் ஆபிரா என்னும் ஆங்கில நாடகம் ஒன்று நடத்தினர். அவர்கள் ஆபிராவைப் பார்க்கச் சென்றிருந்த ஞானசௌந்தரி அருளானந்தம் இவர்கள் பக்கத்திலிருந்த ஆசனத்தில் மிஸ்டர் சௌரியப்பா அமர்ந்திருந்தார். அந்த சமயத்தில் இவர்களுக்கும் அவருக்கும் சிநேக முண்டாயிற்று. அதற்குப்பின் மிஸ்டர் சௌரியப்பா அருளானந்தம் வீட்டிற்கு அடிக்கடி வந்து சம்பாஷித்து வந்தார். வரும்போதெல்லாம் விலையுயர்ந்த வெகுமதி ஏதாவது ஒன்று கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். மிஸ்டர் சௌரியப்பா அடிக்கடி வருவதிலும், ஞானசௌந்தரிக்கு வெகுமதிகள் கொண்டுவந்து கொடுப்பதிலும் தேவ ஆசீர்வாதத்திற்கு மிகுந்த சந்தோஷம். மிஸ்டர் சௌரியப்பாவைப் பற்றிய விவரங்கள் தெரிந்தது முதல் மகாதேவன் மனதில் ஒருவிதமான வருத்தம் உண்டாயிற்று. இதில் வருத்தப்படுவதற்குத் தகுந்த காரணம் ஒன்றுமில்லை யென்பதையும் அவன் அறியாமல் இருக்கவில்லை. முறைப்படி ஞானசௌந்தரியை மணந்துகொள்ளக் கூடிய ஒருவன்—அதிலும் பணம், வயது, படிப்பு முதலியவைகளில் அவளை மணக்க எவ்விதத்திலும் பொருத்தமுள்ள ஒருவன்—அவளை நேசித்து அவளுக்கு வெகுமதிகள் அளிப்பது ஒருவிதத்திலும் ஆக்ஷேபணைக்கு இடமில்லாம லிருந்தது. ஆனாலும் ஆராய்ச்சி முறையில் அறியக்கிடக்கும் தகுதிகள் மட்டும் மனதுக்குச் சமாதானத்தைக் கொடுக்குமா? சௌரியப்பன் ஞானத்தை நேசிப்பது ஒழுங்கானது என்றும், தான் அவளிடம் பாராட்டும் சிநேகம், சிநேகம் என்னும் கட்டை மீறி வேறு உணர்ச்சியே அதில் முக்கியமானதாக அமைந்துள்ளது என்பதையும் தான் ஒரு காலத்திலும் அவளை முறைப்படி மணக்க முடியாதாகையால் சிநேகநிலை மாறியபிறகும் தான் அவளை அடிக்கடி பார்த்து அவளுக்கு வெகுமதிகள் கொடுத்துவருவது தகாத காரியம் என்பதையும் மகாதேவன் தெளிவாக உணர்ந்திருந்தான். உணர்ந்தும் அதற்கேற்றபடி தன் மனதைக் கண்டித்து சந்தேகத்திற்கு இடமில்லாமல் நடந்துகொள்ள அவனால் முடியவில்லை. முன்போலவே அடிக்கடி ஞானசௌந்தரி வீட்டிற்குச் செல்வதிலும், அவளை மாலை நேரங்களில் உலாவுவதற்காகவும், காட்சிகள் காண்பதற்காகவும் வெளியில்

அழைத்துச் செல்வதிலும், அவளுக்கு வெகுமதிகள் வாங்கி அளிப்பதிலும் முன்னைக்காட்டிலும் பதின்மடங்கு அதிக கவனம் செலுத்தலானுன். கண்காட்சி சாலைகளுக்குப் பணம் கொடுத்து அழைத்துச் செல்வதிலும், அவளுக்கு வெகுமதிகள் வாங்கிக்கொடுப்பதிலும் சௌரியப்பனேடு போட்டிபோட அவனுல் எப்படி முடியும்? அதனுல் பொருள் செலவு செய்து அவளைத் திருப்தி செய்வதில் ஏற்படும் குறைவை, சாதுர்யமான சம்பாஷணைகளாலும் இனிய பாடல் பாடுவதினுலும் சரிசெய்ய முயன்ருன். மகாதேவன் மனதில் சௌரியப்பனை தன்னுடைய போட்டியாளாக நினைத்திருந்தது சௌரியப்பனுக்குத் தெரியவே தெரியாது. அவன் மகாதேவனை ஞானசௌந்தரிக்குத் தமிழ் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் என்ற முறையிலேயே கருதி வந்தான். சம்பாஷணைகளில், ஒவ்வொரு சமயத்தில், மகாதேவன் வார்த்தைகள் தகாமொழிகள் என்பதை ஜாடையாகக் குறிப்பிடவும் செய்தான். இவர்கள் இருவரும் இப்படி ஒருவரை ஒருவர் சரியாக அறிந்துகொள்ளாமல் இருக்க, ஞானசௌந்தரி மட்டும் இருவர் கருத்தையும் தெளிவாக உணர்ந்தாள். ஆனுல் அவள் மனதில் பதிந்திருந்த கருத்து என்னவென்பதை இவர்கள் ஒருவராலும் உண்மையாக அறிந்துகொள்ள முடியவில்லை. மாதர் மனதென்பது யாவராலும் அளவிட்டறிய முடியாததல்லவோ?

இருபத்தைந்தாம் அதிகாரம்

நம்மவர் புதுபாஷை

ஒருநாள் மாலையில் அருளானந்தம் வீட்டில், சௌரியப்பன், அருளானந்தம், ஞானசௌந்தரி ஆகிய இவர்கள் மூன்று பேர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது மகாதேவனும் அங்குவர, சம்பாஷணையில் அவனும் கலந்து கொண்டான். அன்று இரவு சுமார் எட்டு மணிவரை நால்வரும் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது சில வருஷங்களாக நமது நாட்டில் ஒரு புதுபாஷையுண்டாகி யிருக்கிறதே அந்தப் பாஷையில் தான் அந்த சம்பாஷணை நடந்தது. அந்த பாஷைக்குப் பெயர் ஒன்றும் இதுவரை ஏற்படாவிட்டாலும், நம்மவருள் அது வெகுவாகப் பரவியிருக்கிறது. பேச்சில் பரவுகிறமொழி இலக்கியத்திலும் கையாளப்படும் என்ற விதிப்படி தற்காலத் தமிழ் இலக்கியங்களிலும் இப்பாஷை காணப்படும். இதற்கு ஒரு இலக்கணம் அமைப்பது ஒன்றுதான் குறை. சில வருஷங்களில் அக்குறையும் நீங்கிவிடலாம். நாம் விவரிக்கப்போகிற சம்பாஷணையை அது எந்த பாஷையில் நடந்ததோ அந்த பாஷையிலேயே எழுதுவதானுல் ஒருக்கால் இதைப் படிக்கும் ஸ்திரீ புருஷர்களில் சிலருக்குத் தடுமாற்றம் ஏற்படும் என்பதை உத்தேசித்து அவர்கள் பேசினபடியே இங்கு எழுதாமல் தமிழில் எழுதுகிருேம். அவர்கள் பேசின தோரணையில் வார்த்தைகளில் பாதி தமிழ், பாதி ஆங்கிலம். சில வாக்கியங்களில் எழுவாய்கள் தமிழ், பயநிலைச் சொற்கள் ஆங்கிலம். மற்றும் சிலவாக்கியங்களில் எழுவாய்கள் ஆங்கிலம், பயநிலைச்சொற்கள் தமிழ். சில வாக்கியங்களில் பெயர் உரிச் சொற்கள் ஆங்கிலம், அவைகளால் தழுவப்படும் பெயர்ச் சொற்கள் தமிழ். சில வாக்கியங்களில் வினையுரிச் சொற்கள் தமிழ், அவைகள் தழுவும் வினைச்சொற்கள் ஆங்கிலம். மற்றும் சில வாக்கியங்களில் பெயர் உரிச் சொற்கள் தமிழ், அவைகளால் தழுவப்படும் பெயர்ச்சொற்கள் ஆங்கிலம். பின்னும் சில வாக்கியங்களில் வினையுரிச்சொற்கள் ஆங்கிலம், அவைகளால் தழுவப்படும்வினைச்சொற்கள் தமிழ். சிலவாக்கியங்களில் ஒரே இடைச்சொல்லிற்கு ஒரு பாதி ஆங்கிலம், ஒரு பாதி தமிழ். ஒருவாக்கியமாவது முழுவதும் தமிழுமல்ல, முழுவதும் ஆங்கிலமுமல்ல. நம்மவர் நூதன பாஷையில் வேறு நயம் என்ன இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒரு அற்புதம் அதனிடம் உண்டு. பேசுபவர் ஆற்றலுக்குத் தக்கபடி உதவும். சிலரிடம் ஆங்கிலம் அதிகமாகவும் தமிழ் குறைவாகவும் காணப்படும். அன்று சம்பாஷணையில் இப்பாஷையை உபயோகித்தவர்கள் நால்வரும் நான்கு விதமாக உபயோகித்தார்கள். மிஸ்டர் சௌரியப்பன் வார்த்தைகளில் கால்வாசிதான் தமிழ். அருளானந்தம் பாஷை அநேகமாய் சௌரியப்பாவினதைப் போன்றிருந்தாலும் அதைக் காட்டிலும் ஆங்கிலம் சிறிது குறைவாக இருந்தது. ஞானசௌந்தரி பாஷை மகாதேவன் பாஷையைப் போலவே இருந்தாலும்

பெருங்கொடையான் பேணுன் வெகுளி ய்வனின் மருங்குடையார் மாநிலத் தில்.

அதைக் காட்டிலும் தமிழ் சிறிது குறைவாகவே இருந்தது. மகாதேவன் வந்ததும் சௌரியப்பன், "இதோ நமது பண்டிட் வந்துவிட்டார். அவர் அபிப்பிராயத்தையும் கேட்போம்" என்றான்.

மகாதேவன், "எத்தனையோ பெரியவர்கள் இருக்கையில் என் அபிப்பிராயம் என்ன? என்ன விஷயத்தைப்பற்றி நீங்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

சௌரியப்பன் :—"வேறு ஒன்றுமில்லை. மிஸ். ஞானசௌந்தரி தமிழ் படிப்பது, அதுவும் உங்களைப்போன்ற தேர்ச்சிபெற்ற ஒருவரிடம் படிப்பது நல்ல காரியந்தான். ஆனால் அவளுக்குத் தமிழில் கிறுக்கு உண்டாகிவிட்டதற்குத்தான் காரணம் எனக்குத் தெரியவில்லை" என்றான்.

மகாதேவன் :—"நீங்கள் சொல்வது எனக்குத் தெளிவாகப் புலப்படவில்லையே" என்றான்.

ஞானசௌந்தரி:—"மிஸ்டர் சௌரியப்பாவின் அபிப்பிராயம் தமிழ் சாதாரண மனிதர்களுக்குத்தான் உரித்தானது என்பது. கற்றுத் தேர்ந்தவர்கள் ஆங்கிலத்திலேயே கருத்தாக இருப்பதுதான் கல்விக்கழகு என்பது அவர் தீர்மானம்" என்றாள்.

சௌரியப்பன் :—"என் கருத்தை மிஸ். ஞானசௌந்தரி ஒருவிதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறாள். ஆனால் முழுக்கருத்தும் அதுவல்ல. பெரிய விஷயங்களைப்பற்றி சாதுர்யமாக சம்பாஷிப்பதற்கு ஆங்கிலம் தான் ஏற்றபாஷை என்பதுதான் என் அபிப்பிராயம். நல்ல கல்வியறிவுள்ளவர்கள் ஆங்கிலத்தில் தான் விசேஷமாகப் பேசக்கூடும். அவர்களுடைய அபிப்பிராய நுட்பங்களைத் தமிழில் எடுத்துச் சொல்வது சாத்தியமல்ல. ஆனால் சாதாரண ஜனங்களுடைய தினசரி சம்பாஷணைக்கு தமிழே போதும்" என்றான்.

ஞானசௌந்தரி :—ஆகவே நமது நாட்டார்களுக்குள்ளேயே சாதாரண ஜனங்கள் என்ற வகுப்பு ஒன்றும், அசாதாரண ஜனங்கள் என்ற வகுப்பு ஒன்றும் ஏற்பட்டு, இரு வகுப்பாருக்கும் பாஷையில்கூட வேறுபாடு உண்டாகவேண்டுமோ?"

சௌரியப்பன்:—"அப்படியல்ல மிஸ். ஞானசௌந்தரி! நாளடைவில் ஜனங்கள் எல்லாருமே ஆங்கிலம் கற்றுத் தேர்ந்து விடுவார்கள். அதன் பிறகு பாஷை வித்தியாசம் இராது. அப்படி எல்லோரும் ஆங்கிலம் கற்றபின் ஜனங்கள் சாமானிய சம்பாஷணைகளுக்குத் தமிழையும் உயர்ந்த விஷயங்களைப் பற்றி சம்பாஷிப்பதற்கு ஆங்கிலத்தையும் உபயோகிப்பார்கள்."

அருளானந்தம் :—"உங்கள் கருத்தில் உயர்ந்த விஷயம் என்பது எது? சாதாரண விஷயங்கள் என்பன எவை?"

சௌரியப்பன் :—"தினசரி ஊண் உடை முதலிய விஷயங்கள் சாதாரண விஷயங்கள். இராஜீய சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், கலைகள் முதலானவைகள் உயர்ந்த விஷயங்கள்."

ஞானசௌந்தரி :—"அப்படியா? அதனால் தானோ தாங்கள் 'தேநீர் சாப்பிடலாமா?' என்று கேட்பதுகூட ஆங்கிலத்தில் கேட்கிறீர்கள்? அது எந்த சாஸ்திரத்தைச் சேர்ந்தது? வயிற்றுக்கூறு சாஸ்திரமோ" என்றாள். எல்லாரும் சிரித்தார்கள்.

சௌரியப்பன்:—"மிஸ். ஞானசௌந்தரி! நீ சொல்வதன் கருத்தை யறிந்துகொண்டேன். நான் சாதாரண விஷயங்களில்கூட ஆங்கிலத்தையே உபயோகிக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் நான் சொல்லி வருவதன் கருத்து என்னவென்றால், உயர்ந்த விஷயங்களைப்பற்றிப் பேச தமிழில் இடமில்லை என்பதுதான். அவ் விஷயங்களைப்பற்றிப் பேச ஆங்கிலம் அத்தியாவசியம். என்னைப் போன்றவர்கள் சாதாரண விஷயங்களைப்பற்றிப் பேசுவதில்கூட ஆங்கிலத்தையே உபயோகிப்பது உண்மைதான். இதற்குக் காரணம் ஆங்கிலம் சாதாரண விஷயங்கள் பெரிய விஷயங்கள் ஆகிய எல்லா விஷயங்களுக்கும் ஏற்றதாக இருப்பதே."

அருளானந்தம், "ஆகவே, உமது அபிப்பிராயத்தைத் திருத்திச் சொல்லப் போனால், ஆங்கிலம் எல்லா விஷயங்களுக்கும் ஏற்றது. தமிழ் சாதாரண விஷயங்களுக்கு மட்டுமே ஏற்றது."

சௌரியப்பன் :—"ஆம் அப்படித்தான்."

ஞானசௌந்தரி :—"நீங்கள் இப்போது சாதாரண விஷயங்களைப்பற்றிக்கூட ஆங்கி

லத்திலேயே பேசுகிறீர்களல்லவா? அது போலவே நம்மவர்கள் எல்லோரும் ஆங்கிலம் படித்துவிட்டால் எல்லோரும் சாதாரண விஷயங்களைப்பற்றிக்கூட ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்துவிடுவார்கள். தமிழ் மறைந்தே போகும். இல்லையா?"

சௌரியப்பன் :—"மறைந்து போனாலும் போகலாம். அது ஒரு பெரிய நஷ்டம் என்று எனக்குத் தோன்றவில்லை."

மகாதேவன் :—"இருக்கட்டும் மிஸ்டர் சௌரியப்பன். தமிழ் பாஷையில் நீங்கள் கண்டுபிடித்திருக்கும் குறைதான் என்ன?"

ஞானசௌந்தரி:—"நீங்கள் பெரிய கேள்வி கேட்டுவிட்டீர். தமிழ் பாஷையிலுள்ள குறைகளைப்பற்றி மிஸ்டர் சௌரியப்பன் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டால் மூன்று மணி நேரம் பிரசங்கம் செய்வார்" என்றாள்.

சௌரியப்பன் :—"மிஸ். ஞானசௌந்தரி சொல்வதுபோல் தமிழின் குறைகளை எடுத்துச் சொல்வதானால் எவ்வளவோ சொல்வேன். முதல் முதலாக ஒரு சிறு விஷயம் சொல்லுகிறேன். தமிழில் "இடியம்" என்பதே கிடையாதல்லவா?"

மகாதேவன் :—"'இடியம்' என்பது எதைக் குறிப்பிடுகிறதோ அவ்வித சொல்லமைப்புகள் தமிழில் இருக்கின்றன."

சௌரியப்பன் :—"அப்படியா, சரி. எனக்கு அதிகமாகத் தெரியாது. நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம். இருக்கட்டும். நவீன சாஸ்திரங்களில் உபயோகப்படும் சொற்கள் தமிழில் இல்லையல்லவா?"

மகாதேவன்:—"இல்லையென்பது தமிழின் குறையல்ல. தமிழர் குறையே."

சௌரியப்பன் :—"மிஸ்டர் மகாதேவன்! நீங்கள் சொன்னதை விவரமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

மகாதேவன் :—"நூதன சாஸ்திரங்களில் உபயோகப்படும் சொற்கள் தமிழில் இல்லாமற் போனால் பிற பாஷைகளிலிருந்து எடுத்து அமைத்துக் கொள்ளலாம். அது தமிழராகிய நாம் செய்ய வேண்டிய வேலை. நாம் அதில் ஒன்றும் செய்யாமலிருந்து கொண்டு தமிழின் பேரில் குறை கூறுவது சரியான முறையல்ல."

சௌரியப்பன் :—"நீங்கள் சொல்லுகிறபடி வேறு பாஷைகளிலிருந்து எடுத்துக்கொள்வதென்றால் தமிழ் கடன் வாங்கும் பாஷையாகி விடுமல்லவா? தமிழுக்காக அச்சொற்கள் இல்லையே?"

மகாதேவன் :—"கடன் வாங்குவது என்ற சொற்களால், ஒரு குறைவுபோல் காட்டுகிறது பாஷை விஷயத்தில் ஏற்றமுடையதல்ல. உயிருள்ள பாஷை எதுவும் பிற பாஷைகளிலிருந்து சொற்களை எடுத்து ஆண்டுகொண்டுதான் இருக்கும்."

சௌரியப்பன் :—"அப்படியானால் ஆங்கில பாஷை வேறு பாஷைகளிலிருந்து சொற்களை எடுத்துக்கொண்டா இருக்கிறது?"

மகாதேவன் :—"அது உங்களுக்கு தெரிந்திருக்கும் என்றல்லவா நினைத்தேன். நான் சொல்வதைக் காட்டிலும் அருளானந்தம் விவரமாகச் சொல்வார். லத்தீன் படித்தவர், அவரைக் கேளுங்கள்."

அருளானந்தம் :—"ஆம். மகாதேவ ஐயர் சொல்வது உண்மைதான். ஆங்கில பாஷையில் முக்கால் பங்கு லத்தீன், கிரீக், இத்தாலியன், பிரெஞ்சு முதலான பிற பாஷைகளிலிருந்து எடுத்தாளப்படும் சொற்கள். அதுவும் முக்கியமாக நீங்கள் குறிப்பிட்ட சாஸ்திர சம்பந்தமான சொற்கள் எல்லாமே பிறபாஷைகளிலிருந்து, முக்கியமாக லத்தீன் பாஷையிலிருந்து, எடுத்துக்கொள்ளப்பட்டவை."

சௌரியப்பன் :—"உலக வாழ்க்கையில் உள்ள பல விஷயங்களையும் பற்றி ஆங்கிலக் கவிகள் பாக்க எழுதியிருப்பதுபோல் தமிழ் இலக்கியத்தில் காணக்கிடைப்பது அசாத்தியமல்லவா?"

மகாதேவன் :—"தற்கால வாழ்க்கைக்கே உரித்தான அம்சங்கள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகிறதில்லை என்பது உண்மைதான். ஆனால் தற்காலம், முற்காலம் என்ற வித்தியாசமில்லாமல் எக்காலத்திலும் எந்நாட்டிலும் மனிதவாழ்க்கைக்கு உரித்தான பெரிய தத்துவங்கள் தமிழ் இலக்கியங்களில் வெகு அழகாக விளக்கப்பட் டிருக்கின்றன. தாங்கள் திருவள்ளுவர் திருக்குறளை ஒரு முறை படித்துப் பார்த்தால் நான் சொல்வதன் உண்மை புலப்படும்!"

சௌரியப்பன் :—"ஓ! ஆம், ஆம். நீங்கள் இப்போது சொன்னீர்களே. இந்தப் பெயர்

பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் ஆ! அவர் பெயரென்ன" ஆம். மிஸ்டர் திருவள்ளுவர்.—"மிஸ்டர் திருவள்ளுவர்" என்று சௌரியப்பன் சொன்னதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

சௌரியப்பன் :—"ஏன்? என்ன? நான் சொன்னதில் ஏதாவது பொருத்த பிசகு உண்டோ" என்று கேட்டான்.

ஞானசௌந்தரி :—"இல்லை இல்லை. மிஸ்டர் திருவள்ளுவர் என்பதாக நீங்கள் குறிப்பிட்டீர்களே! அவர் இதுவரை பட்டப்பெயர் ஒன்றுமில்லாமலே யிருந்தார். அவர் காலஞ் சென்று இவ்வளவு நூற்றாண்டுகளுக்குப் பின், தாங்கள் அவருக்கு "மிஸ்டர்" பட்டம் கொடுத்ததன் அருமையை எண்ணித்தான் எல்லாரும் சிரித்தார்கள்" என்றாள்.

சௌரியப்பன் :—"அப்படியா! எனக்கு இதெல்லாம் தெரியாது. அவர் வெகு காலத்திற்குமுன் வாழ்ந்தவரோ?"

ஞானசௌந்தரி :—"இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதுதான்; போனால் போகிறது. 'மிஸ்டர் கேட்மான்' என்ற ஆதி ஆங்கிலப் புலவர் எப்போது வாழ்ந்தவர் என்பது தெரியுமல்லவா?"

சௌரியப்பன் :—"தெரியும். அவர் காலம் ஆயிரம் வருஷங்களுக்குமுன்."

ஞானசௌந்தரி :—"திருவள்ளுவர் கேட்மான் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்."

சௌரியப்பன் :—"ஓ" என்றான்.

சௌரியப்பன் தன் அறியாமையைக் குறித்து சிறிதும் வெட்கப்படவில்லை. வாஸ்தவத்தில் தமிழைப்பற்றியும், தமிழ் இலக்கியங்களைப்பற்றியும் அதிகமாகத் தெரியாமல் இருப்பதும் தனது ஆங்கிலத் தேர்ச்சிக்கு அடையாளம் என்று கருதினான். ஆங்கில இலக்கியத்தைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதானால் அதுமட்டும் வெட்கத்திற்கிடம் என்பது அவன் எண்ணம். தமிழில், எவ்வளவுக்கெவ்வளவு அறியாமை அதிகமாகக் காணப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு மேன்மை என்று கருதினான். ஆதலால்தான் 'மிஸ்டர் திருவள்ளுவர்' என்று சொன்னதைக்குறித்து மற்றவர்கள் சிரித்தது தனக்குக் குறைவு என்பதாக எண்ணவில்லை. சௌரியப்பன் மனோபாவம் இக்காலத்தில் தமிழ்நாட்டில் வாழும் ஆங்கிலம் படித்த பலருக்கும் உள்ளதுதான்.

அருளானந்தம் சாதுர்யமாய் சம்பாஷணையை வேறுவிதமாகத் திருப்பினான். எல்லோரும் வெகு நேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டுப் பிறகு சௌரியப்பனும் மகாதேவனும் விடைபெற்றுக்கொண்டு எழுந்தார்கள்.

இருபத்தாறும் அதிகாரம்
பணமே உன்றலேன்ன குணமே

சௌரியப்பன் சென்னைக்கு வந்த காரியம் வெகு தாமதமாகவே நடந்துவந்தது. அந்தக் காரியத்தைக் காட்டிலும் மனதிற்கு அதிக இனிமையான காரியம் ஒன்று கிடைத்துவிட்டதால் அதிலேயே முழுமனதையும் செலுத்தலானான். ஞானசௌந்தரியைத் திருப்திசெய்வதற்காகப் பணத்தை வாரி யிரைக்கலானான். ஞானசௌந்தரி சௌரியப்பன் கொடுத்த விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். சௌரியப்பன் வெகுமதிகளாகக் கொடுக்காவிட்டாலும் பெரும் பணச் செலவு செய்து அவளைத் திருப்திசெய்யக் கூடும் விதங்களில் எல்லாம் திருப்தி செய்ய முயன்றான். மகாதேவன் மாலை நேரங்களில் அடிக்கடி ஞானசௌந்தரியை வெளியில் உலாத்த அழைத்துச் செல்வதைக் கவனித்தான். ஒவ்வொரு சமயத்தில் சௌரியப்பனும் அவர்களோடு கூடச் செல்வதுண்டு. அவர்கள் சலிக்காமல் வெகுதூரம் நடந்து போவது வழக்கம். சௌரியப்பனோ தேகபலமுள்ளவனானாலும் கால்நடையாக வெகுதூரம் போவதென்றால் கூடாதகாரியமென்று எண்ணினான். அவனை வெகுதூரம் இழுத்துச் சென்று அதனால் அவதிப்படுவதைப் பார்த்து ஞானசௌந்தரியும் மகாதேவனும் பரிகசிப்பது வழக்கம். கால்நடையாக அதிக தூரம் போகவேண்டிய அவசியமில்லாமலும் வேறு ஒருவர்கூடவர இடமில்லாமலும் ஞானசௌந்தரியைத் தான் மட்டிலும் வெளியே அழைத்துப்போக என்ன செய்யலாம் என்று யோஜித்தான். யோசித்து முடிவுசெய்து பக்க ஆசனமுள்ள மோட்டார் ஸைக்கிள் ஒன்று வாங்கினான். ஞானசௌந்தரியை பக்க ஆசனத்தில் வைத்துக்கொண்டு வெகுதூரம் மோட்டார்

ஸைகிளை விட்டுக்கொண்டுபோக வாரம்பித்தான். ஞானசௌந்தரியைப் பார்க்கவேண்டுமென்று மாலைநேரங்களில் மகாதேவன் அவள் வீட்டிற்குச் சென்றால் முக்கால்வாசி நாட்களில் அவளைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. வீட்டு வேலைக்காரன், மிஸ்டர் சௌரியப்பன் மிஸ் ஞானத்தை அழைத்துச் சென்றிருப்பதாகச் சொல்லிவிடுவான்.

மகாதேவனுக்குப் பணம் இல்லாததால், தான் சௌரியப்பனோடு போட்டிபோட முடியாமல் போனதில் வருத்தம் உண்டாயிற்று. ஞானசௌந்தரி அவனை அசட்டை செய்துவிட்டு சௌரியப்பனோடு பொழுதுபோக்குவது அவன் மனதுக்கு வெகு கசப்பாக இருந்தது. இருந்தும் அவன் செய்யக் கூடியது என்ன? மனதில் நினைத்து நினைத்து ஏங்கி வாடிவந்தான். ஒரு சமயம் ஞானசௌந்தரியைப்பற்றித் தான் நினைப்பதே பிசகென்று எண்ணுவான். அவள் நினைவு வரும்போது உடனே கண்டித்து அதை மாற்றி விடவேண்டுமென்று தீர்மானிப்பான். அவள் புகைப்படத்தைப் பார்க்கும்போதோ, அவளுடன் படித்த செய்யுள் ஒன்றை நினைக்கும்போதோ, ஞானசௌந்தரியின் ஞாபகம் மறுபடி எழ அவன் தீர்மானமெல்லாம் பறந்துபோய்விடும். ஒரு சமயம் தன் தகப்பனார் வசம் பாக்கியிருக்கும் பணத்தையும் எடுத்து இருவர் அமரக்கூடிய மோட்டார் வண்டி ஒன்று வாங்கி அதை ஞானசௌந்தரிக்குக் கொடுக்கலாம் என்று நினைப்பான். சிறிது அமைதியாய் யோசித்ததும் அது முழு மூடயோசனை என்பது புலப்படும். எப்படியும் சமயத்திற்கு உதவும் என்று எண்ணி சாதாரண ஸைகிள் ஒன்று வாங்கினான். நாள் தவறாமல் அதில் ஏறி ஞானத்தின் வீட்டிற்குப் போய் அவளைப் பார்க்க முயன்றான். நான்கு நாள் போனால், மூன்றுநாள் அவள் சௌரியப்பனோடு வெளியே போயிருப்பாள். ஒருநாள் வீட்டிலிருப்பாள். அவள் வீட்டிலிருந்த தினங்களில் அவளுடன் சம்பாஷித்துவிட்டும் அல்லது அவளை உலாத்த அழைத்துச் சென்று விட்டும் வீடு திரும்புவான். முன்னைப்போல் தான் அடிக்கடி ஞானசௌந்தரியைப்பார்த்துப் பேசமுடியாமற்போனதற்குக் காரணம் சௌரியப்பன்தான் என்று நினைத்து நினைத்து ஏங்குவான். ஒவ்வொரு சமயத்தில் சௌரியப்பன்மேல் மட்டும் குறைகூறுவது சரியல்லவென்றெண்ணி ஞானசௌந்தரியே சௌரியப்பனை நன்கு மதித்துத் தன்னை அசட்டைபண்ணுகிறாள் என்பதை நினைக்க உள்ளம் வாடுவான். இதற்கெல்லாம் ஆதிகாரணம் சௌரியப்பன் பணக்காரனாக இருப்பதும், கிறிஸ்தவனாக இருப்பதுந் தானே என்று நினைப்பான். வாஞ்சை என்பது குலம், பணம், சமயம் என்பதைக் கடந்து செல்வது என்று செய்த தீர்மானம் பிழைபட்டதே என்று எண்ணுவான். ஞானசௌந்தரியிடம் ஒவ்வொரு சமயத்தில் அவனுக்கு வருத்தம் உண்டாகும். ஆனால் அடுத்தமுறை அவளைத் தனித்து சந்தித்த க்ஷணமே அவ்வருத்தம் பறந்துபோய்விடும்.

ஒருநாள் மாலையில் ஞானசௌந்தரி, மகாதேவன், சௌரியப்பன் ஆகிய இவர்கள் மூவரும் பேசிக்கொண்டிருக்கையில மறுநாள் சென்னைக்கடுத்த ஊர்களில் ஒன்றுக்குப் போய்வருவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஊர்களையும் யோஜித்துப் பார்த்து, கடைசியாகப் பல்லாவரம் போகிறது என்று தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் மாலை நாலு மணிக்கே புறப்பட்டு பல்லாவரம் போய் விட்டு, இரவு எட்டு மணிக்கு முன்னால் திரும்பிவிடுவது என்று தீர்மானித்தார்கள். சௌரியப்பனுடைய பக்க ஆசனம் அமைந்த மோட்டார் ஸைகிளில் சௌரியப்பனும் ஞானசௌந்தரியும் போவதாகவும், மகாதேவன் இவர்களுடன்கூடத் தன் ஸைகிளில் போவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வேற்பாட்டின்படியே மறுநாள் மாலை நாலு மணிக்கு இராயப்பேட்டையிலிருந்துபுறப்பட்டார்கள். ஞானசௌந்தரியைப் பக்க ஆசனத்தில் அமர்த்திக்கொண்டு சௌரியப்பன் தன் மோட்டார்ஸைகிளில் ஏறிச்சென்றான். முதல் பத்து மைல் தூரம் போகுமட்டும் இடையூறு ஒன்றுமில்லாமல் போனார்கள். அதற்குப்பின் சௌரியப்பன் மோட்டார் ஸைக்கிள் இடக்குச் செய்யவாரம்பித்தது. முதலில் அதனால் அதிக சிரமம் ஏற்படவில்லை. ஆனால் வரவர கோளாறுகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. சௌரியப்பனுக்கு அடங்காமல் அந்த ஸைகிள் வழியினின்றும் விலகிற்று. சௌரியப்

பன் நிறுத்திப் பார்த்தான். நிறுத்தமுடிய வில்லை. சாலையில் இடதுபுறமிருந்த மரமொன்றில் மோதிச்சாய்ந்தது. பக்கத்தில் இதைக்கவனித்துக்கொண்டே வந்த மகாதேவன் ஸைக்கிளிலிருந்து இறங்கி, மோட்டார் ஸைக்கிள் மரத்தில் மோதின மறுக்ஷணமே அதன் பக்க ஆசனத்திலிருந்த ஞானசௌந்தரியை மெதுவாக இறக்கிவிட்டான். ஸைகிளின் முன்புறம் நேராக மோதினதால் ஸைகிளுக்குமட்டும் கேடு உண்டாயிற்று. அதன்மேல் அமர்ந்திருந்த சௌரியப்பனுக்குக்கெடுதல் ஒன்றும் நேரிடவில்லை. அவனும் ஸைகிளைவிட்டுக் கீழே இறங்கினான். உடம்பில் காயம் ஒன்றும் இல்லாவிட்டாலும், அடிகூட இல்லாவிட்டாலும் சௌரியப்பனுக்கு நரம்பு தளர்ந்து இருதயம் படபடவென்று அடித்தது. மகாதேவனும் ஞானசௌந்தரியும் அவனைத் தேற்றினார்கள். திடீரென்று ஏற்பட்ட தளர்ச்சிதானே. சில நிமிஷங்களில் தேறிவிட்டான். ஆனால் பதட்டம் முழுவதும் மாறவில்லை. சௌரியப்பனைத் தேற்றியபின் மகாதேவன் ஞானசௌந்தரியைப் பார்த்து, "உனக்கு ஏதாவது பயம் உண்டாகி விட்டதோ?" என்று கேட்டான். அவளும், "பயமா? பயப்படுவானேன்! சாலையோடு போய்விட்டு ஒரு சம்பவமுமின்றித் திரும்பாமல் இதுபோன்ற விசேஷம் நேரிடுவதில் எனக்கு சந்தோஷம்" என்றாள். அவள் சொன்னது உண்மையே. அவளுக்குச் சிறிதும் பயமே உண்டாகவில்லை. சிறிது குதூகலம் உண்டாயிற்று. இதற்குள் அவர்கள் இருந்த இடத்தைச் சுற்றி ஜனங்கள் கூடிவிட்டார்கள். சௌரியப்பன் மோட்டார் ஸைகிளைப் பரிசோதித்துப் பார்த்தான். அதில் முக்கிய கருவிகள் சில தகர்ந்துபோயிருந்ததால் மராமத்து செய்யவேண்டியது அவசியமாயிற்று. மோட்டார் ஸைகிளை மராமத்து செய்ய அப்போது அவர்கள் இருந்தவிடத்தில் என்ன செய்யமுடியும்? மேலே யோசனை ஓடாமல் நின்றான். மகாதேவனும் ஞானசௌந்தரியும், கூடியிருந்த ஜனங்களில் கூலிக்காரர்சிலரை அழைத்து உடைந்த மோட்டார் ஸைக்கிளை மறுபடி சென்னைக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் இருந்த இடம் சென்னையிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல்தூரம். பல்லாவரம் அங்கிருந்து இரண்டுமைல் தூரம். எல்லாருக்கும் பொதுவாக, மகாதேவன் ஸைகிளைத் தவிர வேறு வாகனம் ஒன்றுமில்லை. எப்படித் திரும்பிச் செல்வது? தவிர, மோட்டார் ஸைகிளை சென்னைக்குக் கொண்டுபோகும் கூலிகளுடன் ஒருவர் கூடப்போகவேண்டியது அவசியமாயிற்று. மகாதேவன், சௌரியப்பன் ஆகிய இருவர்களில் ஒருவர் ஞானசௌந்தரியைப் பல்லாவரத்திற்கு அழைத்துப்போய் ரயில் மார்க்கமாக சென்னைக்கு வருவதென்றும், மற்றவர் மகாதேவன் ஸைகிளில் ஏறிக்கொண்டு சாலைமார்க்கமாக கூலியாட்களோடு சென்னை திரும்புவதென்றும் தீர்மானித்தார்கள். கூலியாட்கள் நால்வரை அமர்த்தினார்கள். சாலை நல்லசாலை. அதனால் கூலியாட்கள் மோடார் ஸைகிளை ஓட்டத்திலேயே கொண்டுவர இசைந்தார்கள். ஸைகிளில் ஏறிக் கூட வருபவருக்கும் அதுதான் சௌகரியமாக இருக்கும் என்பதை உத்தேசித்து அவ்விதமான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த இடத்திலிருந்து பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷன் இரண்டுமைல்தூரம் என்று குறிப்பிட்டோமே. இரண்டு மைலாகட்டும், இருபது மைலாகட்டும் நடையென்றால் ஞானசௌந்தரி அதற்குச் சளைப்பவள் அல்ல. ஆனால் சௌரியப்பனே நடைக்கஞ்சினவன். ஆதலால் சௌரியப்பன் தான் ஸைகிளில் ஏறிக்கொண்டு சாலை மார்க்கமாக சென்னை திரும்புவதாகவும், மகாதேவன் ஞானசௌந்தரியை பல்லாவரம் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று ரயிலில் இருவருமாக சென்னைக்கு வரலாமென்றும் சொன்னான். மகாதேவனும் ஞானசௌந்தரியும் அந்த யோசனைக்கு இணங்கினார்கள். உடனே கூலியாட்களும் மோட்டார் ஸைகிளைத் தள்ளிக் கொண்டு ஓட்டத்தில் சென்றார்கள். சௌரியப்பன் மகாதேவன் ஸைக்கிளில் ஏறிச் சென்னையைப் பார்க்கத் திரும்பினான்.

மரகதவல்லி.— பஞ்சரத்தினம் ஆசிரியர் ப. சி. கோவிந்தசாமி ராஜா அவர்கள் இயற்றியது. இந்நூல், ஆண் பெண், இரு பாலாரும் அவசியம் வாசிக்கவேண்டிய நூலாகும். அதி விரைவில் பல பதிப்புகள் வெளிவந்திருப்பதே இந் நூலின் உயர்வுக்குத் தக்கதோர் அத்தாக்ஷியாகும். அணா 12.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

வைத்தியன் பெண்

(ஸர் வால்டர் ஸ்காட் எழுதியது)

THE SURGEON'S DAUGHTER

(BY SIR WALTER SCOTT)

(182-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாட்காலையில் ரிச்சேர்டும் ஹார்ட்லியும் டாக்டர் வீட்டுக்குப் பின்புறத்திலிருந்த தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில், ரிச்சேர்டு ஹார்ட்லியை நோக்கி, "ஏன் அப்பா! நேற்றிரவு நிர்த்தனம் முடியு முன்னமே வந்துவிட்டாய்?" என்று கேட்டான். அதற்கு ஹார்ட்லி, "அங்கு என்ன சுகத்தைக் கண்டு நீ அது முடியும் வரையிலிருந்தாயென்று நானல்லவோ, உன்னைக் கேட்கவேண்டும். இந்தப் பட்டணம் மிகவும் மட்டமான இடம். இங்கிலாந்தில் சிறு பட்டணம் ஒன்றில் அதற்குப் பார்லிமெண்டில் பிரதிநிதியாக விருக்கும் மெம்பர் நிர்த்தன விருந்தளித்தாலும், சொந்த பாத்தியத்தில் அசையாப் பொருளுடையவர்களெல்லோரும் அவ்விருந்துக்கு அழைக்கப் படுவார்கள்" என்றான்.

"என்ன ஹார்ட்லி! உனக்குக் கூடவா பிரபுக்களுடன் பழகவேண்டுமென்ற ஆசையிருக்கிறது? நீ ஒரு பிரபுவின் குமாரத்தியோடு நிர்த்தனஞ் செய்வதுபோலும், பிரபுக்களெல்லோரும் உனது நிர்த்தனத் திறமையைக் கண்டு வியந்து கரகோஷஞ் செய்வது போலும் என் அகக்கண்ணுக்கு முன்னே தோன்றுகிறது" என்றான் ரிச்சேர்டு.

"எனக்கு அப்படிப்பட்ட ஆசையே கிடையாது, அப்பா! நான் சொல்வதென்னவெனில், அவர்கள் நம்மை நிர்த்தனத்துக்குச்சேர்த்துக் கொள்ளாதபோது, நம்முடன் நிர்த்தனஞ் செய்யும் பெண்களை மட்டும் ஏன் சேர்த்துக் கொள்ளவேண்டும்?"

"நம்முடன் நிர்த்தனஞ் செய்யும் பெண்களா? மேனி உன்னுடன் நிர்த்தனஞ் செய்யும் வழக்கமுண்டா என்ன?"

"நான் அவளைக் கேட்டுக்கொள்ளும்போதெல்லாம் அவள் என்னுடன் நிர்த்தனஞ் செய்வதுண்டு."

"அடுத்த தடவை நீ அவளைக் கேட்டுக் கொள்ளும்போது அவள் உன்னுடன் நிர்த்தனஞ்செய்ய இசையமாட்டாள் என்கிறேன். என்ன பந்தயம், சொல்!"

"மேனி என்னுடைய உபாத்தியாயருடைய பெண். அவர் எனக்கு எவ்வளவோ நன்மை புரிந்திருக்கிறார். மேனியைப்பற்றி நான் பந்தயம் போட்டால், நான் அவருக்குத் துரோகஞ் செய்தவனாவேன். ஆகையினால் நமக்குள் அவளைப்பற்றி விளையாட்டுப் பேச்சு வேண்டாம்."

"சரி. அப்படியானால் நீ குதிரைமேலேறிச் சென்று, மேனியின் கையைத் தொடத் துணிந்ததற்காக அந்தப் பிரபுவை உன்னுடன் போருக்கு அழைக்கலாமே."

"மேனி பெயரை எடுக்காமல் என்னவேண்டுமோ சொல், அப்பா! நான் ஒருவரையும் போருக்கு அழைக்கப்போகவில்லை. நீயே, உங்கள் பெரிய மனிதர்களிடஞ்சென்று அவர்களைப் போருக்கு அழைக்கலாமே. அழைத்துப்பார்த்தால், டாக்டரிடத்தில் வேலை பழக்கிக்கொள்ளுகிறவனுக்கு அவர்கள் என்ன பதில் அளிப்பார்களென்பது வெளியாகிவிடும்."

"மிஸ்டர் ஆடாம் ஹார்ட்லி தங்களைப்பற்றியே பேசுங்களேன்! நான் சிலரைப்போல் மட்ட மனிதனாகப் பிறக்கவில்லை. எவ்வளவு பெரிய மனிதர்களாக விருந்தாலும் அவர்களுடன் எனக்குப் பேசவும் தெரியும், நான் சொல்வதின் அர்த்தம் விளங்கும்படி பேசவும் தெரியும்."

"நீ சொல்வது உண்மையாகவே யிருக்கலாம். நீயும் அவர்களுக்குள் ஒருவன்தானே! மிடில்மாஸ் பட்டணத்து மிடில்மாஸ் அன்றோ நீ!"

[வம்சப்பெயர் வைத்துக்கொள்ளும் யோக்கியதையற்று, பிறந்த ஊரின் பெயரையே வம்சப் பெயராகப்பற்றிப் பரிகாசம் செய்து பேசுகிறான் ஹார்ட்லி. இங்கிலாந்தில் நல்ல குடும்பத்திற் பிறந்தவர்களுக்கெல்லாம் வம்சப்பெயர் உண்டு.]

ஹார்ட்லி அவ்வாறு தன்னைப்பற்றி நிந்தையாகப் பேசியதைக் கேட்டுக் கடுங்கோப

முற்ற ரிச்சேர்டு அவனைத் தாக்கக் கருதி, முன்னே ஒரு அடி யெடுத்துவைத்து, "போக்கிரிப் பயலே!" என்று கூவினன்.

"மரியாதையாகப் பின்னுக்குப் போய்விடு! போகாவிட்டால் உனக்கு மிகுந்த தீங்கு விளையும். மரியாதையை மறந்து நீ பரிகாசஞ் செய்தால், மரியாதையற்ற பதில்களைப் பெற நீ தயாராக விருக்கவேண்டும்" என்றான் ஹார்ட்லி.

"தெய்வத்தின்மேல் ஆணையிடுகிறேன்! நீ என்னை இப்படி அவமதித்ததற்கு உன்னைச் சும்மாவிடமாட்டேன். என்னுடன் போருக்கு வா!" என்றான் ரிச்சேர்டு.

"நீ கட்டாயமாய்ப் போருக்கு வரத்தான் வேண்டுமென்றால், இதோ வருகிறேன். ஆனால் இவ்விஷயத்தை இதோடு நிறுத்திவிடுவது உசிதமெனத் தோன்றுகிறது. நாம் இருவரும் பேசத்தகாத வார்த்தைகளைப் பேசிவிட்டோம். என்னைப்பற்றின வரையில், நீ எனக்குக் கோபமூட்டியதனால்தான் நான் அப்படிப் பேசினேனே யெனினும், அப்படி ஏன் பேசினேம் என்று நினைத்து என் மனம் வருந்துகிறது. உன் மனம் திருப்தியடைவதற்கு இதைவிட நான் என்ன சொல்லக் கூடும்?" என்று ஹார்ட்லி அமைதியுடன் கூறினன்.

"ஐயா! கனவான்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளினல் திருப்தியடைய மாட்டார்கள். நீர் என்னுடன் போர்புரிய வேண்டும். டாக்டரிடத்தில் இரண்டு துப்பாக்கிகள் இருக்கின்றன" என்றான் ரிச்சேர்டு.

அதுகாறும் அவர்கள் சண்டைபோட்டுப் பேசிக்கொண்டிருந்ததை செடிகள் அடர்ந்து வளர்ந்த ஒருவேலிக்குப் பின்புறத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த டாக்டர் க்ரே அச்சமயத்தில் முன் வந்து, "கனவான்களே! என்னிடத்தில் இரண்டு கலுவங்கள் கூட இருக்கின்றன. அவைகளையும் நீங்கள் என்னவேண்டுமானுலும் செய்யலாம். என்னிடத்தில் வேலை கற்றுக்கொள்ளும் நீங்களிருவரும் என்னுடைய துப்பாக்கிகளை ஒருவரையொருவர் சுட்டுக்கொன்று கொண்டதாக நாடெங்கும் தண்டோரா போட்டால், எனக்கு நிரம்பவும் சந்தோஷமாக விருக்கும். துப்பாக்கியினல் சுட்டு ஒருவருக்குக் காயமுண்டாக்குமுன் துப்பாக்கிக் குண்டினல் ஏற்பட்ட காயத்தை ஆற்றுஞ் சக்தி உங்களில் ஒருவருக்காவது இருக்கிறதாவென்று பார்ப்போம். போங்கள் அப்பா! நீங்களிருவரும் முட்டாள் பையன்கள்! இப்படிப்பட்ட சண்டைகளில் என் பெண்ணின் பெயரை இழுப்பது உங்களுக்குச் சற்றும் அழகல்ல. இன்னும் கொஞ்சகாலம் நீங்கள் என்னிடம் இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் நீங்கள் தாயில்லாத என் குழந்தையுடன் சகோதரியுடன் வளரும் சகோதரர்களைப் போலச் சமாதானமாய் வசிக்காமல், என் குழந்தையை வேறு எங்கேயாவது யனுப்பும்படி செய்து, என் செலவை அதிகமாக்கி என் சௌகரியத்தையும் குறைப்பது நான் உங்களுக்குச் செய்யும் நன்மைக்குத் தக்க கைம்மாருகுமோ? இனி இப்படி அசட்டுத்தனமாய்ச் சச்சரவு செய்துகொள்ளாதேயுங்கள், அப்பா! எங்கே இனி உங்களுக்குள் வருத்தமில்லை யென்பதற்கு அடையாளமாக ஒருவரோடொருவர் கைகுலுக்குங்கள், பார்ப்போம்!" என்றார்.

டாக்டர் க்ரே பேசி முடியும் வரையில் இருவரும் வெட்கித் தலைகுனிந்து நின்றார்கள். அவர் பேசி முடிந்ததும், ஹார்ட்லி தன் வலது கையை நீட்டிக்கொண்டு ரிச்சேர்டையணுகினன். ரிச்சேர்டு க்ஷணநேரம் தியங்கிப் பிறகு அவன் கையைப் பிடித்துக் குலுக்கினன்.

அதைப்பற்றிப் பிறகு பேச்சே வரவில்லையெனினும், அவ்விருவரும் தொழில் விஷயமாக அவசியமாகக் கலந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் மட்டும் ஒருவரோடொருவர் கலந்துகொண்டும், அத்தியாவசியமிருந்தாலன்றி ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமலும் காலங்கழிக்கத் தொடங்கினர்கள்.

அகரு.—'அவரு' எனவும் பெயருண்டு. கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாவில் காணும் கிருஷிகர் வகையினர். தொழில்: வெற்றிலை, காய்கறிகள் உற்பத்திசெய்து விற்பது. பாஷை: ஒரியா கலந்த தெலுங்கு. விஜயநகரத்துக்குச் சமீபித்த நெல்லிமெர்லாவில் அகரு ஜாதியார் பலருளர். ஸ்திரீ, புருஷர் இருவரும் வெற்றிலைப் பயிர் செய்வர். ப்ரௌடா விவாகந்தான் பெரும்பாலும் வழங்குவது. ஒரியப் பிராம்மணர்கள் நடத்தி வைப்பர். இவர் இறந்தோர்களைத் தகனம் செய்வர்.

மார்க்கண்டேயன்

MARKANDEYA

(180-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வளவு மண்ணை லிங்கமென்று பிடித்து அதில் பாலை யபிஷேகமென்று கொட்டுவான்; கண்ணிலகப்படும் புஷ்பங்களையெல்லாங் கொணர்ந்து, ஏதேதோ மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்கிறானும், எந்தத் தின்பண்டமோ, பழமோ கிடைத்தாலும் ஸ்வாமிக்கு நைவேத்தியஞ் செய்துவிட்டுத்தான் தின்கிறான்; இருக்கிற விபூதியை யெல்லாம் வாரிப் பூசிக் கொள்ளுகிறான். அடேயப்பா! அவன் பூஜை செய்கிறேனென்று உட்கார்ந்துவிட்டால் கையிலகப்படும் எல்லாப் பாத்திரங்களையும் சுற்றிப் பரத்திகொண்டு; பெரிய வேடிக்கையது.

ம்ருக:—ப்ராணகாந்தே! அவனை யென்னவென்று நினைத்தாய்! சிவகடாக்ஷத்தால் பிறந்த குழந்தையல்லவா? சிவபக்தனாகவே ஆவன்: நான் பூஜை செய்வதை நித்யம் பார்த்துக்கொண் டிருக்கிறானல்லவா? அதிருக்கட்டும்; குழந்தை வயது ஏழு, உபநயனமாகிவிட்டது, இன்னும் நம்மிடத்திலேயே வைத்துகொண்டிருப்பது தகாது. செடியை வளைக்கலாமே தவிர, மரத்தை வளைக்க முடியாது. ஆதலாற்றான், ‘இளமையிற் கல்’ லென்னும் மூதுரை விளங்குகிறது. நீ யெப்பொழுதும் போல் இனித் தடை சொல்லாதே, நாளைக்கே நமது குழந்தையை குருகுலவாஸஞ் செய்யும் பொருட்டு வித்யாஸாகரரிடம் ஒப்புவிக்கப் போகிறேன்.

மருத்:—ப்ராணபதி! தங்கள் அபிப்பிராயத்திற்கு மாறாக நானென்ன சொல்லப் போகிறேன், நமது ஏகபுத்திரனைப் பிரிந்திருக்க வேண்டுமே யென்ற கவலையும், நமது குழந்தையினருமையறியாத ஆசார்யராயிருந்தால் அவரிடம் ஹிம்ஸைப் படுவானோ என்ற கலக்கமுந் தவிர, எனக்கவன் கல்லாத மூடனாகவே யிருக்கவேண்டு மென்னுங் கருத்தல்ல. ஆனால் நாதா! ரொம்ப நாள் செல்லுமோ குழந்தை திரும்பிவர.

ம்ருக:—(தனிமை) ஹா! இவள் இதற்கே இவ்வளவு கவலைப்படுகிறாள்! இவளிடம் குழந்தைக்குப் பதினாறே வயதென்று சொல்லாமலிருந்ததால், நான்மனோவியாதியோடிருக்கிறேன். இல்லாவிட்டால் இவள் அதைக்கேட்ட அன்றைக்கே நடைபிணமாகி விடுவாள். ஹா!—ஜகதீசா!—இந்த குழந்தை—மார்க்கண்டேயனைப் பதினாறு வயதில்—(பெருமூச்சு) இழக்கப் போகிறேனென்று தெரிந்தும், நானுமொரு மனிதனைப்போல் உலாவுகிறேனே! (கண்ணீர் வடித்தல்) என்ன என் கல் நெஞ்சு!—எல்லாமவன் செயல்!

மருத்:—ப்ராண நாதா! என்ன திடீரென்று உங்கள் முகம் ஒரு மாதிரியாய்விட்டது.

ம்ருக:— ஒன்றுமில்லை........உனக்கு தைர்யஞ் சொல்லுகிறேனே தவிர எனக்கும் குழந்தையைப் பிரிவதில் கொஞ்சம் ஆற்றாமைதான். ஆனாலும் நாம் இப்படிக் கலங்குவது நமது குழந்தைக்கு க்ஷேமக்குறைவு.

கல்வியே கருந்தனம். ‘கண்ணுடைய தென்பர்
கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாத
[வர்

கல்வியில்லாதவன் செல்வனாயிருந்தாலும் மன்மத சுந்தரனா யிருந்தாலும் அவனை உலகம் மதிக்காது. பாபபுண்யங்களைப் பகுத்தறியும் விவேகமில்லாதவனாய் விடுவதால் பரலோகத்திலும் நற்கதி கிடையாது.

தந்தை மகர் காற்று முதவி அவையத்து
முந்தியிருப்பச் செயல்.

என்ற என் கடமையைச் செய்யத்தவறின் பழிச்சொல்லுக்கும், பாபத்திற்கும் நானும் ஆளாவேன். ஆதலால் ஸதி! நம் குழந்தை கல்வி கற்று முடியுமட்டும் அவனை நாம் பிரிந்திருப்பதே தர்மம்.

மார்க்கண்டேயன்-புழுதியனைந்த மேனியும் பல்வகை விளையாட்டுக் கருவிகளுமாய் ப்ரவேசம்.

மார்:—அப்பா! நேக்குப் பூஜைக்கு மணிவாங்கித் தரேன்னேளே! எங்கே!

ம்ருக:—வாங்கித் தரேன்; இங்கே வா!(மடியில்வைத்துக்கொண்டு) உடம்பெல்லா மென்ன புழுதி! இருக்கட்டும், நீ புஸ்தகம்—புஸ்தகம்னு கத்தினையே. வாத்யார் கிட்டப்போய் வாசிக்கிறயோ?

மார்:—நீங்கதான் பொஸ்தகம் வாங்கித் தரமாட்டேங்கரயளே அம்மா சாதம் போடு. நான் பள்ளிக்கூடத்துக்குப் போரேன்.

ம்ருக:—அப்பா! நாளைக்கு நல்லநாள். நான் போய் அவரைப்பார்த்துச் சொல்லிவிட்டு—(ப்ரியே குழந்தையை உள்ளே அழைத்துக்கொண்டு போ!)—இதோ வருகிறேன்.

அங்கம் II — களம் மூன்று

பாடசாலை. மாணவர்கள் விளையாடிக் கொண்டிருத்தல்

தத்தன்:—அடே! நீலகண்டா? இன்றைக்கென்னடா வாத்யாரின்னும் வரவில்லை.

நீலகண்டன்:—தெரியாதோ உனக்கு: இன்றைக்கு நமக்கு காப்பரிசியுண்டு; கற்கண்டு வாழைப் பழம் எல்லாங் கிடைக்கும்.

கோவிந்தன் :—அடே, நானுங் கேழ்விப் பட்டேண்டா! ம்ருகண்டுரிஷி பிள்ளை மார்க்கண்டேயனை இன்னைக்கி வாசிக்க வைக்கப்போராளாம். மேளதாள மெல்லாங் தடபுடல் படாது. அங்கே தான் வாத்யார் போயிருப்பார்.

சட்டாம் பிள்ளை :—அந்தப் பயலேயா வாசிக்க வைக்கப் போறது இன்னைக்கு. அவன் என்ன சும்மா மண்ணை யெல்லாம் லிங்கமாய் பிடித்து வைத்துக் கொண்டு கண்ட பூவையெல்லாங் கொண்டுவந்து, அதுமேலே போட்டு மூடி, ஆத்திலே அவம்மா கொடுக்கற பக்ஷணங் களையெல்லாம் நைவேத்தியம் பண்ணிக்கிண்டு, மணியை அடிச்சுக்கிண்டு திரியருன். அவனென்னத்தை வாசிச்சுப் பெறட்டப் போருன். எந்தக் கோயிலுக்காவது குருக்களாக யனுப்ப லாம். அதுக்கு ரொம்ப லாயக்கு.

லம்போதரன் :—(பணியாரந் தின்று கொண்டே ஓடிவந்து) அடே! பசங்களா! என்ன? எனக்குத் தெரியாமல் பக்ஷணங்களை யெல்லாம் தின்னூட லாம்னு நெனச்சுண்டளோ —சட்டாம்பிள்ளே! என்னது! 'பக்ஷணம் அம்மாகுடுத்தாளாம்—நேத்தைக்கி; அதை மணி அடிச்சுச்கிண்டு போயிட்டானும், இன்னு சொல்லிக்கிண்டு இருந்தையே என்னடாது; எனக்கில்லையா?

சட்டாம் :—அடே லம்போதரா! உனக்கு யாராவது தீனிகொடுத்து முடியுமா? ஆரெதைப் பேசினாலும், பணியாரத்தைப்பற்றிப் பேசாதாய் நெனச்சுக்கிறே! தெருவிலெது வித்தாலும் பட்டாணிக் கடலேன்னு—அவங்கிட்டெல்லாம் சண்டைபோடரே; கோயிலுக்கு வந்தா வினியோகம் வினியோகம்னு எல்லாரையும் பாத்து கத்தரே. எப்போபாத்தாலும் எந்தரம் அரைக்கராப்பிலே வாயை மொல்லாதுதானு வேலே?.

லம்போ :—அடே! நீலகண்டா! கோவிந்தா! எல்லாரும் வாங்கோ. நானொரு பலகாரங் கொண்டு வந்திருக்கேன். இதோ பார்த்தயா? (மடியிலிருந்து எடுத்து கையில் மூடிவைத்துக் கொண்டு) என்ன தெரியுமா?

தத்தன் :—அதுதானே! எங்களுக்குத்தான் தெரியுமே நீ மொச்சகொட்டை தின்னி—இன்னு;

கோவிந் :—அடே! தத்தா! ஸமாசாரங் கேட்டையா? நேத்தைக்கு இவன் ஏதோ ஒரு பையிலேவைச்சுக்கிண்டு—ஒத்தருக்கும் தெரியாமே தின்னுக்கிண்டிருந்தான். அதை நான் மொள்ள வாங்கிப்பாத்தேன்; குண்டு குண்டா யிருந்தது; மிட்டாய் திங்கானேன்னு எடுத்துப்பாத்தா —எல்லாம் போன வருஷத்துப் புளியங் கொட்டை; அதிலே பாதி சொத்தை; பாதிலே பூச்சி; எல்லாத்தையும் வாயிலே போட்டுண்டு செக்கு மாதிரி அரைக்கராண்டா!

தத்தன் :—(எல்லோருடன் கலகலவென்று சிரித்து) இவன் தொந்தரவைப் பார்த்துத்தான் போலேயிருக்கு—இவாத்து கொல்லே முழுக்கப் புளிய மரம் நட்டுப் பயிர் பண்ணிருக்கார் அவப்பா; அவாத்துக் கூடம் நிறைய புளியங்கொட்டைச் சாக்கு அடுக்கி இருக்கே எதாவதுவ்யாபாரம்பண்ணரான்னுன்னு நெனச்சேன். அப்படியா ஸமாசாரம்? அவாதான் என்ன பண்ணுவாள்; பாவம்! என்ன பக்ஷணம் பண்ணினாலும் கொழந்தை லம்போதரனுக்குக் கொடுத்து மிஞ்சித் தாங்கள் திங்கர சேதி கிடையாது.

நீல :—அதிருக்கட்டும்; என்னமோ மடீலே வெச்சுகிண்டு மொச்சு மொச்சுனு திங்கருனே. அதென்னன்னு பார்ப்போம்; அடே லம்பா! எங்களுக்கில்லையாடா? கொஞ்சங்குடோ!

லம் :—ஊஙு—ஊங், உங்களுக்கு வயத்தெப் பசிச்சா இப்படி பேசுவேளா? என் பசி எனக்குத் தெரியும்.

கோவி :—அது என்னன்னு நாங்க பார்க்கக் கூடப் படாதா? (பிடித்திழுக்க)

லம் :—ஐயோ! பசி பிச்சுக்கிண்டு போரதே! என்னடாது பகல் கொள்ளை! (என்று சத்தமிட—மடியிலிருந்து புளியங்காய் கீழே விழ)

நீல :—பேஷ்! நல்ல பக்ஷணம்! வீட்டிலிருக்குங் கொட்டை போராதுன்னு எந்தப் புளியமரத்தையோ ஒழிச்சுக் காயெல்லாம் கட்டிண்டு வந்திருக்காண்டா! (எல்லோரும் நகைத்தல்)

சட்டாம் :—ஸ், ஸ். பசங்களா! பாடத்தை ஒரு தரம் எல்லோரும் சொல்லுங்கள். நமது குரு வருந் தருணமாகிவிட்டது!

கோவி :—இவனொருத்தன் எப்பொ பாத்தாலும் பாடம் பாடம்ன்னு தொந்தரவு பண்ண வந்தூடுவன்.

லம்போ :—வயறு பசிக்கிறது; எம் பணியாரத்தை யெல்லாங் கொட்டி விட்டயள்; சட்டாம் பிள்ளை! தடியாம் பிள்ளை! எம் பக்ஷணத்தை கொடுத்தாத் தான் நான் பாடஞ் சொல்லுவேன்; இல்லாட்டா தெரியும்.

சட்டா :—அடே! லம்பா! உன் தொந்தரவே தொந்தரவு! இந்த ஒரு பாடத்தை மட்டும் சொல்லி விட்டுப் பிறகு நீ யெப்படியாவது தொலே! எல்லோருஞ் சொல்லுங்கள்! மூஷிகவாஹன. எல்லோரும்—மூஞ்சூறு வாஹன.

லம் :—(இரைந்து) ஆனைவாஹன! குதிரைவாஹன

சட்டா :—இதேதடா தறுதலைகள்! விநாயக நமஸ்தேஸ்து!

லம் :—விளையாடப் போகவேணும்.

248377
சென்னை-600 008

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

பம்பாய் சர்வகலைக் கழகத்தில் கட்டாய இராணுவப் பயிற்சிப் பிரேரேபணை:—கல்வி யிலாகா மந்திரியாயிருந்த டாக்டர் ஆர். பி. பராஞ்சுபை, பம்பாய் சர்வகலைக் கழகத்தில் பி. ஏ., பி. எஸ். ஸி., முதலிய டிகிரி பரீக்ஷைகளில் பரீக்ஷிக்கப்பட விரும்புவோர்கள் தாங்கள் இந்திய தேசச்சேனையில் இராணுவப் பயிற்சி யடைந்ததாகவோ அல்லது சர்வகலைக் கழகத் துருப்புகளின் தலைமை உத்தியோகஸ்தரால் அதற்குச் சமானமானதென்று ஒப்புக் கொள்ளப்பட்ட வேறுவிதமாக அப்பயிற்சி அடைந்ததாகவோ, அல்லது சரீரத்தைப் பற்றிய முகாந்திரங்களினால் தாங்கள் இராணுவப் பயிற்சிக்கு ஒருநாளும் தக்கவரல்ல வென்றோ ஒரு சாட்சிப்பத்திரம் கொண்டுவந்தாலன்றிப் பரீக்ஷைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென்று அக்கழகத்தின் நிர்வாக சபையான ஸினேட்டில் ஒரு பிரேரேபணை கொண்டுவந்தார். படிப்பவர்களுக்கு இராணுவப் பயிற்சி ஏற்பட்டால், அதனால் அவர்கள் குணமும் தேகமும் மேன்மை யடையுமென்றும், கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்கும் வழக்கம் அவர்களுக்கு ஏற்படுமென்றும், வருங்காலத்தில் இந்திய சேனைகளுக்கு இந்திய உத்தியோகஸ்தர்களையே நியமிக்கவேண்டி வருமாகையினாலும் உத்தியோகஸ்தர்கள் ஸ்தானங்களைத் தகைமையுடன் வகிக்கத் தக்கவர்கள் கழகத்தில் டிகிரி பரீக்ஷைகளில் தேர்ச்சியடைபவர்களே யாதலாலும், அவர்களுக்கு இராணுவப் பயிற்சி தரவேண்டியது அத்தியாவசியமென்றும் மற்றும் பல விஷயங்களையும் சொல்லி தமது பிரேரேபணையின் அவசியத்தை எடுத்துக் காட்டினார். ஆனால் பலர் இராணுவப் பயிற்சி அவசியமில்லை யென்றும், தேகப்பயிற்சி யிருந்தால் போது மென்றும், நமது வாலிபர்கள் மனத்தில் இராணுவக் கிளர்ச்சி உண்டாகும்படி செய்யாதவரையில் அவர்களுக்கு இராணுவப் பயிற்சிகொடுப்பது பயனைத் தராதென்றும், தேசத்தைக் காக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் படித்தவர்களை ஓர் இராணுவ வகுப்பாகச் செய்வது தேசத்துக்குப் பெருங் கெடுதியை விளைவிக்குமென்றும் மற்றும் பலவிதமாகவும் சொல்லி ஆக்ஷேபித்தார்கள். 35 பேர்கள் அந்தப் பிரேரேபணைக்கு ஆதரவாகவும், 36 பேர்கள் அதற்கு விரோதமாகவும் வோட் செய்ய, அந்தப் பிரேரேபணை விழுந்துபோயிற்று.

* * *

குழந்தைகள் யோகினிக்கதைகள் படிக்கலாமா?:—பால் பான்ஸ் பீல்டு என்னும் ஓர் சீர்திருத்தக்காரர் "சர்வவல்லமையுள்ள தான்" என்னும் புத்தகத்தில் குழந்தைகள் யோகினிக் கதைகள் படிப்பதைக் கண்டித்து எழுதுகிறார். சாதாரணமாய் வழங்கும் யோகினிக் கதைப் புத்தகங்களைக் குழந்தைகளிருக்கும் இடத்திலிருந்து அகற்றிவிட வேண்டும். ஏனெனில் அவைகளைப் படிக்கும்போது குழந்தைகள் முற்றிலும் கற்பனையாயும் சம்பவிப்பது அசாத்தியமாயும் விசித்திரமாயுமுள்ள நிலைமைகளிற் போய்ச் சேரும் கதாநாயகன் அல்லது கதாநாயகி தானேயென்று பாவித்துக் கொள்ளுகிறார்கள். சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள அற்புதங்களை அமைத்தாவது அல்லது கீர்த்திபெற்றவர்களது ஜீவியசரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டாவது எழுதப்படும் கதைகளில் குழந்தைகளுக்கு ருசியுண்டாக்குவதற்கு வேண்டிய இடமிருக்கிறது. ஏனெனில், விசித்திரத்தை நோக்கின் அக்கதைகள் கிரிம் எழுதிய யோகினிக்கதைகளில் எதற்கும் சமானமானதாக இருக்குமேயெனினும், அக்கதைகளிலுள்ள விஷயங்கள் உண்மையாகவே நடந்தவைகளாதலால், அவர்கள் படித்த விஷயங்கள் பொய்யென்றும், உண்மையாகவே சம்பவிக்கக் கூடாதவைகளென்றும் குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் போதிக்கவேண்டிய அவசியமிராது. அப்படிப்பட்ட கதைகளைப்படிப்பதனால், விநோதத்தை நாடும் சுபாவமுள்ள குழந்தைகளின் மனத்தைத் திருப்தி செய்வதுடன், அவர்கள் அசாத்தியமான காரியங்கள் சாத்தியமென்று எண்ணுவதற்கு இடந்தராமல், உலகத்தில் சாதாரணமாய் நடக்கும் சம்பவங்களுக்கு வெகு தூரத்திலுள்ளவைகளும் உண்மையாகவே நடந்தவைகளுமான அற்புத சம்பவங்களை நன்கு அறிய முயலுவதில் அவர்கள் தங்கள் கற்பனா சக்தியை உபயோகப்படுத்தி அபிவிருத்தியடையச் செய்வதற்கும் இடங்கொடுக்கிறது.

அமிருதாஞ்சனம்

1925 **காலண்டர்** **1925**

3 கலர் ஆப்டோன் படத்துடன் விலை 2 அணா. தபால் சார்ஜ் 3 அணா

மொத்த வியாபாரிகளுக்கு மாத்திரம்

100–காப்பிகள் விலை ரூபா 10–8–0   1000–காப்பிகள் விலை ரூ. 90–0–0

குறிப்பு :—கொஞ்சம் பிரதிகளே கிடைக்கும்.

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்க்கும் ஸித்தௌஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா நான்கு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டைக் குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்லைதச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிருர்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உ்பயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை தூரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1	0	0	வி. பி. தபால் செலவு ரூ.			0	5	0	பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2	10	0	,,	,,	,,	0	14	0	,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனல் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினல், அவர்கள் முயற்சிக்கு ஏமாருமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.